பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 வைகாசி 25 சனிக்கிழமை (08.06.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 171

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும் 100 வித சாதாரண போட்லாண் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

# உடனடித் தீர்வு சாத்தியமற்றது

## இந்தியக் குழுவிடம் ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

தமிழர்களின் குறைகளைத்தீர்க்கும் நிறைவான அரசியல் தீர்வொன்றை உடனடியாக வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்ய முடியாது எனவும் அது ராஜபக்ஷ - சம்பந்தன் ஒப்பந்த மாக அமையக் கூடாதென்றும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

(19ஆம் பக்கம் பார்க்க)

## 15 கிலோ குண்டு நேற்று மீட்பு

(மட்டகளப்பு)

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முதியோர் இல்ல வீதியிலிருந்து வெடிக்காத நிலையில் 15 கிலோ எடையுள்ள குண்டு ஒன்று நேற்று காலை மீட்கப்பட்டுள்ளது.

குறித்த முதியோர் இல்ல வீதியில் பொது மக் கள் சிரமதான பணியில் ஈடுபட்டுகொண்டிருந்தபோது வெடிக்காத நிலையில் குண்டு கிடப்பதை கண்டு

(19ஆம் பக்கம் பார்க்க)

## தீர்வுக்கான 'மந்திரக்கோல்' இந்தியாவிடம் இல்லை!

(கொழும்பு)

யுத்தத்தினால் பாதிக்கப் பட்ட மக்களுக்கு தேவை யான அடிப்படை வசதிகளை செய்து தரமுடியுமே தவிர, அரசியல் பிரச்சினைகளை தீர்த்துவைக்க முடியாது.

அரசியல் தீர்வுக்கான மந்திரக்கோல் இந்தியா விடம் இல்லை என்று இந்திய தூதுக் குழு தமிழ்மக்களுக்கு தெரிவித் ததாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

வடக்கில் சமூகப் பிரதிநிதி களை அவர்கள் சந்தித்த போது இவ்வாறு தெரிவித்ததாக வும் அந்த செய்தியில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

தூதுக்குழுவின் தலை வரான பாரதீய ஜனதா கட்சியன் சிரேஷ்ட உறுப்பினர் ரவிசுஙகா பரசாத், வடக்கில் உள்ள தமிழ மக்களுக்கு அடிபபடை உதவி கள் அவசிய மானவை என் றும் அதை செய்துதர இந்தியா

(19ஆம் பக்கம் பார்க்க)

## சுயாதீன ஆணைக்குழுக்கள் வடக்கிற்கு அவசியம் - மங்கள

(கொழும்பு)

வடக்கு மாகாணசபைத் தேர்தலுக்கு முன் அரசாங் கம் அங்கு பொலிஸ், தேர்தல் மற்றும் சுயாதீன ஆணைக் குழுக்களை ஸ்தாபிக்க வேண் டும் அவ்வாறில்லாவிட்டால் பொதுநலவாயத்திடம் நாம் முறையிடுவோம் என ஐக்கிய தேசிக் கட்சியின் பாராளு மன்ற உறுப்பினர் மங்கள சமரவீர எச்சரித்தார்.

இராஜகிரியவில் நேற்று வெள்ளிக்கிழமை இடம் பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி யன் ஊடகவியலாளா மாநாட டில் கலந்துகொண்டு கருத் துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு எச்

(19ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா.குழுவிலிருந்து நீதவான் விலகல்!

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் விசா ரணைக் குழா மொன்றி லிருந்து இலங்கை நீத வான் ஒருவர் விலகிக் கொண்டுள்ளார்.

தென் சீன கடல் தொடர்பில் சீனாவிற்கு எதிராக பிலிப் பைன்ஸ் செய்த முறைப் பாட்டை ஐந்து பேர் அடங்கிய ஐக்கிய நாடுகள் நீதவான் குழாமொன்று விசாரணை நடத்தி வருகின்றது.

இந்த விசாரணை களில் இருந்து விலகிக்

(19ஆம பக்கம் பாரக்க)

## லோகினியின் நிலை என்ன?



(கான்பெரா)

புகலிடம் கோரிச் சென்ற இலங்கை பெண் ஊடகவிய லாளர் ஒருவரின் நிலைமை தொடர்ந்தும் கேள்விக் குறி யாக அமைந்துள்ளது என ஊடகவியலாளர்களை பாது காக்கும் அமைப்பு சுட்டிக் காட்டியுள்ளது.

பெண் தொலைக்காட்சி ஊடகவியலாளரான லோகினி ரதிமோகன் என்பவருக்கே இவ்வாறு தமது எதிர்காலம் பற்றிய கேள்விகள் எழுந்துள் ளன.

அவுஸ்திரேலியாவில் புகலிடம் பெற்றுக் கொள்ளும் நோக்கில் படகில் சென்ற குழு ஒன்றில் ஊடகவியலாளர் லோகினியும் அடங்கியி ருந்தார்.

குறித்த படகு விபத்துக் குள்ளானதன்னைத் தொடர்ந்து படகில் பயணித்தவர்கள் டுபா யில் அடைக்கலம் பெற்றுக் கொண்டனர்.

இவ்வாறு தற்காலிக அடிப் படையில் புகலிடம் பெற்றுக் கொண்டவர்களில் ஒரு தொகு

(19ஆம் பக்கம் பார்க்க)

### சிறுமி மீது துஷ்பிரயோகம்

## இராணுவச் சிப்பாய் நேற்று அடையாளம் காட்டப்பட்டார்

(வவுனியா)

வவுனியா நெடுங்கேணியில் 7 வயது சிறுமி பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்ட சம்பவத்தில் சம்பந்தப்பட்ட சந்தேக நபரை, பாதிக்கப்பட்ட சிறுமி நேற்று நீதி மன்றத்தில் அடையாளம் காட்டியுள்ளதாகப் பொலிஸார் தெரிவிததுள்ளனர்.

கடந்த மாதம் 14 ஆம் திகதி நெடுங்கேணி சேனைப்பில வில் பாடசாலைக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பக்காத்திருந்த இந்தச் சிறுமி அடையாளம் தெரியாத ஒருவரால் கடத்திச் செல்லப்பட்டு பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட் டுள்ளாள்.

பின்னர், பாழடைந்த கிணறு ஒன்றுக் அருகில் உள்ள பற்றைக்குள்ளிருந்து இந்தச்

(20ஆம் பக்கம் பார்க்க)

## குடும்பஸ்தர் விபத்தில் பலி

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளும் துவிச்சக்கர வண்டியும் விபத துக்குள்ளானதில் குடும பஸ்த்தர் ஒருவர் பலியாகி யுள்ளார்.

இச் சம்பவம் கடந்த 31-ம திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு புதுக்குடியிருப்பு கைவேலி பாடசாலைக்கு முன்பாக இடம் பெற்றிருந்தது.

இதில் சுகந்திரபுரம் உடையார் கட்டினை

(19ஆம் பக்கம் பார்கக)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி கௌரவிக்கின்றோம்



**மைக்கேல் முத்து**
**நிக்சன் கொலின்**
அவர்கள் கடந்த 06.06.2013
குருத்துவப்பட்டம் பெற்று
08.06.2013 அன்று
புன்னாலைக்கட்டுவன் புனித
இராயப்பர் தேவாலயத்தில் முதல்
திருப்பலி பூசையை ஒப்புக்
கொடுக்க உள்ளமையைப் பாராட்டி
கௌரவிக்கின்றோம்.

குப்பிளான் தெற்கு,
புன்னாலைக்கட்டுவன்.

அறிவொளி ச.ச.
நிலையமும்,
கிராமத்து மக்களும்.

(2968)

# மரண அறிவித்தல்

## அமரர் புதுநாயகம் தேவராசா அவர்கள்



துன்னாலை மத்தி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.தேவராஜா புதுநாயகம் அவர்கள் 2013.06.06 வியாழக்கிழமையன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற குமரேசு-சின்னம்மா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற தேவராஜாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, சிவயோகம், உருக்குமணி, கந்தசாமி, மனோன்மணி, வீரவாகு, வெற்றிவேல், வடிவேல் மற்றும் செந்திவேல் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கௌரி (அதிபர்-யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), வசந்தி ஆகியோரின் பாசமிகு தாயாரும் சேதுராஜா (அதிபர்-யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்) சிவசேகரம் (Ruhbins Building Constructors) ஆகியோரின் அன்பு மாமியாரும் வருண்பிரசாந் (பொது வைத்தியசாலை, வவுனியா), மாளவிகா (MedSource - Colombo), மெக்ஷிபாரதா (Malabe Medical College), ரூபின்பிரகாஷ் (மாணவன்-யா/ஹாட்லிக்கல்லூரி), ஞானகலா (செட்டிகுளம் ஆதார வைத்தியசாலை), தனராஜ் (ITN) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.


அன்னாரின் ஈமைக் கிரியைகள் அவரது இல்லத்தில் 2013.06.06 அன்று பி.ப. 4.00 மணிக்கு இடம்பெற்று உடல் தியான்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அன்னார் சுகவீனமுற்றிருந்தவேளை அன்னாருக்கு அக்கறையோடு சிகிச்சையளித்த யாழ் போதனா வைத்தியசாலை வைத்தியர்கள், தாதியர்கள், பணியாளர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

குடும்பத்தினர்.

(சி-3541)

# மரண அறிவித்தல்



## சூசைமுத்து அந்தோனிப்பிள்ளை

**(திரவியம்)**

(ஓய்வு பெற்ற பாடசாலை அதிபர்)

போயிட்டி இளவாலையைப் பிறப்பிடமாகவும் சக்கோட்டை அல்வாயை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சூசைமுத்து அந்தோனிப்பிள்ளை வெள்ளிக்கிழமை (07.06.2013) கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி சூசைமுத்து மரியம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற செல்வரத்தினம் பாக்கியம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் திருமதி றோசலின் அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற திரு. திருமதி மடுத்தீன் ஆரோக்கியம் அவர்களின் அன்பு மருமகனும் இந்திரா (சக்கோட்டை), கனடாவில் வசிக்கும் பிள்ளைகளான ரஞ்சன், சித்திரா, றாஜு, மீரா, றவி, சுபத்திரா ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், அருளப்பு, அன்ரன், புளோறிடா, மணிவண்ணன், றதி, சாந்தி, ஜோன்சன் ஆகியோரின் அருமை மாமனாரும் ராஜேஷ், தினேஷ், சோபியா, மிரியம், மேர்பி, சாம், ஜமுனா, ஜெனாதன், சார்ள்ஸ், கிஷோர், சங்கரி, அஞ்சலி, அரசன், அழகி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார். அன்னாரது பூதவுடல் திங்கட்கிழமை (10.06.2013) கனடாவில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சக்கோட்டை அல்வாய்
026.3204140

(சி-3542)

தகவல்: மகள் குடும்பத்தினர்

# வீடு விற்பனைக்கு

வெங்கடேசா வீதி
யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள புதிய வீடு 1 1/2 பரப்பு விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 075 7100884

(2971)

# பிள்ளையார் இன்

25% கழிவு

இன்றுமுதல் அதி விசேட 25% விலைக்கழிவுடன்
தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில்
நிறைவான சேவையுடன் காலை, மாலையில் வழங்கப்படும்.

இன்றைய விசேட உணவு :-

பூரி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ 120/-
சப்பாத்தி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ 120/-

தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

(சி-3499)

**வலம்புரி**
**விளம்பர தொடர்புகளுக்கு**
தொ.பே. : 021 321 0815, 021 567 1540
E-mail : valampurii@yahoo.com,
valampurijaffna@gmail.com


சுன்னாகத்தில்
மங்களகரமான ஆரம்பம்

# Nalin City Showroom

(காட்சியறை மற்றும் சேவைநிலையம்)

**09-06-2013**
உங்கள் அனைத்து
கணினித் தேவைகட்கும் நாடுங்கள்.

NALIN Information Technologies Pvt Ltd.
**116-G, K.K.S Road, Chunnakam.**
**Phone no- 0212242222 Hotline - 0777140431**




## பொமரேனியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

பூச்சி நீக்கப்பட்ட கறுப்பு, வெள்ளை குட்டிகள் உண்டு. எமது பாமில் ஒட்டி உற்பத்தி செய்யப்பட்ட றோஸ் கன்றுகளும் அதற்குரிய மருந்துகளும் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு : கிருஷ்ணா றோஸ் பாம்**
தலங்காவல் பிள்ளையார் வீதி.
திருநெல்வேலி மேற்கு.

(2964)

# பாராட்டி வாழ்த்துகின்றேன்



எங்கள் அண்ணன் அங்கஜனே
இதயம் வெல்லும் இனியவனே
இளமை கொண்ட துடிப்பாலே
சேவை என்னும் பொறி கொண்டே
சேவகனாய் இங்கு உதித்தவனே
மக்கள் தேவை மனமறிந்து
சமுர்த்தி என்னும் நியமனத்தால்
வாழ்வில் ஒளி ஏற்றியவனே
இளைஞர் பலம் உனக்குண்டு
முதியோர் பலமும் உனக்குண்டு
சேவையே என் வேலையென
செயல் திறன் கொண்டு நிற்பவனே
நின் பணி இப்பாரினிலே
நீண்ட காலம் ஒளி தருமே
உளமார வாழ்த்துகின்றோம்
உன் பணி உயரவே
நாம் என்றும் துணை நிற்போம்.

திரு. மதன்
இணுவில் [2974] சமுர்த்தி நியமனம் பெற்றவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## மனச்சுமை!

வைத்தியர் ஒருவர் இராணுவத்தில் இணைந்து வேலை செய்து கொண்டிருந்தார்.

போர் முனையிலே காயப்பட்ட வீரர்களுக்குச் சிகிச்சை அளிப்பது அவருடைய வேலையாகும். எல்லோரிட்த்திலும் மிகவும் அன்பாக நடந்து கொள்வார். தன்னிடம் வருகிற நோயாளிகளை மிக விரைவில் குணப்படுத்தி அனுப்பி வைத்து விடுவதில் வல்லவராக இருந்தார்.

அப்படி குணமாகிச் செல்கின்ற வீரர்களை இராணுவத் தலைமை மறுபடியும் யுத்த முனைக்கு அனுப்பி வைத்து விடுவது வழமையான ஒன்றாகி இருந்தது.

ஒருமுறை இளம் போர் வீரன் யுத்த முனையில் காயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியரிடம் வந்தான்.

அவருக்கு திருமணம் முடியவில்லை. யுத்த முனையில் நின்றபடியால் அவருடைய தோளிலேயும் தொடையிலேயும் குண்டுகள் பாய்ந்திருந்தன.

வைத்தியர் மிகவும் கவனமாக அந்தக் குண்டுகளையெல்லாம் சத்திரசிகிச்சை மூலம் வெளியே எடுத்தார். காலப்போக்கில் அந்த இளைஞன் குணமடைந்தான்.

அவன் அங்கிருந்து போகும் போது வைத்தியரிடம் "இப்போது நான் மறுபடியும் போர் முனைக்கு போகிறேன். சிறிது நாட்கள் சென்ற பின்பு விடுப்பு எடுத்துக்கொண்டு எனது சொந்த ஊருக்குப் போகிறேன். எனது தாயார் எனக்குத் திருமண ஏற்பாடு செய்துள்ளார். ஊருக்குப் போய் திருமணம் செய்து வர வேண்டும்!" என்று உற்சாகத் தொனியில் கூறினார்.

வைத்தியரும் மிகவும் மகிழ்ச்சியாகத் தன்னுடைய நல்வாழ்த்துக்களைக் கூறி இளைஞனை வழி அனுப்பி வைத்தார்.

சிறிது நாட்கள் சென்ற பின் அவருக்கு ஒரு செய்தி கிட்டியது.

அச்செய்தி என்னவெனில் சிகிச்சை பெற்ற "இளைஞன் போர் முனையில் இறந்துவிட்டான். என்பதாகும். இந்த செய்தியைக் கேட்டதும் வைத்தியர் மிகவும் கலங்கிப் போனார். சிறிது சிந்திக்க ஆரம்பித்தார்.

"நான் குணப்படுத்துகிறேன் என்பதை விட மறுபடியும் அந்த யுத்த வீரர்கள் மரணத்தை சந்திப்பதற்கு துயார்படுத்துகின்றேன் என்பதுதான் பொருத்தம்" என்று நினைத்துக் கவலைப்பட்டார்.

தன்னிடம் வந்து குணமடைந்து செல்கிற வீரர்கள் எல்லோரும் போர் முனையில் இறந்துவிடுவதாக அடிக்கடி அவருக்கு செய்தி வர ஆரம்பித்தது.

அவரால் சிறிதுகூட தாங்க முடியவில்லை. அதனால் அவர் இராணுவத்தை விட்டு விலகினார்.

சில நாடுகளுக்குச் சுற்றுலா செல்ல ஆரம்பித்தார். அவ்வேளையில் தற்செயலாக ஒரு ஜென் குருவைச் சந்தித்தார். அவருடன் சில நாட்கள் தங்கியிருந்தார். அந்தக் காலப்பகுதியில் அவருக்கு ஒரு தெளிவு ஏற்பட்டது. யோசித்துப் பார்த்தார். இந்த உலகத்திலே பிறந்த எல்லா உயிர்களும் ஒரு நாள் சாகப் பிறந்தவர்கள்தான். ஆனால் ஒன்று மட்டும் தெளிவாக இதிலிருந்து விளங்கிக் கொள்ள முடிகிறது. இவர்கள் முன்ன பின்ன சாகிறார்கள் என்பது தான்.

"எனது கடமை மருத்துவ சிகிச்சை வழங்குவது தான். தேவையற்ற எண்ணங்களை சுமப்பதற்கல்ல!" இப்படி ஒரு தெளிவு அவருக்கு ஏற்பட்டது.

அதன் பின் நேராக குருவிடம் சென்று விடை பெற்றார். மீண்டும் இராணுவத்தில் இணைந்தார். தனது களப்பணிகளை வழமை போல ஆரம்பித்தார்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# காலாவதியான உணவுப் பொருட்கள் விற்பனை யாழ்ப்பாணத்தில் அதிகரிப்பு

## சட்டநடவழிக்கை தொடரும் என்கிறது பாவனையாளர் அ.அ.சபை

(யாழ்ப்பாணம்)

காலாவதியான உணவுப் பொருட்களை விற்பனைசெய்த 10 வர்த்தகர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து சாவகச்சேரி நீதவான் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது என யாழ்.மாவட்ட பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையின் சிரேஷ்ட அதிகாரி என். சிவசீலன் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் யாழ்.மாவட்ட பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையினால் 12 வர்த்தகர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ள ப்பட்டது.

இதன்போதே சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீதவானினால் காலாவதியான பொருட்களை விற்பனை செய்த வர்த்தகர்களுக்கு எதிராக மேற்படி தீர்ப்பு வழங்கப்பட்டது.

அத்தோடு வழக்கு விசாரணைக்கு சமுகமளிக்காத வர்த்தகர் ஒருவருக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டதோடு உணவல்லாத காலாவதியான பொருட்களை விற்பனை செய்த மற்றுமொரு சந்தேகநபருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

இதேவேளை, மேற்படி அதிகார சபையினால் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் 13 வர்த்தகர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்காக நேற்று முன்தினம் எடுத்துக் கொள்ளப்பட்ட போது நீதவானால் 9 வர்த்தகர்களுக்கு தலா 9 ஆயிரம் ரூபாவும் சமுகமளிக்காத 4 வர்த்தகர்களுக்கு பிடியாணையும் பிறப்பிக்கப்பட்டது.

உணவுப்பொருட்கள் காலாவதியான பின்பும் விற்பனை செய்தமை, பொதி செய்யப்பட்ட உணவுப்பொருட்களில் முடிவுத்திகதி பொறிக்கப்படாமை, பொறிக்கப்பட்ட முடிவுத்திகதியை மாற்றியமைத்தமை போன்ற பல குற்றச்சாட்டுக்கள் மேற்படி வர்த்தகர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்டிருந்தன.

இதுதவிர கடந்த 5 ஆம் திகதி மல்லாகம் நீதவான் நீதிமன்றின் அதிகார சபையினால் வர்த்தகர் ஒருவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

அண்மைக்காலங்களாக யாழ்.மாவட்ட பாவனையாளர்கள் அதிகார சபையினால் பல வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டதாகவும் இதில் காலாவதியான உணவுப் பொருட்கள் விற்பனை செய்தவர்களே அதிகம் எனவும் நுகர்வோருக்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் பொருட்களை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

## முச்சக்கரவண்டி தடம் புரண்டதில் குடும்பஸ்தர் படுகாயம்

வடமராட்சி கிழக்கு நாகர் கோயில் பகுதியில் முச்சக்கரவண்டி தடம் புரண்டதில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்திருந்த நிலையில் சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். நாகர்கோவில் பொன்னியடி வீதியூடாக முச்சக்கரவண்டியில் பயணித்துக் கொண்டிருந்த போது வேகக்கட்டுப்பாட்டை இழந்து மரத்துடன் மோதி தடம் புரண்டதில் இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் தலையிலும் கழுத்திலும் படுகாயமடைந்த நிலையில் ஆழியவளை வடபகுதியை சேர்ந்த ம. பிரபாகரன் (வயது 28) என்பவரே இவ்வாறு படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.(அ-3-24)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 30 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 120 | 120 | 100 |
| தக்காளி | 120 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 40 |
| கோவா | 140 | 100 | 120 |
| கரட் | 150 | 120 | 160 |
| பூசணி | 40 | 40 | 40 |
| புடோல் | 40 | 60 | 60 |
| வாழைக்காய் | 40 | 60 | 40 |
| சின்ன வெங்காயம் | 190 | 140-200 | 120-160 |
| பெரிய வெங்காயம் | 70 | 80 | 80 |
| பாகற்காய் | 100 | 120 | 80 |
| வெண்டிக்காய் | 70 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 70 | -- | 100 |
| பயற்றங்காய் | 60 | 60 | 40 |
| லீக்ஸ் | 140 | 160 | 140 |
| பீற்றூட் | 80 | 120 | 100 |
| கறிமிளகாய் | 120 | 120 | 160 |
| முருங்கைக்காய் | 300 | 400 | 320 |
| போஞ்சி | 160 | 120 | 140 |
| கத்தரிதம்புள்ள | 20 | 30 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 30 |
| தேசிக்காய் | 150 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 40 | 30-40 |
| இராசவள்ளி | 100 | 120 | 120 |

## இராசி பலன்

08.06.2013
(வைகாசி 25, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு
அமாவாசை முன்னிரவு 9.33 மணிவரை
ரோகினி முன்னிரவு 8.28 மணிவரை
இராகுகாலம் 8.52-10.22 மணிவரை
சுபநேரம் 2.52-4.22 மணிவரை
அமாவாசை விரதம்

**மேடம்** தொழில் முன்னேற்றமுண்டு, பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ் வீர்கள், தன்னம்பிக்கையும், துணிவும் அதிகரிக்கும், வார்த்தைகளில் நிதானம் தேவை.

**இடபம்** பல நாட்களாக பார்க்காமல் இருந்த உறவினர்கள் ஒருவரை சந்தித்து மகிழும் வாய்ப்புண்டு, தொழில் நலன் கருதி பயணம் ஒன்றை மேற்கொள்வீர்கள், திட்டமிட்ட காரியமொன்றில் திடீர் திருப்பங்கள் ஏற்படலாம்.

**மிதுனம்** குடும்ப பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, தொழிலில் கூடுதல் பொறுப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, புதிய நட்பால் பொருள் விரயங்கள் ஏற்படலாம்.

**கடகம்** விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், காரிய அனுகூலமுண்டு, குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், வருமானம் அதிகரித்து வளம் காணும் நாள், புகழ் கூடும்.

**சிங்கம்** தொழில் நிமித்தம் புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும், சொன்ன சொல்லை காப்பாற்றி மகிழ்வீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவமொன்று இடம் பெறலாம்.

**கன்னி** நண்பர்களுக்குள் நிலவிய கசப்புணர்வு நீங்கும், பெண் தெய்வ வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், சாமர்த்தியமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், பயணங்களில் பலனுண்டு.

**துலாம்** விட்டுக் கொடுத்துச் செல்வதால் வெற்றிகள் கிடைக்கலாம், சில பிரச்சினைகளை கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, பயணங்களின் போது விழிப்புணர்ச்சி தேவை, போசன நன்மையுண்டு.

**விருச்சிகம்** பாடுபட்டதற்கு ஏற்ப பலன் கிடைக்கும், தொழில் நலன் கருதி புதிய நபர்களை சேர்த்துக் கொள்வீர்கள், பிறரிடம் ஒப்படைத்த பொறுப்பு மீண்டும் உங்களிடமே வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**தனுசு** கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்கு செய்ய முன்வருவீர்கள், உடல் நலம் சீராகி உற்சாகம் அடைவீர்கள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், தொழில் மேன்மையுண்டு.

**மகரம்** மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்பால் தொழில் முன்னேற்றம் காண்பீர்கள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், பிள்ளைகளால் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்.

**கும்பம்** பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், பெற்றோர் மீது பிரியம் காட்டுவீர்கள், வாகன சுகமுண்டு, மனதில் இனம் புரியாத சிந்தனைகள் தோன்றும், சுப காரிய செலவுகள் அதிகரிக்கும்.

**மீனம்** பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரும், முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள், உறவினர் வழியில் உதவிகள் வந்து சேரலாம்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவையற்று நடமாடிய நபருக்கு எதிராக விளக்கமறியல்

(கரவெட்டி)

லண்டனில் இருந்து வந்த நபர் ஒருவர் வடமராட்சி தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் வைத்து சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.


லண்டனில் இருந்து இருபது வருடங்களுக்குப் பின் தனது சொந்த இடமான கோண்டாவிலுக்கு திரும்பிய தம்பிப்பிள்ளை ஜெகதீஸ் (வயது 42) என்ற நபர் கடந்த புதன்கிழமை இரவு 10.45 மணியளவில் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் வைத்து ரோந்துப் பணியில் ஈடுபட்ட வல்வெட்டித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

குறித்த நபர் அதிகளவான பணத்துடன் தேவையற்ற நேரத்தில் சந்தேகத்திற்கு இடமான வகையில் நடமாடியதே பொலிஸாரின் குற்றச்சாட்டாகும்.

குறித்த நபரை நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.


வழக்கை விசாரித்த நீதவான் குறித்த நபரை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

(அ-3-24)




நன்றி: ஐலண்ட்

# நியமனங்கள் வழங்கப்பட்டன



வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியினால் 16 பேருக்கு நியமனக் கடிதங்கள் நேற்று அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டது. நியமனதாரர்களின் அடிப்படையில் வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் கீழ் இயங்கும் கூட்டுறவுத் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் 7 பேருக்கும் தொழில்துறை திணைக்கள நெசவு போதனாசிரியர் 7 பேருக்கும் உள்ளூராட்சி திணைக்கள சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் 2 பேருக்குமாக 16 பேருக்கு நியமனக் கடிதங்கள் ஆளுநரால் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் வட மாகாண பிரதம செயலர் ஆர்.விஜயலட்சுமி, வடமாகாண ஆளுநர் எஸ்.இளங்கோவன், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் எஸ்.வரதீஸ்வரன், வடமாகாண தொழில்துறை திணைக்களப் பணிப்பாளர் எஸ்.சிவகரன், வடமாகாண கூட்டுறவு ஆணையாளர் திருமதி ப.வசந்தகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர். (படம்:- என்.குமார்)

# சிறுவர் இல்லத்திலிருந்து தப்பித்த மூன்று சிறுமிகளில் இருவர் மீட்பு

(யாழ்ப்பாணம்)

கைதடியிலுள்ள சிறுவர் இல்லமொன்றிலிருந்து 3 பெண் பிள்ளைகள் தப்பிச் சென்றுள்ளனர் என யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.சி.எம்.எம்.ஜெப்றி தெரிவித்துள்ளார்.

தப்பிச் சென்ற மூன்று பெண் பிள்ளைகளில் இருவர் மீட்கப்பட்டுள்ளதாகவும் ஒரு வரை இதுவரை (நேற்று) காணவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

கடந்த மாதம் 23 ஆம் திகதி இரவு வேளையில் கைதடியில் உள்ள சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் தங்கியிருந்த 3 பெண் பிள்ளைகள் தப்பிச் சென்றுள்ளனர்.

இவ்வாறு தப்பிச் சென்ற பெண்களில் இருவர் 21 வயதுடைய யுவதிகள் எனவும் மற்றொருவர் 15 வயதுடைய சிறுமி எனவும் அத்தியட்சகர் குறிப்பிட்டார்.

இவர்களில் 15 வயதுடைய சிறுமி சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்களினால் இனங்காணப்பட்டு வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

மற்றொரு பெண்ணான 21 வயதுடைய யுவதி கொழும்பு பேருந்தில் ஏறி தப்பிச் சென்று இடையில் இறங்கி முல்லைத்தீவு பிரதேசத்தில் தங்கியிருக்கும்போது சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்களால் இனங்காணப்பட்டு நேற்று முன்தினம் சிறுவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளார்.

இந்நிலையில் குறித்த தப்பிச் சென்றவர்கள் சம்பந்தமாக விசாரணைகளை ஆரம்பிக்குமாறு சிறுவர் நீதிமன்றம் பொலிஸாருக்கு பணித்துள்ளது.

நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் தாம் முதற்கட்ட விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் தப்பிச் சென்ற 3 பெண் பிள்ளைகளும் குற்றம் புரிந்தமை காரணமாகவே நீதிமன்றத்தால் ஏற்கனவே சிறுவர் நன்னடத்தை இல்லத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர் என அத்தியட்சகர் தெரிவித்தார்.

(அ-4)

# மண்டான் 2 ஆம் குறுக்குத்தெரு வீதியை புனரமைக்குக

(கரணவாய்)

ஜே/349 கரணவாய் மேற்கு மண்டான் கிராமத்தில் அமைந்துள்ள 2 ஆம் குறுக்கு வீதி மிக மோசமான நிலையிலும் புனரமைக்கப்படாதுள்ளதாக பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ்வீதியால் தினமும் விவசாயிகள் உட்பட பல நூற்றுக்கணக்கானோர் பயணிக்கின்றனர்.

குன்றும் குழியுமாக இவ்வீதி காணப்படுவதால் விபத்துக்களை எதிர்கொள்ள வேண்டிய அவல நிலை உள்ளது.

எனவே, துறைசார்ந்த அதிகாரிகள் இவ்விடயத்தை கவனத்தில் கொண்டு உடன் நடவடிக்கை எடுத்து வீதியை புனரமைத்து போக்குவரத்திற்கு உதவ வேண்டுமென பயணிகள் வேண்டுகோள் ஒன்றை முன்வைத்துள்ளனர். (அ-3-60)

## தாச்சி சுற்றுப் போட்டியும் பரிசளிப்பு விழாவும்

(கரவெட்டி)

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டு சங்கம் நடத்தும் 17 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட தாச்சி சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சண்டிலிப்பாய் உதயசூரியன் விளையாட்டுக் கழக மைதானத்தில் யாழ்.மாவட்ட தரச்சி சங்கத் தலைவர் க.தயாளன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி எஸ்.மோகனதாஸ், கிருபா லேணர்ஸ் உரிமையாளர் அ.கிருபாகரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இறுதிப் போட்டியில் பண்டத்தரிப்பு சந்தை விநாயகர் அணியை எதிர்த்து ஆலடி சிந்து ஏ அணி மோதவுள்ளது. (அ-3-24)




# கட்டாக்காலி மாடுகளால் தொல்லை

(கரணவாய்)

நெல்லியடி முருகமூர்த்தி வீதியில் அமைந்துள்ள தோட்டங்களில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லை அதிகரித்துள்ளதாக தோட்ட உரிமையாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதனால் தோட்ட உரிமையாளர்கள் பாரிய நட்டத்தை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

நேற்று முன்தினமும் ஒரு மாடு பிடிக்கப்பட்டு வட்ட விதானையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எனவே, கட்டாக்காலி மாடுகளை கட்டுப்படுத்தி வளர்க்குமாறு தோட்ட உரிமையாளர்கள் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (அ-3-60)

# தேசிய அ.அ. பெறுவதற்கான நடமாடும் சேவை இன்று

(நல்லூர்)

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பவ்ரல் அமைப்பினால் தேசிய அடையாள அட்டை பெறுவதற்கான நடமாடும் சேவை இன்று சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணி வரை கோப்பாய் பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நடமாடும் சேவையில் பதிவாளர் திணைக்கள அதிகாரிகள் கலந்து கொண்டு பிறப்புச் சான்றிதழ், திருமணச் சான்றிதழ் வழங்குவதுடன் இதுவரை தேசிய அடையாள அட்டை பெறாதவர்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படவுள்ளன.

இதில் 31 கிராம சேவையாளர் பிரிவுகளை சேர்ந்தவர்கள் கலந்து கொண்டு பயன்பெறவுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிலும் செவ்வாய்க்கிழமை ஆவரங்கால் சிவசக்தி மணி மண்டபத்திலும் நடத்தப்பட்ட நடமாடும் சேவையில் ஆயிரத்துக்கு மேற்பட்டோருக்கு அடையாள அட்டை பெற்றுக் கொடுப்பதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.(அ-3-134)

# இளையோருக்கான தொழிற்பயிற்சி

(தும்பளை)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும் இலங்கை செஞ்சிலுவை சங்கமும் இந்திய அரசின் நிதி உதவியுடன் பருத்தித்துறை பிரதேச செயலக மட்டத்தில் இளைஞர்களுக்கான தொழிற்பயிற்சி ஒன்றினை நடத்தவுள்ளது.

இதில் மரவேலை, மேசன் வேலை ஆகிய தொழிற் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

தொழிற்பயிற்சிக் காலத்தின் போது பயிற்சி பெறுபவர்களுக்கு கொடுப்பனவுகளும் வழங்கப்படவுள்ளன.

மூன்று மாத கால இப்பயிற்சி நிறைவடைந்ததும் அவர்களுக்கு உரிய வேலைகள் பெற்றுக் கொடுக்கப்படும் என பருத்தித்துறை இளைஞர் சேவைகள் மன்ற உத்தியோகத்தர் கோகுலராஜா தெரிவித்துள்ளார். (அ-3-19)

# சைவ சன்மார்க்க வித்தியின் பரிசளிப்பு விழா

(சுன்னாகம்)

ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலயத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் செல்வி. ந.பிரதா தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்.கல்வியியற் கல்லூரி பீடாதிபதி சதாசிவம் அமிர்தலிங்கம், சிறப்பு விருந்தினராக சுன்னாகம் மக்கள் வங்கியின் பொது முகாமையாளர் திருமதி மு.சியாமளா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ்விழாவின் ஆசியுரையினை சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோவில் பிரதம குரு சிவஸ்ரீ சர்வேஸ்வர ஸ்ரீகாந்த குருக்கள் ஆற்றவுள்ளார். (அ)

# சாரணிய பாசறை

(மல்லாகம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் சாரணியப் பொறுப்பாசிரியர் அமரர் வீ.ஜெகதீஸ்வரன் ஞாபகார்த்தமாக மத்திய கல்லூரியின் சாரணிய அணியினால் நடத்தப்படவுள்ள சாரணியப் பாசறை நிகழ்வு இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

இச் சாரணியப் பாசறை நிகழ்வில் மத்திய கல்லூரியின் சாரணிய அணியைச் சேர்ந்த 65 சாரணிய மாணவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக மீனவர்களின் பிரச்சினையில் மத்திய அரசு தலையிட வேண்டும்

## ஜெயலலிதா மன்மோகனுக்கு கடிதம்



(சென்னை)

**இலங்கை கடற்படையினரால் கைது செய்து சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுவிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் மன்மோகன்சிங்கை தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா கேட்டுக் கொண்டுள்ளார். இது தொடர்பாக பிரதமருக்கு நேற்று கடிதம் ஒன்றை அவர் எழுதி அனுப்பி வைத்துள்ளார். அவர் எழுதியுள்ள கடிதத்தில்,**

**49 தமிழக மீனவர்கள் சிறைபிடிப்பு**

இர்ராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த 24 மீனவர்கள் கடந்த புதன்கிழமை 5 படகுகளில் மீன்பிடிக்கச்சென்ற போது அவர்களை தலைமன்னாரில் வைத்து இலங்கைக் கடற்படையினர் கைது செய்து வைத்துள்ளனர்.

பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேபோல் கடந்த வியாழக்கிழமை இராமேஸ்வரம் மீனவர்கள் 25பேர் 5 படகுகளில் மீன்பிடிக்கச் சென்ற போது இலங்கைக் கடற்படையினர் அவர்களையும் சிறைபிடித்து ஊர்காவற்றுறை யில் வைத்து விசாரித்து வருகின்றனர்.

மேலும் நடுக்கடலில் மீன் பிடித்துக்கொண்டிருந்த தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் துரத்திச் சென்று விரட்டியடித்துள்ளனர். அந்த மீனவர்கள் தமிழக கடற்பகுதியில் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர்.

**மீனவ மக்கள் கொந்தளிப்பு**

இலங்கை கடற்படையினரால் அடிக்கடி கொடுமைக்கும் தாக்குதலுக்கும் உள்ளாகும் அப்பாவித் தமிழக மீனவர்களின் நிலைமை குறித்து தங்களுக்கு தொடர்ந்து கடிதங்களை வேதனையுடன் எழுதி வருகிறேன்.

இந்தப்பிரச்சினையில் மத்திய அரசின் செயலற்ற தன்மை மற்றும் அக்கறையின்மை காரணமாக இலங்கை கடற்படையினரின் அத்துமீறிய செயல்கள் தொடர்ந்து கொண்டேயிருக்கின் றன.

இந்தத் தாக்குதல் மற்றும் அத்துமீறிய செயல்களின் விளைவாக தமிழக மீனவர் கள் தங்களுடைய பாரம்பரியம் மிக்க பகுதிக ளில் மீன்பிடிக்கமுடியாத நிலையேற்பட்டுள்ளது. இதனால் மீனவசமுதாய மக்கள் மத்தியில் ஒரு கொந்தளிப்பான சூழல் நிலவு கிறது.

அப்பாவித் தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படை யினரால் தொடர்ந்து தாக்குதல்களுக்கும் கொடுமைகளுக்கும் உள்ளாக்கப்பட்டு கைது செய்யப்படும் சம் பங்களுக்கு முற்றுப்புள்ளி வைக் கும் வகையில் நிரந் தரத் தீர்வை எட்டு வதற்காக தூதரக ரீதி யில் எந்த வித நெரு க்கடியையோ அழுத் தத்தையோ மத்திய அரசு இதுவ ரையில் எடுக்கவி ல்லை.

**உடனடியாக நடவடி க்கை எடுங்கள்**

பாக்ஜலசந்தி பகு தியில் மீன்பிடிக்கும் அப்பாவித் தமிழக மீனவர்கள் மீது தொடர்ந்து தாக்கு தல் நடத்தி அவர்களை சட்டவி ரோதமாக கடத்தி கொடூர செயல்களில் இலங்கைக் கடற்படையினர் ஈடுபட்டுவரும் சூழலில் டில்லி யில் உள்ள அந்த நாட்டின் தூதரை அழை த்து வெளியுறவுத்துறை அமைச்சகம் கண்ட னம் தெரிவிக்க உரிய அறிவுறுத்தல்களை வழங்க வேண்டும்.

அப்பாவி தமிழக மீனவர்கள் சிறைபிடிக்கப்பட்டு இருப்பதற்கு இந்திய அரசாங்கம் தனது கடும் கோபத்தை இலங்கை அரசுக்கு தெரிவிப்பதுடன் இது போன்று அப்பாவித் தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்துவதை தடுத்து நிறுத்துவதையும் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் முதல்வர் ஜெயலலிதா கேட்டுக் கொண்டுள்ளார். (அ-2)


தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

கடிதங்கள் · அன்பளிப்பு பொருட்கள் · உடுபுடவைகள்

CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-021222 5392

WESTERN UNION MONEY TRANSFER

(C-3199)


# முல்லை கல்வி வலயத்தில் ஆசிரியர் பற்றாக்குறை

(முல்லாவி)

முல்லை கல்வி வலயத்தின் கீழ் உள்ள பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக மாணவர்களுடைய கல்வி நிலை பாதிக்கப்படுவதாக மாணவர்களது பெற்றோரும் சமூக ஆர்வலர்களும் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் தெரியவருவது, முல்லை கல்வி வலயத்தின் கீழ் உள்ள 63 பாடசாலைகளில் மக்கள் மீள்குடியேற்றத்தின் பின்னர் 59 பாடசாலைகள் இயக்கத் தொடங்கியுள்ளன.

மூன்று கல்விக் கோட்டங்களை கொண்ட இக் கல்வி வலயத்தில் 19 ஆயிரத்து 239 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர்.

இந்நிலையிலேயே ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது.

ஆரம்பக்கல்வி ஆங்கில பாடத்திற்கு 48 ஆசிரியர்களும் இடைநிலைப்பிரிவில் கணித பாடத்திற்கு 11 ஆசிரியர்களும் விஞ்ஞான பாடத்திற்கு 30 ஆசிரியர்களும் ஆங்கில பாடத்திற்கு 13 ஆசிரியர்களுமாக மொத்தம் 102 ஆசிரியர்களுக்கு வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

இங்குள்ள மாணவர்கள் வன்னியில் இடம் பெற்ற போர் நடவடிக்கை காரணமாக பாதிக்கப்பட்ட நிலையில் கல்வி ஒன்றே மூலதனம் என எண்ணி கல்வி கற்று வருகின்றனர்.

இவர்களில் பெரும்பான்மையானோர் பாடசாலை கல்விகளை மட்டுமே நம்பி இருக்கின்ற வறிய குடும்பங்களை சேர்ந்த மாணவர்களாவர்.

எனவே பல்வேறு இடர்களுக்கு மத்தியில் வாழ்வாதார உதவிகள் எதுவும் இன்றி மீள் குடியேறியுள்ள எங்களுக்கு சொத்தாக உள்ள எங்கள் பிள்ளைகளின் கல்வி நிலையை வளப்படுத்துவதற்கு ஆசிரியர்களை நியமித்துத் தர வேண்டுமென கல்வித் துறை சார்ந்த அதிகாரிகளுக்கு பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களின் பெற்றோரும் சமூக ஆர்வலர்களும் கோரிக்கை ஒன்றை முன் வைத்துள்ளனர். (அ-3-15)


உடனடி வேலை வாய்ப்பு

(Walk in interview)

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் பிரபல கல்வி நிறுவனத்திற்கு கீழ்க்காணும் பதவி வெற்றிடத்திற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

Front Office Staff (Female)

தகைமை:
- G.C.E (A/L) உடன் மேலதிக தகைமை
- Computer Knowledge
- ஆங்கில அறிவு

Walk in interview

திகதி: *09-06-2013* நேரம் : *10am to 03.30pm*
இடம் : Prince City Campus
*No.275, Clock Tower Road, Jaffna.*

தொடர்புகட்கு :
Human Resources Manager
Prince City Campus
No 31-1/1, 42nd Lane, Colombo -06
hrm.prince@gmail.com 077 59 49 272
(சி-3539)


# அன்பு வாசகர்களே!



நயினை நாகபூசணி அம்மன் பாமாலைக்கு உங்கள் ஆக்கங்களை

**பிரதம ஆசிரியர்**
**வலம்புரி**
**இல.3,2 ஆம் ஒழுங்கை**
**பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.


இவர்களுக்கு மணமகள் தேவை · கல்யாண மாலை · இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1981 இந்து (Pa)<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா : 28.75 5இல் சூ,செவ்<br>தகைமை/தொழில்: BA ஆசிரியர்<br>தொ.இ:B1929 | பிறப்பு: 1984 இந்து(Na)<br>நட்சத்திரம்: திருவோணம்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: A/Lதையல் Diploma<br>தொ.இ:G1959 |
| பிறப்பு: 1971 இந்து(V)<br>நட்சத்திரம்: மகம் 4<br>உயரம்: 5'6"<br>கி.பா:28<br>தகைமை/தொழில்:A/L, கடை (Electrical)<br>தொ.இ:B1933 | பிறப்பு: 1988 இந்து(V)<br>நட்சத்திரம்: அவிட்டம் 4<br>உயரம்: 5'5"<br>கி.பா:52, 7இல் செவ்<br>தகைமை/தொழில்: UK (PR)<br>தொ.இ:G1965 |
| பிறப்பு: 1980 இந்து(V)<br>நட்சத்திரம்: கார்த்திகை 2<br>உயரம்: 5' 6"<br>கி.பா: 22.5<br>தகைமை/தொழில்:BA Manager UK<br>தொ.இ:B1941 | பிறப்பு: 1971 இந்து (விஸ்வகுலம்)<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 3<br>உயரம்: 5'4"<br>தன்கமை/தொழில்: A/L<br>விவாகரத்தானவர்<br>தொ.இ:G1966 |
| பிறப்பு: 1978 இந்து (V)<br>நட்சத்திரம்: பூரம்<br>உயரம்: 5' 4"<br>கி.பா :72, 7இல் செவ்<br>தகைமை/தொழில்:A/Lசாரதி NGO<br>தொ.இ:B1942 | பிறப்பு: 1986 இந்து(V)<br>நட்சத்திரம்: மூலம் 1<br>உயரம்: 5'7"<br>கி.பா : 7தகைமை/தொழில்:<br>பட்டதாரி முகாமைத்துவ உதவியாளர்<br>தொ.இ:G1967 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடைபெறுகின்றது சிற்பக்கலையின் யாழ்ப்பாணத்து இமயம்

அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது

சிலர் பிறக்கும் போதும் இறக்கும் போதும் மனிதனாகவே இருந்து விடுகின்றனர். ஆனால் சிலரோ பிறக்கும்போதும் இறக்கும்போதும் கலைஞனாகவே இருந்து விடுகின்றனர்.

கலை வாழ்விலிருந்தும் கலைஞர்களிடமிருந்தும் இன்று கலைத்தாய் கண்ணீர் வடிக்க இறுதி விடைபெறும் சிற்பச் செல்வனே உமதுகலைத்திறனைஎங்கே? எப்போது பார்க்கப் போகின்றோம். யாரும் எதிர்பாராத விதமாகக் காற்றிலே கலந்து வந்தது அதிர்ச்சிச்செய்தி. ஆம், அதுதான் சிற்பக்கலையின் யாழ்ப்பாணத்து இமயம் கலாபூஷணம் ஏ.வி.ஆனந்தனது மரணச் செய்தி.

இவர் மல்லாகம் குளமங் காலை பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும்-கொண்ட கலைஞானத்தினை பரம்பரையாக தனது தந்தை வழியான யாக்கோபு அண்ணாவியார் அவர்களிடம் கற்றுக்கொண்டவர்.

ஆடல், பாடல், கூத்து நாடகம் எனப் பலகலைகளிலும் வல்லுநரான இவர் சிற்பக் கலையினூடாகவே உலகறியுப்பட்டவராவார். யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றத்தினுடைய ஆரம்பகால அங்கத்தவராக இணைந்து கொண்டது முதல் இறக்கும்வரை கலைக்காகவே வாழ்ந்த உன்னதமான கலைஞன்.

அகஸ்ரின் வேதானந்தன் என்ற இயற்பெயருடைய இவர் தன்னை கலையுலகில் ஏ.வி.ஆனந்தன்என்றேஅடையாளப்படுத்தி வந்தார். 1944 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 23ஆம் திகதி பிறந்த இவர் தொழில் முதல்வனாக தனது வாழ்க்கையை ஆரம்பித்திருந்த போதிலும் கலைகள் மீது அவர் கொண்டிருந்த பற்று அளவிடமுடியாதது.

இவர் ஒரு படவரைஞர், மரத்தால் உருவங்களை சிற்பமாகச் செதுக்கும் அற்புதச் சிற்பி என்கின்ற வகிபாகமுடையவராயினும் சிற்பக் கலையிலேயே தன்னை ஆழமாக அர்ப்பணித்து பல சாதனைகளையும் வரலாற்றுப் பதிவுகளையும் ஏற்படுத்தி எளிமையாக வாழ்ந்தவர். யாழ்ப்பாணம், திருகோணமலை, கண்டி, கொழும்பு மற்றும் ஐரோப்பிய நாடுகளிலும் தனது மரச்சிற்ப படைப்புக்களை காட்சிப்படுத்தி எல்லோரதும் பாராட்டுக்களையும் பெற்றவர்.

வேப்பமரத்தில் செதுக்கப்பட்ட ஆனந்த கணபதி, வாகை மரத்தில் செதுக்கப்பட்ட நாதஸ்வரக் கச்சேரி, கல்வாகையில் செதுக்கிய கமக்காரன், சீமைநூக்கில் செதுக்கிய ஏழையும் தோழனும், காவற்காரன், குழந்தை இயேசுவும் மாதாவும் குறிப்பிடத்தக்க படைப்புக்களாயினும் பனை மரத்தினால் செதுக்கப்பட்ட மாபெரும் புறப்பாடு என்ற சிற்ப ஆவணம் ஜேர்மன் மியூசியத்திலும் வைத்து பாதுகாக்கப்படுவது பெருமைக்குரிய விடயமாகும்.

கலைக்காட்சியகத்தில்இடம் பெற்றுள்ளதுடன் வத்திக்கான் அரும்பொருட்காட்சியகத்திலும் வைத்துப் பாதுகாக்கப்படுவது பெருமைக்குரிய விடயமாகும். எல்லாவற்றிற்கும் மேலாக சுனாமியின் அழிவுகளை எட்டடி உயரமும் பத்தடி சுற்றளவும் கொண்ட மரத்தில் சிற்பமாக வடித்து ஆவணப்படுத்தியவர். ஜேர்மனி, பிரான்ஸ், நெதர்லாந்து, சுவிட்சர்லாந்து, லண்டன் ஆகிய மேலைத்தேய நாடுகளில் தனது சிற்பக்கண்காட்சிகளை பலமுறை பல இடங்களில் நடத்தியவர்.

1997ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் பொது நூலகத்தின் கேட்போர் கூடத்தில் ஜப்பானிய தூதுவராலய அனுசரணையுடன் நடைபெற்ற சிற்பக் கண்காட்சியில் இவரால் எழுதப்பெற்ற மும்மொழி நூல்களான கலைச் சுவடுகள் (தமிழ்), கலாசட்டகான (சிங்களம்), வூட்ஸ்கல்ப்ரர் (ஆங்கிலம்) வெளியிடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இவருடைய கலை வெளிப்பாட்டுத்திறனை போற்றும் வகையில் திருமறைக் கலாமன்றத்தினால் சிற்பச் செல்வன், வலிகாமம் வடக்கு கலாசாரப்பேரவை கலைச்சுடர், கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கலாபூஷணம், வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஆளுநர் விருது போன்ற பல்வேறு உயர் விருதுகள் வழங்கிப் போற்றப்பட்டதுடன் இவருடைய தொழில் முயற்சிகளைப் பாராட்டி ஜனாதிபதியால் கில் பகர்மாந்த என்ற விருதும் வழங்கப் பெற்ற நமது நாட்டின் மூத்தபடைப்பாளிகளில் ஒருவர்.

மா.அருள்சந்திரன்
மாவட்ட கலாசார உத்தியோகத்தர்,
மாவட்டச் செயலகம்,
கிளிநொச்சி

# குருமன்காட்டில் விபத்து; ஒருவர் காயம்



(குருமன்காடு)

வவுனியா குருமன்காட்டில் நேற்று இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா- மன்னார் வீதியில் அமைந்துள்ள குருமன்காடு சந்திக்கு அருகாமையில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இளைஞன் ஒருவன் சிக்னல் போடாமல் மோட்டார் சைக்கிளை திருப்பியபோது பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் 45 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ-3-250)

# கேப்பாப்பிலவு வீதியை புனரமைத்து தாருங்கள்

புதுக்குடியிருப்பு கேப்பாப்பிலவு வீதி பல வருடங்களாக புனரமைப்புச் செய்யப்படாமல் உள்ளது. இவ் வீதி குன்றும் குழியுமாக காணப்படுவதால் போக்குவரத்தை மேற்கொள்ள சிரமமாக உள்ளது என மக்கள் விசனம் தெரி வித்துள்ளனர்.

தற்போது இவ்வீதியில் இலங்கை விமானப் படையினர் உயர்பாதுகாப்புவலயம் அமைத்துள்ளனர்.

முல்லைத்தீவை நோக்கி நாட்டின் பல பிரதேசங் களுக்கும் செல்வோர் புதுக்குடியிருப்பு கேப்பாபிலவின் கிரவல் போடப்பட்ட வீதியினையே அதிகம் பயன்படுத்துகின்றனர்.

அத்துடன் அண்மையில் வற்றாப்பளை கண்ணகி அம்மன் திருவிழாவின் போது இவ் வீதியில் சன நெரிசல் அதிகமாக இருந்ததுடன் மக்கள் போக்குவரத்தை மேற்கொள்வதில் பல இன்னல்களுக்கும் முகங் கொடுத்துள்ளனர்.

இந்நிலையில் பரந்தன் முல்லைத்தீவை இணைக்கும் பிரதான வீதியான ஏ-35 வீதியின் புனரமைப்பு பணிகள் இன்னும் சில மாதங்களில் முடிவடையவுள்ளது. ஆனால் கேப்பாப் பிலவு வீதியை இதுவரை யாரும் கவனிக்கவில்லை.

எனவே முக்கிய வீதிக ளில் ஒன்றாகவுள்ள கேப்பாப்பிலவு வீதியை அபிவிருத்தி திட்டத் தின் கீழ் கொண்டு வந்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கையெடுத்து புனரமைக்க வழி கோரு மாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-260)

# ஊடக ஒழுக்கக் கோவையை ஊடக சட்டமாக கருதாதீர்

ஊடக ஒழுக்கக் கோவை ஊடகங்களைக் கட்டுப்படுத்தும் சட்டம் அல்ல. அது ஊடகங்களுக்கான வழிகாட்டல் மட்டுமே ஆகும். சிறந்த ஊடக கலாசாரத்தை ஏற்படுத்தவே இது தயாரிக்கப்பட்டுள்ளது. இதனை விரும்பினால் பின்பற்றலாம். இன்றேல் விடலாம் என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அமைச்சர் மேலும் குறிப்பிடுகையில், ஊடக ஒழுக்கக் கோவையை முறையாக தயாரிக்க சகல தரப்பினரதும் ஒத்துழைப்புடன் முன்னெடுக்க வேண்டும். இது தொடர்பில் ஊடக நிறுவனங்களுடனும் ஊடகவியலாளர்களுடனும் இணைந்து ஆராயப்பட்டது.

இது தொடர்பில் தயாரிக்கப்பட்ட சட்டமூலம் அமைச்சின் ஆலோசனைக்குழுவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சகல கட்சிகளும் இது தொடர்பில் கருத்து முன்வைக்கலாம். இது சட்டமல்ல.

ஊடக அதிகார சபையொன்றை அமைப்பது தொடர்பான சட்டம், சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. ஊடகங்கள்எவ்வாறுசெயற்படவேண்டும் என்ற வழிகாட்டலே இவற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன. பொறுப்புடன் செயற்படும் ஊடகங்களைப் போன்று வேறு ஒழுங்குப் பத்திரத்தின்படி செயற்படும் ஊடகங்களும்உள்ளனபத்திரிகைபேரவை உள்ள போதும் இதனூடாகஊடகங்களுக்குஎச்சரிக்கைக்கடிதம் மட்டுமே விடுக்க முடியும் என கூறிய அமைச்சர், சிறந்தஊடக கலாசாரமொன்றை ஏற்படுத்த முயன்று வருகிறேன் என்றும் குறிப்பிட்டார். (அ-2)



உலக சுற்றாடல் தினத்தையொட்டி பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி உதவியுடன் கிளிநொச்சி மாவட்ட துரித மீட்சித் திட்டம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் அண்மையில் சுற்றாடல் தினம் கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வில் விழிப்புணர்வு கருத்தரங்கு, மரங்கள் நாட்டுதல், சுற்றாடல் பாதுகாப்பு சிரமதானம், கூட்டெரு தயாரித்தல்.(கழிவு பொருட்களைக் கொண்டு) ஆகிய நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

மீள் எழுச்சி கிராமங்களில் இயங்கும் கிராம அபிவிருத்தி அமைப்புக்கள் மற்றும் தலைமைச் செயலகம் மற்றும் திணைக்களங்களில் இந்நிகழ்வு தொடர்ந்து ஒருவாரம் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# கடை உடைத்து பொருட்கள் திருட்டு

(குருமன்காடு)

வவுனியா கொறவப் பொத்தானை வீதியில் உள்ள பல சரக்குக் கடையினை உடைத்து 5 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, வவுனியாவில் அண்மைக்காலமாக வியாபார நிலையங்கள், வழிபாட்டிடங்கள் மற்றும் வீடுகளில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதுடன் மக்களிடையேயும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

(அ-3-250)

# உலங்கு வானூர்தி அவசர தரையிறக்கம்

(கொழும்பு)

கொழும்பில் இருந்து முக்கிய விமானப் படை அதிகாரிகளை ஏற்றிச் சென்ற உலங்கு வானூர்தி கட்டுபொத்த பகுதியில் திடீரென தரையிறக்கப்பட்டுள்ளதாக விமானப்படை ஊடகப் பேச்சாளர் ஹென்றி விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

உலங்கு வானூர்தியில் ஏற்பட்ட கோளாறு காரண மாகவே இவ்வாறு தரையிறக்கப்பட்டதாக விமானப் படை யின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

பெல் 412 ரக ஹெலிகொப்டர் என்ற வானூர்தியே கட்டு பொத்த மைதானத்தில் நேற்று காலை தரையிறக்கப்பட்டுள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கம் விசேட சட்ட மூலத்தை ஏன் அவசரமாக கொண்டு வருகிறது?

## விளக்குகிறார் மைக்கல் எம்.பி.

**யுத்தத்தால் இடம்பெயர்ந்த தமிழ், சிங்கள , முஸ்லிம் மக்களுக்கு அம்மக்கள் வாழ்ந்த இடங்களில் வாக்குரிமையை வழங்குவதை எதிர்க்கவில்லை. ஆனால் இவ்விடயத்தை விரிவாக ஆராயாது பேச்சுவார்த்தைகளை நடத்தாது அவசரமாக அரசாங்கம் ஏன் தேருநர்களை பதிவு செய்தல், விசே சட்டமூலத்தை கொண்டு வருகின்றது என ஐ.தே.கட்சி எம்.பி. ஜோசப் மைக்கல் பெரேரா எம்.பி. கேள்வி எழுப்பினார்.**

தேருநர்களை பதிவு செய்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்ட மூலம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது. இதன் போது எதிர்க்கட்சி தரப்பில் விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்படி கேள்வியை எழுப்பினார்.

அவர் சபையில் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இடம் பெயர்ந்தோர் தமது வாக்குரிமையை தமது பிரதேசங்களில் வாக்களிப்பதற்கு இடமளிக்கப்பட வேண்டுமென தமிழ் தேசிய கூட்டமைப்பு கோரியது. அதேபோன்று சிங்கள, முஸ்லிம் இடம்பெயர்ந்த மக்களுக்கும் இதே போன்று இடமளிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டது. இதுவல்ல இன்றைய முக்கியத்துவம். ஏன் இச்சட்ட மூலத்தை அவசரமாக கொண்டு வர வேண்டும். இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்கள் புத்தளத்தில் மட்டுமல்ல நீர்கொழும்பிலும் வாழ்கின்றனர்.

எனவே இம் மக்கள் எங்கு வாக்களிப்பது. இலங்கை பிரஜைகளாக பதிந்தவர்கள் வெளிநாட்டில் இருப்பார்களேயானால். அவர்களும் வாக்களிக்க முடியாது.

வவுனியா உட்பட வடக்கு கிழக்கில் புதிய குடியேற்றங்கள் இடம்பெறுகிறது. இவர்களுக்கு இச் சட்டமூலத்தால் வாக்களிக்க முடியும். வடக்கில் இடம்பெயர்ந்தவர்களும் மற்றும் புதிதாகவும் தெற்கிலிருந்து கொண்டு செல்லப்பட்டவர்கள் குடியேற்றப்பட்டுள்ளனர்.

இவ்வாறானதோர் நிலையில் அப்படி புதிதாக வாக்காளர்களை பதிவு செய்வது புத்தளத்தில் இடம்பெயர்ந்து வாழ்பவர்கள் தாம் வாழ்ந்த பிரதேசத்திற்கு சென்று பதிய வேண்டுமா என்பதில் சிக்கல் உள்ளது. எனவே பல்வேறு சிக்கல்கள் உள்ளன. பல்வேறு பிரச்சினைகளுக்கு விடை காண வேண்டியுள்ளது.

எனவேதான் கேட்கிறேன் அவசரமாக ஏன் இந்தப் பிரேரணை கொண்டு வர வேண்டும். இடம்பெயர்ந்த தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களுக்கு வாக்களிக்கும் உரிமையை வழங்குவதை எதிர்க்கவில்லை.

யுத்தம் முடிந்து விட்டது. மக்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர். ஜனாதிபதி தேர்தல், பொதுத் தேர்தல் நடத்தப்பட்டது. அவ்வாறெனில் ஏன் அவசர பிரேரணை? இன, மதங்களுக்கு ஏற்ப இனக்குழுமம் உள்ளது. எனவே எவ்வாறு இன குழுமத்தின் மாற்றம் ஏற் படாத விதத்தில் தேருநர் இடாப்பில் பதியப்படும்.

இடம்பெயர்ந்த மக்களின் ஆரம்ப கால வாழ்விடம் உள்ளதா இல்லையா? இந்த நிலையில் எந்த விலாசத்தில் பதிவது வடக்கில் தேர்தல் நடத்தப்பட உள்ளமையினாலேயே அவசரமாக தேருநர்களை பதிவு செய்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்ட மூலத்தை கொண்டு வருகிறீர்கள் என்றும் அவர் தெரிவித்தார். (அ-2)

# கண்ணகை அம்மனுக்கு உலங்குவானூர்தியில் மலர் சொரிவு

(வரணி)

சிட்டிவேரம் கண்ணகையம்மன் ஆலயத்தின் வருடாந்த தேர்த்திருவிழா இன்று காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிலையில் அம்மன் தேரில் வீதியுலா வரும் போது கடந்த வருடத்தினைப் போன்று இவ்வருடமும் உலங்கு வானூர்தியிலிருந்து மலர் சொரியப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை தேச மானிய எம்.ரி.எஸ். இராமச்சந்திரன் மேற்கொண்டுள்ளார்.

இவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்ததை அடுத்து விமானப் படைக்கு சொந்தமான உலங்கு வானூர்திக்கு ஜனாதிபதி அனுமதி வழங்கியுள்ளார். அத்துடன் ஜனாதிபதி தேர்த்திருவிழா சிறப்பாக நடைபெற வாழ்த்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# இலங்கையின் பால்மாவில் இரசாயனப் பொருள் இல்லை

(கொழும்பு)

இலங்கையில் பாவிக்கப்படும் இறக்குமதி பால்மாவில் DCD என்றழைக்கப்படும் Di Cyan Diamide இரசாயனப்பொருள் அடங்கி இருக்கவில்லையென தாய்லாந்திலுள்ள SGS ஆய்வு கூடம் உறுதி செய்துள்ளதாக சுகாதார அமைச்சு நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின் உணவுக் கட்டுப்பாட்டுப் பிரிவு கடந்த 31 ஆம் திகதி பால்மா மாதிரிகள் பலவற்றை தாய்லாந்துக்கு ஆய்வுக்காக அனுப்பி இருந்தது.

இந்த 6 மாதிரிகள் தொடர்பான ஆய்வு கூட அறிக்கை நேற்று முன்தினம் உணவுக் கட்டுப்பாட்டுப் பிரிவுக்குக் கிடைத்துள்ளது. இதில் இரசாயனப் பொருள் இல்லையென உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதி இலங்கைக்கு கப்பலில் அனுப்பவென பால்மா கப்பலில் ஏற்பட்ட போது பால்மாவில் DCD இராசாயனம் இல்லையென்பதை உறுதிப்படுத்தும் பாதுகாப்புச் சான்றிதழ் சமர்ப்பிப்பதும் கட்டாயமாக்கப்பட்டு இருந்தது.

இந்தச் சான்றிதழ் இன்றி எந்தவித பால்மாவையும் இலங்கையில் விற்பனை செய்யவோ விநியோகம் செய்யவோ இயலாதென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட்டாலும் சந்தையில் பால்மா விற்பனை தொடர்பாக தொடர்ச்சியான கண்காணிப்பும் மேற்கொள்ளப்படும்.(அ-2)

# இரட்டை குடியுரிமை தொடர்பில் உத்தேச சட்டங்கள் தயாரிப்பு

(கொழும்பு)

இரட்டைக் குடியுரிமை குறித்த உத்தேச சட்டங்கள் விரைவில் நாடாளுமன்றிற்கு சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அமைச்சர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இரட்டைக் குடியுரிமை தொடர்பில் குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் உத்தேச சட்டங்களைத் தயாரித்துள்ளது.

தற்போது வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் இலங்கையர்களுக்காக இந்த உத்தேச சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் எவ்வாறான சட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன என்பது குறித்து கவனம் செலுத்தப் படவுள்ளது.

குறித்த சட்டம் தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத் திடமும் ஆலோசனை பெற்றுக் கொள்ளப்படவுள்ளது.

எப்போது இந்த உத்சே சட்டம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என்பது பற்றிய சரியான தகவல்களை தற்போதைக்கு வெளியிட முடியாது என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

(அ-2)

# பர்தா அணிவதற்கு நாட்டில் எந்தவித தடையும் இல்லை

வெளிநாடுகளில் பிரசாரப் படுத்தப்படும் வகையில் இலங்கையில் முஸ்லிம்களின் பர்தாக்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை என ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் கடந்த 6 ஆம் திகதி பத்திரிகைப் பேரவைச் சட்ட ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

எவரும் கூறுவதுபோல் எந்த முஸ்லிம்களது பர்தாவும் நாட்டில் எங்கும் கழற்றப் படவில்லை. முஸ்லிம்கள் சுதந்திரமாக பர்தா அணிந்து நடமாடுவதை எங்குமே காண முடிவதாகவும் அவர் தெரிவித்தார்.

அச்சமயம் பாராளுமன்றத்தைப் பார்வையிட வருகை தந்திருந்த முஸ்லிம் மாணவிகளைச் சுட்டிக்காட்டி அவர்கள் பர்தா அணிந்து சுதந்திரமாக செயற்படுவதாகவும் சபையில் தெரிவித்த அவர், பர்தா அணிவதற்கு இந்த நாட்டில் எந்தத் தடையும் இல்லை என்பதை இது வெளிக்காட்டுவதாகவும் அவர் தெரிவித்தார். (அ-2)

# லொறியிலிருந்து ஆயுதங்கள் மீட்பு

அம்பாறை -மகாஓயா பிரதேசத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சந்தேகத்துக்கு இடமான லொறியை சோதனை செய்த போது அதில் இருந்து ஒரு தொகை ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

மகாஓயா பொலிஸார் நேற்று அதிகாலை மேற்கொண்ட திடீர் சோதனையில் குறித்த ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

35 மோட்டார் குண்டுகள், ஆர்.பி.ஜி. குண்டு உள்ளிட்ட யுத்த உபகரணங்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். (அ-2)

# யாழ்ப்பாணக் குடாநாட்டில் சேவைக்கு ஓர் புதிய உதயம்

யாழ்ப்பாணக் குடா நாட்டில் எழுபத்து இரண்டு வருட காலங்களுக்கு பின்பு நல்லூர் றோட்டறிக் கழகம் என்னும் புதியதோர் சர்வதேச சமூக சேவைக்கழகம் ஒன்று இன்று சனிக்கிழமை கிறீன் கிறாஸ் ஹோட்டல் மண்டபத்தில் முற்பகல் 8.30 மணிக்கு இலங்கையின் றோட்டறிக் கழகங்களுக்கான மாவட்ட ஆளுநர் Rtn. தர்ஷன் ஜோன் இனால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படுகின்றது.

இலங்கை றோட்டறி வரலாற்றில் சர்வதேச றோட்டறியிலேபதிவுசெய்யப்பட்ட அறுபத்தாறு றோட்டறிக்கழகங்கள் சேவையாற்றிக் கொண்டு இருக்கின்ற இவ் வேளையில் இலங்கையில் அறுபத்தேழாவது கழகமாகவும் யாழ். குடாநாட்டில் 2 ஆவது றோட்டறிக் கழகமாகவும் இந்த நல்லூர் றோட்டறிக்கழகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2005 ஆம் ஆண்டுகாலப் பகுதியிலேயே இக்கழகம் ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் மேற்கொண்ட போதும் தவிர்க்க முடியாத சில காரணங்களினால் அது கைகூடவில்லை.

இருப்பினும் சமூகசேவைக்காக தம்மை அர்ப்பணித்து தன்னலமற்ற சேவை என்பதை காற்றாக சுவாசித்து வரும் இக்கழகத்தின் அங்கத்தவர்களின் விடாமுயற்சியின் பயனாக இவர்களுடைய சேவைக்கான ஊடகமாக இன்று இக்கழகம் அங்குரார்ப் பணம் செய்யப்படுகின்றது.

இது தவிர இக்கழகத்தினை யாழ். குடாநாட்டில் புதிதாக ஆரம்பிப்பதற்கு பூரண அனுசரணை வழங்கிய அனுசரணைக்கழகம் கொழும்பு கிழக்கு றோட்டறிக் கழகம் என்பதும் இங்கு குறிப்பிடப்பட வேண்டிய விடயம்.

1905 ஆம் ஆண்டு காலப் பகுதியிலே அமெரிக்கா சிக்காக்கோ நகரிலே ஆரம்பிக்கப்பட்ட இந்த றோட்டறிக் கழகம் இன்று நூற்றி எட்டு வருடங்கள் நிறைவுள்ள நிலையில் சர்வதேச ரீதியில் பல நூறுக்கும் மேற்பட்ட நாடுகளில் பரந்துபட்டு பல ஆயிரக் கணக்கான கழகங்களையும் பல இலட்சக்கணக்கான அங்கத்தவர்களையும் தன்னகத்தே கொண்டு சேவையாற்றி வருகின்றது.

நல்லூர் றோட்டறிக் கழகம் கடந்த ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதி சர்வதேச றோட்டறியிலே பதிவு செய்யப்பட்டு இன்று தனது ஆரம்ப நிர்வாக சபையான 2013/2014 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குரிய தலைவர் Rtn. கோகுலதாஸ் முரளிதரன் தலைமையிலான நிர்வாக சபை உறுப்பினர்களுக்கான பதவியேற்பு வைபவத்தையும் கழகத்தின் ஆரம்ப உறுப்பினர்களுக்கான சின்னம் சூட்டு வைபவத்தையும் இன்று நடத்துகின்றது.

இக்கழகத்திலே இணைந்து கொண்டிருக்கின்ற அங்கத்தவர்கள் பலரும் அரச மற்றும் தனியார் துறைகளில் பல்வேறு உயர்பதவி வகிப்பவர்களும் பல்தரப்பட்ட தொழில்துறைகளிலும் பணியாற்றுகின்றமையும் இக்கழகத்தின் எதிர்காலத்திற்கு இடப்பட்ட அத்திபாரம் என்றே குறிப்பிட வேண்டும். இக்கழகமானது ஆரம்பிக்கப்பட்ட சொற்ப காலத்திலேயே பல செயற்றிட்டங்களை செய்து இருக்கின்றமை இக்கழகத்தினால் இன்று வெளியிடப்படுகின்ற கழகத்தின் வருடாந்த சஞ்சிகையான நேயம் சஞ்சிகை மூலம் அனைவருக்கும் புலப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம்பெயர்ந்த மக்களின் வாக்குரிமையை பாதுகாக்கவே விசேட ஏற்பாடுகள் சட்டமூலம்

## நீதி அமைச்சர் ஹக்கீம்

(கொழும்பு)

**வடக்கு-கிழக்கில் இடம்பெயர்ந்த மக்களின் வாக்களிக்கும் உரிமையை உறுதிப்படுத்தும் வகையிலேயே வாக்காளர் பதிவு விசேட ஏற்பாடுகள் சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்ததாக நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் நேற்று முன்தினம் பராளுமன்றத்தில் தெரிவித்தார்.**

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்றம் நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு மணிக்கு பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தலைமையில் கூடியது. வழமையான பணிகளுக்குப்பின் நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் வாக்காளர் பதிவு விசேட ஏற்பாடுகள் சட்டமூலத்தை சபையில் சமர்ப்பித்து உரையாற்றினார்.

இதற்கிணங்க, வாக்காளர் பதிவு (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலத்தின் பிரகாரம் இடம்பெயர்ந்த மக்களுக்கென குறை நிரப்பு வாக்காளர் இடாப்பொன்று தயாரிக்கப்படவுள்ளது.

அத்துடன் ஒன்றுக்கு மேற்பட்ட பிரதேசங்களில் வாக்காளர்களாகத் தம்மை பதிவு செய்து வாக்கு மோசடிகளில் ஈடுபடுவது தண்டனைக்குரிய குற்றமாகும்.

2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் குறித்த ஒரு மாவட்டத்தில் வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ளடக்கப்பட்டு 2009 தொடக்கம் 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வாக்காளர் இடாப்பில் பெயர் உள்ளடக்கப்படாதவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும். அதே வேளை, இடம் பெயர்ந்து தற்காலிகமாக வேறொரு மாவட்டத்தில் தங்கியிருந்தமையை உறுதிப்படுத்த வேண்டியது அவசியம் எனவும் இந்தச் சட்டமூலத்துக்கு அமைய இடம் பெயர்ந்து தற்காலிகமாக ஒரு இடத்தில் தங்கியுள்ளவர்கள் தமது சொந்த மாவட்டத்திற்குச் சென்று வாக்களிக்கமுடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு சகல உரிமைகளும் உறுதிப்படுத்தப்படுமென அரசாங்கம் சர்வதேசத்துக்கு உறுதியளித்திருந்தது. அத்துடன், மனித உரிமைகள் செயற்றிட்டத்திலும் இடம்பெயர்ந்தவர்களின் சகல உரிமைகளும் உறுதிப்படுத்தப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவற்றுக்கு அமைவாக இடம்பெயர்ந்த மக்களுக்கான வாக்களிக்கும் உரிமையை உறுதிப்படுத்த குறித்த சட்டமூலத்தை அரசாங்கம் தயாரித்துள்ளது.

> “இம்மாதம் முதலாம் திகதியில் வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ளடக்கப்படாத இடம் பெயர்ந்த மக்கள் இச் சட்டத்தின் கீழ் விண்ணப்பிக்க முடியும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.
>
> – ஹக்கீம்

தமது சொந்த மாவட்டங்களில் இருந்து இடம் பெயர்ந்து வேறு மாவட்டங்களில் தங்கியிருக்கும் மக்கள் நிரந்தரமான ஒரு முகவரி இன்மையால் வாக்காளர் இடாப்புக்களில் தமது பெயர்களை உள்ளடக்கிக்கொள்ளமுடியாத நிலையில் உள்ளனர்.



இச் சட்டமூலத்தின் கீழ் இடம்பெயர்ந்தவர்கள் 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் பதிவு செய்த வாக்காளர் பட்டியலுக்கு அமைய இடம்பெயர்ந்துள்ளமையை உறுதிப்படுத்தி சொந்த மாவட்டத்தில் வாக்காளர் பதிவுக்கு விண்ணப்பிக்க முடியும்.

இவ்வாறு பதிவு செய்யப்படும் வாக்காளர்களுக்கு குறை நிரப்பு வாக்காளர் இடாப்பொன்று வெளியிடப்படும்.

இந்தச் சட்டமூலமானது இடம் பெயர்ந்த மக்களின் வாக்குரிமையை மேலும் பலப்படுத்தும். குறைநிரப்பு வாக்காளர் இடாப்பு குறுகிய காலத்தில் எவ்வாறு தயாரிக்கப்படும் என்பது பற்றி எதிர்க்கட்சியினருக்கு சந்தேகங்கள் இருந்தால்தேர்தல்கள்ஆணையாளரை நேரில் சந்தித்துக் கலந்துரையாட முடியும். அ-2

## முத்தமிழ் விழா

யாழ்.கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயத்தின் முத்தமிழ் விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

க.பிரகாசினி தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் எஸ்.சிவலிங்கராஜா , வலிகாம உதவிக்கல்விப் பணிப்பாளர் செல்வி ரா.ராதா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

அத்துடன் வரவேற்புரையினை த.சமிஸ்ரா, ஆசியுரையினை ம.தாணுநாத்சர்மா, வாழ்த்துரையினை பாடசாலை அதிபர் கா.சசிதரன் ஆகியோர் ஆற்றவுள்ளனர். (அ)

## சான்றிதழ் வழங்கல்

டி.எம்.ஐ.கணனி கல்வி நிறுவனத்தின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இச் சான்றிதழ்கள் யாழ்ப்பாணம், நெல்லியடி, சாவகச்சேரி, சுன்னாகம் ஆகிய பயிற்சிமையங்களினூடாக கணனி, ஆங்கில கற்கை நெறியினைப் பூர்த்திசெய்தவர்களுக்கேவழங்கப்படவுள்ளது.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக உடுவில் மகளிர் கல்லூரியின் அதிபர் சிராணி மில்ஸ், சிறப்பு விருந்தினராக யூனியன் அஷ்ரன்சின் வட மாகாண வலய முகாமையாளர் சி.என்.மதிவதனன் ஆகியோர்கலந்து கொள்ளவுள்ளனர். (அ)

# இந்திய மீனவர்கள் விளக்கமறியலில்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 49 பேரையும் விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் மற்றும் ஊர்காவற்றுறை நீதிமன்றங்கள் உத்தரவிட்டுள்ளன.

இலங்கை மன்னார் மாவட்ட கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து கடற்றொழிலில் ஈடுபட்டு வந்த இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 24 மீனவர்களையும் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் மாவட்ட பதில் நீதவான் ஏ.கயஸ்பல்டோனோ நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 24 மீனவர்கள் 6 இழுவைப்படகுகளில் கடந்த 5 ஆம் திகதி இலங்கை கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது கடற்படையினர் கைது செய்தனர்.

பின்னர் குறித்த 24 மீனவர்களும் தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

தலைமன்னார் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட நிலையில் நேற்று முன்தினம் மதியம் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். விசாரணைகளை மேற்கொண்ட நீதவான், குறித்த மீனவர்களை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை, யாழ்நெடுந்தீவு கடற்பரப்பில்வைத்துகைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 25 பேரையும் எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் உத்தரவிட்டதுடன், வழக்கை யாழ். மேல் நீதிமன்றிற்கு சமர்ப்பித்துள்ளார்.

யாழ்.நெடுந்தீவு கடற்பரப்பில் கடந்த 5 ஆம் திகதி புதன் கிழமை இரவு கடற்றொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, யாழ். மாவட்ட நீரியல்வளத்துறை மற்றும் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

யாழ்.மாவட்ட நீரியல்வளத்துறை மற்றும் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளினால் ஊர்காவற்றுறை நீதிமன்றில் இந்திய மீனவர்கள் 25 பேரையும் ஆஜர்படுத்திய வேளையில், ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதிபதி எஸ்.மகேந்திரராஜா மேற்படி தீர்ப்பை வழங்கினார். (அ-6)

# பிரிவினைவாதிகளை திருப்திப்படுத்தினால் மீண்டும் ஜனாதிபதியாக வரமாட்டீர்கள்

### எச்சரிக்கிறது தேசப்பற்றுள்ளதேசிய இயக்கம்

(கொழும்பு)

அரசாங்கம் கூழுக்கும் மீசைக்கும் ஆசைப்படுவதாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் வசந்த பண்டார தெரிவித்துள்ளார்.

13 பிளஸ், 13 மைனஸ் என்பதைவிடவும், பிரிவினைவாத சக்திகளுக்கு சாதகத் தன்மை ஏற்படக் கூடாது என்பதே எமது நிலைப்பாடு.

காணி,பொலிஸ் அதிகாரங்களை இரத்து செய்யாது வேறு இரண்டு விடயங்களைத் திருத்தி அதனை 13 மைனசாக வெளிப்படுத்த முயற்சிக்கின்றது.

இதன்மூலம் தேசப் பற்றுடைய இயக்கங்களை திருப்திப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

மறுபுறத்தில் காணி, பொலிஸ் அதிகாரங்களில் மாற்றம் செய்யாது 13 பிளஸாக காண்பித்து பிரிவினைவாத சக்திகளை திருப்திப்படுத்த அரசாங்கம் முயற்சிக்கின்றது.

அரசாங்கம் கூழுக்கு ஆசைப்படும் அதேவேளை மீசையையும் பாதுகாத்துக் கொள்ள திட்டமிடுகின்றது. இதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

பிரிவினைவாத சக்திகளைப் போன்றே தேசப்பற்றுடைய இயக்கங்களை அரசாங்கம் ஏமாற்ற நினைத்தால் அது பாரிய வரலாற்றுப் பிழையாக அமையும்.

விரிவினைவாதிகளை திருப்திப்படுத்தினால் அடுத்த தேர்தலில் ஜனாதிபதியினால் வெற்றியீட்ட முடியாது என அவர் தெரிவித்தார்.(அ-2)

# இலங்கையின் எதிர்காலம் நியூயோர்க் நீதிமன்றுக்கு செல்லும்

### எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் எதிர்காலம், நியூயோர்க் மாவட்ட நீதிமன்றத்தின் கீழ் செல்லும் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எச்சரித்துள்ளார்.

ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நஷனல் நிறுவனத்தின் இலங்கை கிளையால் ஊழலுக்கு எதிரான மக்கள் பிரதிநிதிகளின் சந்திப்பு என்ற தலைப்பில் கொழும்பில் நடத்தப்பட்ட நிகழ்வில் அவர் இந்தக் கருத்தை முன்வைத்தார்.

நியூயோர்க் மாவட்ட நீதிமன்றத்திற்கு கட்டுப்படாது செயற்படுவதற்கும் மாற்றுவழி இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

ஊழல், நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகளையும் களையச் செய்துள்ளது. ஏனென்றால், ஊழல்களை மேற்கொள்பவர்களுக்கு இலகுவாக வெளிநாட்டுக் கடன்களை பெறமுடியும்.

இந் நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகள் நியூயோர்க் மாவட்ட நீதிமன்றத்தின் கீழ் சென்றுள்ளது. அதில் இடம் பெறும் வழக்கு விசாரணையின்அடிப்படையிலேயே இலங்கையின் எதிர்காலம் நிர்ணயிக்கப்படும் என்று எதிர்க்கட்சித்தலைவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# ஆமை பிடித்தவருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டம்

குளத்தில் ஆமைகள் பிடித்த நபருக்கு பத்தாயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறு கல்முனை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நாவிதன்வெளி பிரதேசத்தில் அமைந்துள்ள அன்னமலை குளத்தில் ஆமைகளைப் பிடித்த ஒருவருக்கே மேற்படி தொகைப் பணத்தை செலுத்துமாறு கல்முனை நீதவான் நீதிமன்ற நீதிபதி அந்தோனி ஜுட்சன் அண்மையில் உத்தரவிட்டார்.

குறித்த நபர் ஆமைகள் இரண்டைப் பிடித்து இறைச்சிக்காக எடுத்துக் கொண்டு வரும் போது சவளக்கடை பொலிஸார் கைது செய்துள்ளனர். இவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோது மேற்படி தண்டம் விதிக்கப்பட்டது. (அ-2)



யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலய தரம் 5 மாணவர்களுக்கான தமிழ்ப் பாடமுகாம் அண்மையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ்.கல்வி வலய ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி தேவராஜா மைதிலி நாடாவெட்டி தமிழ்ப்பாடமுகாமை ஆரம்பித்து வைப்பதையும் பங்கு கொண்ட மாணவரின் செயற்பாடுகளையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “எனது கேள்விகளுக்கு சித்தர் அளித்த பதில்கள்”



## ஆன்மீகம் 27

அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி

இறைவனே தன் இடப்பாகத்தை இறைவிக்கு அளித்து அர்த்தனாரீஸ்வரனாகத் தானே தோற்றமளிக்கிறார்! அதனால் பெண்களை ஈஸ்வரியாகவும் ஆண்களை ஈஸ்வரனாகவும் பார்க்கமனித இனம் கற்றுக்கொள்ள வேண்டும் என்று தான் இப்படிப் பாடங்களை நடத்தி இருக்கிறார்கள்! அது துறவுவழி! துறவிகள் பெண்ணிடம் உறவு கொண்டால் தவ வலிமையை இழந்து போவார்கள்! ஒரு உதாரணம் சொல்ல வேண்டுமானால் விஸ்வாமித்திரர், தவத்தைக் கலைக்க இந்திரன் மேனகையை அனுப்பி வைத்தான்! ஷித்திரிய குல மன்னர் வழியில் பிறந்த விஸ்வாமித்திரர் எளிதில் இந்திரன் விரித்த வலையில் வீழ்ந்தார்! அதனால் தவ வலிமையை இழந்தார்! இந்திரன் கெட்டதும் பெண்ணாலே என்று கிராமங்களில் பாடுவார்கள். அதனால் தான் சித்தர்கள் பெண்களை தாய்போல் நினைத்தார்கள். பெண்ணாசையை வெறுத்தார்கள்!

அடியேன்:- ஆண், பெண் உறவு இயற்கையானதுதானே?

சித்தர்:- இல்லை என்று யார் சொன்னது? எல்லா உயிர்களுக்கும் இது பொது விதி! ஆனால், மற்ற உயிரினங்களுக்கு ஒரு குறிப்பிட்ட காலங்களில் தான் இந்த உறவு நிகழ்கின்றது! ஆனால், பகுத்தறிவுள்ள மனிதனோ எந்தக்காலத்திலும் உறவுகொள்ளத் துடிக்கிறான். ஒருவனுக்கு ஒருத்தி என்றும் தேவ, சமூக விதிகளைக் காம வேட்கையில் மீறி நடக்கிறான்! இதற்காக எந்த அதர்மத்தையும் செய்யத் துணிந்து விடுகிறான்! விந்து விட்டவன் நொந்து கெட்டான் என்று அழிகிறான் பலவிதமான மேக நோய்களுக்கு ஆளாகி அடுத்தவர்களுக்கும் வள்ளலாய் வாரி வழங்கி விடுகிறான். மற்றவர்கள் அழிவிற்கும் வழிவகுக்கிறான்! தாம்பத்திய உறவு குழந்தைகளுக்காகவும், மனித இனவளர்ச்சிக்காகவும்தான் ஏற்படவேண்டும். இதையும் மாதம் இருமுறைதான் என்று பெரியவர்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர்.



பிரமரிஷி மலையில் பெண்களுக்கு சேலை தானம்

இன்று அப்படியா? முப்பது கோடி முகமுடையாள் என்று பாரத தாயை வர்ணித்து பாடிய பாரதி இன்றிருந்தால் நூறுகோடி முகமுடையாள் என்று பாடி இருப்பார்! சுதந்திர நாட்டில் நாம் மனிதகுல உற்பத்தியை ஓய்வின்றி நடத்தியதால் இன்று இந்தநாடு எல்லா மிருந்தும் ஏழை நாடாக இருக்கிறது! இயற்கை இயற்கையாக இருக் கும் வரைதான் அது இயற்கை. இல்லை என்றால் அதுவும் செயற்கைதானே!

அடியேன்:- அப்போது இறைவனை அடைய இல்லறத்தை மேற்கொண்டோருக்கு இயலாதா? துறவு தான் அதற்கு வழியா?

சித்தர்:- அப்படி யார் சொன்னது? சென்னை நகருக்கு குமரிமுனையிலிருந்து போகலாம்! கேரளாவில் இருந்தும்பாதை இருக்கிறது. கர்நாடகத்திலிருந்தும் பாதை இருக்கிறது. ஆந்திரா- டெல்லி என்று வடக்கிலிருந்தும் சென்னைக்கு ரோடுகள் இருக்கே! அதைப்போல இறைவனை அடையவும் பல வழிகள் உண்டு. அதில் இல்லறமும் ஒன்றாகும்.

இல்லறத்தை இல்லறத்துக்காகவே மேற்கொள்பவன், தாமரை இலை தண்ணீராக பற்றற்று கடமையாற்றி, இறைவன் திருவடிகளை சரணடைந்தவனுக்கு ஈசனை அடைவது எளிது! ஆனால், துறவறம் என்பது கடைப்பிடிக்க கடினமானது!

தொடரும்

# “விடுதலைப்புலி” என்ற முத்திரையை பயன்படுத்தும் இலங்கையும் அமெரிக்காவும்

விடுதலைப்புலிகள் இயக்கம் இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கப்பட்ட நான்காவது ஆண்டு நிறைவை அரசாங்கம் கடந்த மாதம் வெகு விமரிசையாகக் கொண்டாடியது. ஆண்டுதோறும் விடுதலைப்புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்பட்டதைக் கொண்டாடி வரும் அரசாங்கம் இன்னொரு பக்கத்தில் புலி என்ற ஓர் உருவகத்தை வைத்தும் நாட்டை மிரட்டிக் கொண்டிருக்கிறது.

கடந்த வாரம் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வெளியிட்ட 2012 ஆம் ஆண்டுக்கான தீவிரவாதம் தொடர்பான அறிக்கையில் விடுதலைப்புலிகள் தொடர்ந்தும் வெளிநாட்டுத் தீவிரவாத அமைப்புகளின் பட்டியலில் நீடிப்பதாக கூறப்பட்டிருந்தது. அந்த அறிக்கையில் விடுதலைப்புலிகளின் எந்த தீவிரவாதசெயற்பாடுகள் குறித்தும் குறிப்பிடப்படவில்லை.

அத்தகைய சம்பவங்கள் ஏதும் 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையிலோ அல்லது வெளிநாடுகளிலோ இடம்பெறவில்லை. 2009 மே 29 ஆம் திகதிக்குப் பின்னர் எந்தவொரு தீவிரவாதத் தாக்குதலும் இடம்பெறவில்லை என்று இலங்கை அரசாங்கமே உறுதி செய்கிறது.

அதுபோல உலகின் வேறெந்தப் பகுதிகளிலும் விடுதலைப் புலிகளின் தீவிரவாதத் தாக்குதல் நடந்ததாக அமெரிக்காவும் குறிப்பிடவில்லை. ஆனாலும், அமெரிக்கா விடுதலைப் புலிகளை வெளிநாட்டுப் பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் தொடர்ந்து வைத்திருக்கிறது. இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகள் தொடர்பாக அவ்வப்போது மிரட்டியே வருகிறது.

ஒருவகையில் சொல்லப்போனால் அமெரிக்காவும் இலங்கையும் விடுதலைப்புலிகள் என்ற பெயரைப் பயன்படுத்தி தமது இலக்குகளை அடைய முனைகின்றன என்றே கருதலாம்.

விடுதலைப் புலிகள் என்ற முத்திரை குத்தி எதிர்க்கட்சிகளின் அரசியல் நடவடிக்கைகளை முடக்குவதற்கு அரசாங்கம் முனைவதாக ஐ.தே.க. பிரதித் தலைவர் கருஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திற்கு எதிரான மாற்றுக் கருத்துக்களை வெளியிடுவோரை புலி ஆதரவாளர்களாக சித்திரிப்பதும் ஜனநாயகம் நல்லாட்சி, சட்டம் ஒழுங்கு தொடர்பாக குரல் கொடுப்போரை தேசத் துரோகிகளாக அடையாளப்படுத்தவும் அரசாங்கத்தின் வழக்கமாகியுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதுமட்டுமன்றி எதிர்கட்சியினர் வெளிநாட்டுக்குச் சென்று கருத்தரங்கு அல்லது வேறு ஏதும் நிகழ்வில் பங்கேற்றால் புலி ஆதரவு அமைப்புகளுடன் இணைந்து நாட்டுக்கு எதிராக சதித்திட்டம் தீட்டுவதாக பிரசாரம் செய்யப்படுவதாகவும் அவர் வேதனைப்பட்டுள்ளார். இதனை அரசாங்கத்தின் வரட்டுப்போன அரசியல் மூலோபாயம் என்றே குறிப்பிட வேண்டும்.

ஏனென்றால் விடுதலைப்புலிகள் என்ற இயக்கம் இலங்கையில் அடியோடு அழிக்கப்பட்டு நான்கு ஆண்டுகளாகிவிட்டன.

வெளிநாடுகளில் விடுதலைப்புலிகள் இயக்கம் இயங்குவதாக அவ்வப்போது அரசாங்கம் மிரட்டினாலும் அது அரசாங்கத்தை அச்சுறுத்தும் அளவிற்குச் செயற்படுவதற்கான எந்த தடயமும் கிடையாது.

வெளிநாடுகளில் விடுதலைப்புலிகள் கட்டமைப்பு ரீதியாக ஒன்றுபட்ட நிலையிலும் இல்லை. அத்தகைய கட்டமைப்பு ஒன்று உருவாவதற்கான சாத்தியங்களும் தென்படவில்லை.



ஆங்காங்கே விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களாக செயற்பட்டவர்களும் அவர்களுடன் இணைந்து செயற்பட்டவர்களும் வெளிநாடுகளில் இருந்தாலும் அவர்களால் இலங்கையில் ஒரு தாக்குதலையேனும் நடத்தும் திறன் கிடையாது.

கே. சஞ்சயன்

தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

479

## திருட்டிற்குத் தக்க சாட்சி



பஞ்சபுரி என்ற ஊரில் நஞ்சப்பன் என்று ஒரு தோட்டக்காரன் இருந்தான். அவன் தனக்கென இருந்த சிறு நிலத்தில் காய்கறிகளைப் பயிரிட்டு கவனமாய் நீர்ப்பாய்ச்சி அக்கறையுடன் அவற்றைக் கவனித்து வந்தான். அவனது தோட்டக் காய்களை மிக நன்றாக வளர்ச்சியுற்று நல்ல விலைக்கு போய் வந்தன. அவன், தான் பயிர் செய்யும் காய்களுக்குப் பெயர்கூட வைத்து, தினமும் அவற்றின் வளர்ச்சியைக் கண்டு சந்தோஷமும் அடைந்து வரலானான்.

அதே ஊரில் வஞ்சப்பன் என்று மற்றொரு தோட்டக்காரன் இருந்தான். அவனுக்கு நஞ்சப்பனை விட அதிகமாகவேநிலம் இருந்தது.



பணவசதியும் இருந்தது. அவனும் காய்கறி பயிரிட்டு வியாபாரமே செய்து வந்தான். ஆனால், மகா, பேராசை பிடித்தவன். எனவே, காய்களைப் பயிரிட அதிகமாக கவனம் செலுத்தாமல், காசு சேர்ப்பதில் மட்டுமே கண்ணும் கருத்துமாக இருந்தான். எனவே, அவனுடைய காய்கறிகளுக்கு அவ்வளவாக கிராக்கி இல்லாமலே இருந்தது. ஒரு தடவை நஞ்சப்பனின் காய்கறித் தோட்டத்தில் பூசணிக்காய்கள் நன்கு காய்த்தன. நஞ்சப்பன் தினமும் அக்காய்களைப் பார்த்து அவற்றுக்கு எவ்விதக் கெடுதலும் நேராது பார்த்து வந்தான். அந்தக் காய்களில் ஒவ்வொன்றையும் ஐராவதம், குஞ்சரம், கஜமுகன் என்பதுபோல பெயர்களை வைத்து அவைகளின் பெயரைக் குறிப்பிட்டு வளர்ச்சியை விவரமாக ஊரார்க்கு சொல்லியும் வந்தான்.


ஒருநாள் மாலை நஞ்ச்ப்பன் பூசணிக்காய்களைப் பார்த்தான். அவை நன்கு வளர்ந்துவிட்டன. இனி அவற்றை மறுநாள் சந்தையில் கொண்டுபோய் விற்று விடுவதெனத் தீர்மானித்துக் கொண்டான். எனவே, மறுநாள் பொழுது புலர்ந்ததும் வண்டியில் அவைகளைப் போட்டுக் கொண்டு கிளம்புவது என்று நினைத்துத் தன் வீட்டிற்குச் சென்று தூங்கி விட்டான்.

மறுநாள் பொழுது புலர்ந்தது. வண்டியுடன் நஞ்சப்பன் தன் காய்களின் தோட்டத்திற்குச் சென்றான். அங்கு பூசணிக்கொடிகளைக் கண்டதும் அவன் திடுக்கிட்டான். ஒன்றிலாவது காயைக் காணோம். யாரோ இரவோடு, இரவாக அவ்வளவு காய்களையும் பறித்துக் கொண்டு போய்விட்டார்கள். நஞ்சப்பனுக்கு அழுகையும், துக்கமுமாக நெஞ்சை அடைத்துக் கொண்டது. தலையில் கையை வைத்துக்கொண்டு அங்கேயே உட்கார்ந்து கொண்டு விட்டான்.

காய்கள் பறி போன பிறகு, அவற்றைப் பற்றி யோசித்து என்ன பயன்? இனி யார்அவற்றைத் திருடியது என்று கண்டுபிடிக்க வேண்டும். அதற்கும் ஒரு சுலபமான வழி அவனுக்குத் தோன்றியது. அவ்வளவு காய்களையும் பறித்தவன் நேராகச் சந்தையில்தான் அவற்றைக் கொண்டு போய் விற்றிருப்பான். எனவே, உடனே அங்கு சென்றால் ஆளைக் கண்டுபிடித்து விடலாமென நினைத்துக் கொண்டு வண்டியை சந்தைக்கு அதிவேகமாக ஓட்டிச்சென்றான்.

சந்தைக்குள் காய்கறிக்கடைகள் இருந்த பக்கம்செல்லவே அங்கு ஒரு கடையில் தன் பூசணிக்காய்கள் அனைத்தும் இருப்பதைக் கண்டான். உடனே, ஆத்திரம் மிக்கவனாய் அக்கடைக்காரனை நோக்கி "இதேன்னப்பா வேலைத்தனம்? தோட்டத்திலிருந்த இவ்வகளைத் திருடிக் கொண்டு வந்து இங்கு விற்கிறாயா?" எனக்கேட்டான்.

அதற்கு கடைக்காரன் "இது நான்



விலைக்கு வாங்கியது. பஞ்சபுரியிலிருந்து வந்த வஞ்சப்பன் இதை என்னிடம் விற்றான். இன்னும் அவன் இந்த சந்தையை விட்டுப் போகவில்லை. இதோ, நான் அவனையே கூட்டிக் கொண்டு வரச்சொல்கிறேன்" எனக் கூறித் தன்னுடைய கடையாள் ஒருவனை அனுப்பி வஞ்சப்பனைத் தேடி அழைத்து வரும்படி சொன்னான். இதற்குள் நஞ்சப்பன் அந்த ஊர் நீதிபதியையும் அந்தக் கடைக்கு அழைத்து வந்து "இதோ பாருங்கள் இவை நான் பாடுபட்டுப் பயிரிட்ட பூசணிக்காய்கள். இதன் பெயர் ஐராவதம் அதன் பெயர் குஞ்சரம் இது கஜமுகன் என்றெல்லாம் கூறினான். ஆனால், நீதிபதியோ "இதெல்லாம் சரி. ஆனால், இவை உனது காய்கள் என்று கூற வேறு சாட்சியங்கள் இருக்கிறதா? எனக்



கேட்டார்.

இதற்குள் வஞ்சப்பன் வந்து விடவே அவனையும் விசாரித்தார். அவனோ அவையெல்லாம் தனது காய்களே என்றும், தான் பயிரிட்டு வைத்த காய்களுக்கு கணக்கு வீட்டில் எழுதி வைத்திருப்பதாகவும் சந்தேகமிருந்தால் அந்தக் கணக்குப் புத்தகத்தை கொண்டு வருவதாயும் கூறினான். நஞ்சப்பனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. அவை தன் தோட்டத்துப் பூசணிக்காய்கள் தான் என்று எபபடி நிரூபிக்க முடியும்? தன் முன்னால் கிடந்த தன் தோட்டத்துப் பூசணிக்காய்களையே வெகுநேரம் உற்று நோக்கிக் கொண்டு இருந்தான். அப்போது அவனுக்கு சட்டென்று ஒரு விடயம் ஞாபகம் வந்தது. உடனே, தானும் அந்தக் காய்கள் தன்னுடையதே என்பதை நிரூபிக்க சாட்சியம் கொண்டு வருவதாகக் கூறினான்.

அவர்கள் இருவரும் ஒரு மணி நேரத்திற்குள் தம் ஊருக்குப்போய் விட்டு தங்கள் சாமான்களுடன் நீதிபதியிடம் வந்தனர். வஞ்சப்பன் தன் கணக்குப் புத்தகத்தை எடுத்து நீட்டினான். ஆனால், நஞ்சப்பனோ தான் கொண்டு வந்த மூட்டையை கீழே வைத்து "இதோ இவை யாவும், நாற்பது பூசணிக்காய்களின் மேல் காம்புகள். கொடியிலிருந்து அறுத்தவன் இந்தக் காம்புகளை விட்டு அறுத்திருக்கிறான். இந்தக் காம்புகளை ஒவ்வொன்றாக நான் அந்தந்த பூசணிக்காய் மீது ஒட்ட வைத்துக் காட்டுகிறேன். எனக்கூறி" அவ்வாறே செய்தும் காட்டினான். நீதிபதிக்கு அப்போது உண்மை விளங்கிவிட்டது. சற்று மிரட்டிக் கேட்கவே வஞ்சப்பனும் தானே அக்காய்களை அறுத்தது என ஒப்புக் கொண்டான்.

நீதிபதி அந்தக் காய்களின் கிரயத்தை நஞ்சப்பனுக்கு வாங்கிக் கொடுத்தார். வஞ்சப்பன் தலை குனிந்தவாறே அங்கிருந்து சென்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுர்வேத மருந்து விற்பனையாளர்களுக்கு விழிப்புணர்வு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய வைத்தியத்துறை மேம்படுத்தும் எதிர்காலத் திட்டத்தின் அடிப்படையில் சுதேச வைத்திய நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள ஆயுர்வேத மருந்து விற்பனை ஸ்தாபன உரிமையாளர்களுக்கான தர நிர்ணய விழிப்புணர்வு கருத்தரங்கு எதிர்வரும் 12 ஆம் திகதி புதன் கிழமையும் மறுநாள் வியாழக்கிழமையும் முற்பகல் 9 மணிக்கு பண்ணையில் அமைந்துள்ள சுகாதா ரக் கிராமத்தின் பிராந்திய பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

தரமான மருந்துகளையும் சேவைகளையும் பயனாளிகள் பெற்றுக் கொள்ளக்கூடிய அளவுக்கு தரம் பேணுவதற்கு அமைவாகவும் அதற்கேற்ப பதிவுகளையும் வசதிகளையும் வழங்கும் நோக்கிலும் தமிழ் மொழியில் இக்கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

மேலும் இவ்விழிப்புணர்வு கருத்தரங்கிற்குரிய அழைப்புக் கடிதங்கள் உரிமையாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

எனினும் இதுவரையிலும் அழைப்புக் கடிதம் கிடைக்கப் பெறாதவர்களும் மேற்படி நிகழ்வில் கலந்து கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# காணி, பொலிஸ் அதிகாரங்களை ஒழிக்க வேண்டும்-குணதாச

(கொழும்பு)

13 ஆவது திருத்தத்தில் உள்ள காணி, பொலிஸ் அதிகாரங்களை ஒழிக்காது வேறு திருத்தங்களை ஏற்படுத்தி தேர்தலை நடத்துவதில் எவ்வித பயனும் இல்லை என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேர தெரிவித்தார்.

சௌசிறிபாயவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

13 ஆவது திருத்தத்தில் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை ஒழிக்காது அரசாங்கம் வடக்குத் தேர்தலை நடத்துமானால் அது பிரிவினைவாதிகளின் ஈழக் கனவை நனவாக்கும்.

அரசாங்கம் 13 ஆவது திருத்தத்தில் தேவையில்லாத திருத்தங்களை ஏற்படுத்தி நாட்டை பிளவுபடுத்த சந்தர்ப்பம் வழங்கக்கூடாது.

எனவே ஜனாதிபதி உடனடியாக 13 ஆவது திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை நீக்கி விட்டு வடக்குத் தேர்தலை நடத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் கல்வி முதுமாணிப்பட்ட (M.Ed) நிகழ்ச்சி திட்டத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலைய இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

மேற்படி நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் பிறவுண் வீதி, கொக்குவில் என்ற முகவரியில் அமைந்துள்ள யாழ்.பிராந்திய நிலையத்தில் விண்ணப்பப் படிவத்தை பெற்று எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விபரங்களை பெறுவதற்கு தமது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (அ-5)

# சலுகை அடிப்படையில் அம்புலன்ஸ் சேவை

(யாழ்ப்பாணம்)

கொழும்புக்கு நோயாளர்களை ஏற்றிச் செல்வதற்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் நோயாளர்களின் நலன்கருதி சலுகை அடிப்படையில் அம்புலன்ஸ் சேவையை ஆற்ற முன்வந்துள்ளது.

எனவே இச்சேவையை பெற விரும்புபவர்கள் 0773024293, 0212222561 என்னும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாண கிளை செயலாளர் க. மகாலிங்கம் அறிவித்துள்ளார். (அ)


# நிர்வாகத் தெரிவு

(பூநகரி)

கண்டாவளை பிரதேச செயலகப் பிரிவின் பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய வருடாந்தப் பொதுக்கூட்டம் கடந்த 30 ஆம் திகதி தருமபுரம் நெசவு நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது இந்நிதியத்திற்கான புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது.

இதில் தலைவராக க. வைரமுத்து, உபதலைவராக மு.மகேஸ்வரன், செயலாளராக சி.பெருமாள், உப.செயலாளராக சி.வீரசிங்கம், பொருளாளராக திருமதி நா. பகவதி ஆகியோர் தெரிவாகினர். மேலும் ஐந்து செயற்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (அ-2-84)




✦ *1405* - யோர்க் ஆயர் ரிச்சார்ட் ஸ்க்ரோப், நோர்ஃபோக் இரண்டாம் நிலை மன்னர் தோமஸ் மோபிறே ஆகியோர் இங்கிலாந்தின் மன்னர் நான்காம் ஹென்றியின் ஆணையின் பேரில் தூக்கிலிடப்பட்டனர்.

✦ *1783* - ஐஸ்லாந்தில் லாக்கி எரிமலை வெடிக்க ஆரம்பித்ததில் எட்டு மாதங்களில் வரட்சி மற்றும் வறுமை காரணமாக 9ஆயிரம் பேர் வரையில் உயிரிழந்தனர்.

✦ *1861* - அமெரிக்க உள்நாட்டுப் போர்: டென்னசி அமெரிக்கக் கூட்டில் இருந்து விலகியது.

✦ *1887* - ஹேர்மன் ஹொலரித் துளையிடும் அட்டை கொண்ட கணிப்பானுக்கான காப்புரிமம் பெற்றார்.

✦ *1929* - ஐக்கிய இராச்சியத்தில் முதற்தடவையாக தொழிற்கட்சி ஆட்சி அமைத்தது.

✦ *1941* - இரண்டாம் உலகப் போர்: நேச நாடுகள் சிரியா மற்றும் லெபனான் மீது தாக்குதலை ஆரம்பித்தன.

✦ *1942* -இரண்டாம் உலகப் போர்: ஜப்பானிய நீர்மூழ்கிக் கப்பல்கள் அவுஸ்திரேலியாவின் சிட்னி, நியூகாசில் நகரங்கள் மீது குண்டுத் தாக்குதலை நடத்தின்.

✦ *1984* - அவுஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் ஓரினச் சேர்க்கை சட்டபூர்வமாக அனுமதிக்கப்பட்டது.

✦ *1992* - முதலாவது உலகக் கடல் நாள் கொண்டாடப்பட்டது.

✦ *1995* - படிவ நிரலாக்க மொழி பி.எச்.பி வெளியிடப்பட்டது.

✦ *2006* - அலகொய்தாவின் ஈராக்கியத் தலைவர் அபு முசாப் அல்-ஜர்காவி அமெரிக்க விமானக் குண்டு வீச்சில் கொல்லப்பட்டார்.

✦ *2006* - ஒஸ்லோ பேச்சுவார்த்தைகளில் இருந்து விலகுவதாக தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்தனர்.

✦ *2007* - அட்லாண்டிஸ் விண்கப்பல் 7 பேருடன் சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு ஏவப்பட்டது.

✦ *2007* - இலங்கையில் புத்தளத்தில் 9 உடல்கள் மிகவும் சிதைந்த நிலையில் பொலிஸாரால் கண்டு பிடிக்கப்பட்டன.

✦ *2007* - அவுஸ்திரேலியாவில் நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் இடம்பெறற பெரும் காற்று மற்றும் வெள்ளத்தினால் 9 பேர் பலியாகினர்.

பிறப்புகள்

✦ *1867* - பிரான்க் லாய்டு ரைட், (இ. 1959)

✦ *1874* - *சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி, இலங்கையின் முன்னாள் சட்டசபை சபாநாயகர்*

✦ *1921* - சுகார்ட்டோ, இந்தோனேசியாவின் முன்னாள் ஜனாதிபதி (இ. 2008)

✦ *1975* - ஷில்பா ஷெட்டி, பாலிவுட் நடிகை

இறப்புகள்

✦ *1845* - ஆன்ட்ரூ ஜாக்சன், ஐக்கிய அமெரிக்காவின் ஏழாவது ஜனாதிபதி (பி. 1845)

✦ *1947* - எரிக் ஃப். வீஷாஉஸ், மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்

### வைத்திலிங்கம் துரைசுவாமி



சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி 1874ஆம்' ஆண்டு ஜூன் 8 ஆம் திகதி பிறந்தார். இலங்கையின் தமிழ் அரசியல் தலைவர்களில் ஒருவர். சட்டவாக்கப் பேரவைக்கு வடமாகாணத் தமிழரால் தெரிவு செய்யப்பட்ட முதலாவது பிரதிநிதி என்ற பெருமை பெற்றவர்.

இலங்கை அரசாங்க சபைக்கு 1936 ஆம் ஆண்டு ஊர்காவற்றுறை தொகுதியில் இருந்து தெரிவானார்.

அரசாங்க சபையில் 11 ஆண்டு காலம் சபை முதல்வராகப் பணியாற்றியவர். கல்விமானாகவும் விளங்கியதுடன் சேர் பொன்னம்பலம் இராமநாதனுடன் இணைந்து யாழ்ப்பாணத்தில் பல சைவப் பாடசாலைகளை நிறுவினார்.

சட்டம் பயின்று 1902 ஆம் ஆண்டில் வழக்கறிஞரானார்.

சேர் பொன்னம்பலம் இராமநாதனுடன் சேர்ந்து அரசியலில் ஈடுபட்டார். 1921 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட இலங்கை சட்டவாக்கப் பேரவைக்கு இடம்பெற்ற தேர்தலில் யாழ்ப்பாணத்தில் போட்டியிட்டு ஆறுமுகம் கனகரத்தினத்தை அதிகபடியான வாக்குகளால் வென்று முழு வட மாகாணத்திற்கும் பிரதிநிதியானார்.

1924 ஆம் ஆண்டு இடம்பெற்ற இலங்கை சட்டவாக்கப் பேரவைத் தேர்தலில் வட மாகாணத்தின் மேற்குப் பகுதியில் இருந்து போட்டியின்றித் தெரிவானார்.

1936 ஆம் ஆண்டில் இரண்டாவது அரசாங்க சபைக்கான சபை முதல்வர் தேர்வுக்கு சபை முதல்வராகத் தெரிவு செய்யப்பட்டார்.


இவருக்கு ஜோர்ஜ் மன்னர் நைட் பட்டம் வழங்கிக் கௌரவித்தார்.

இவர் சைவவிருத்திச் சங்கத்திலும், சைவபரிபாலன சபையிலும் தலைவராக இருந்துள்ளார். யாழ். இந்துக் கல்லூரி முதலாம் கலாசாலைகளின் பொது முகாமையாளராகவும் இருந்து சேவை புரிந்துள்ளார்.

இவர் தனது 91ஆவது வயதில் 1966 ஆம் ஆண்டு ஏப்ரல் 12ஆம் திகதி இறைவனடி சேர்ந்தார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மேலைத்தேய நாடுகளின் அரசியல் சிந்தனையும் ஈழத்தமிழர்களும்



6ஆம் திகதிக்குரிய தொடர்ச்சி...

மேலைத்தேய நாடுகளின் பார்வையிலே ஒரு போட்டி ஒன்றுக்கு வெற்றி என்பது எவ்வளவு தவிர்க்க முடியாததோஅதேபோல அரசியலில் அதிகாரம் தவிர்க்க முடியாததாகும். ஒரு குடும்பத்திலாக இருக்கட்டும் அல்லது அனைத்துலக நாடுகளுக்கிடையிலாக இருக்கட்டும் அரசியல் கலந்தே உள்ளது. ஏனெனில் மனிதன் தனது சொந்த வசதியைப் பெருக்கிக்கொள்வதிலே கவனமாக இருப்பது இதற்கு அடிப்படையாக அமைகிறது. அரசியலில் அதிகாரம் தவிர்க்க முடியாது என்பது பல்வேறு வகையான ஆதிக்கம் செலுத்தும் காரணங்களுக்காகவே என புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும்.

ஒரு நாட்டிலே தலைநகரம் மையமாகவும் புறநிலப்பரப்புகள் ஆதிக்கத்திற்குட்பட்ட பகுதியாகவும் காணப்படுகின்றன. இதனை ஆங்கிலத்தில் Centra and periphery relations என சொல்லப்படுகிறது. பொதுவாக மைய அரசுகள் அரசியல் பொருளாதார கலாச்சார அதிகாரத்தை தனது புற நிலங்கள் மீது பிரயோகம் செய்கின்றன. அதேபோல் புறநிலங்கள் மைய அதிகாரத்தில் தங்கி உள்ளனவாக இருப்பதுடன் வளப்பற்றாக்குறையாலும் நிதி முதலீடுகளின் போதாமையாலும் தவிப்பனவாக இருப்பது பொதுநிலை. மைய புறநில உறவுநிலை ஒரு அரசிற்கு மிக முக்கியமானதாகும்.

ஒரு புறநிலம் மையத்திற்கு உட்பட்டு இருக்க முடியாதநிலை தோன்றினால் அந்த மைய அரசு இராணுவ பலம் உட்பட அனைத்து பலங்களையும் திரட்டி தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்த முயற்சிகளை எடுக்கும். ஆனால், இன்று உலகின் பல்வேறு நாடுகளிலும் மையத்தின் மீது அதிருப்தி கொண்ட புறநிலங்கள் ஏறத்தாள ஒவ்வொரு நாட்டிலும் உள்ளன என்றே கூறலாம்.

இந்த அதிருப்தியை இனங்கண்டு கொள்வதற்கு பல்வேறு உதாரணங்களை காட்டலாம். ஒரு தேசியம் ஆதிக்கம் செலுத்தும் வலுவுடையதாகவும் ஏனையவை சிறுபான்மை இனங்களாகவும் கருதப்படுகின்றன. பொதுவாக பிரித்தானியாவை எடுத்து கொண்டால் இங்கிலாந்து மைய பலம் கொண்டதாகவும் வேல்ஸ், ஸ்கொட்லாண்ட் ஆகியன புறநிலங்களாகவும் உள்ளன.

ஒருநாட்டின் தலைநகரத்திற்கும் இதர நகரங்களுக்கும் இடையிலான வேறுபாடுகள் இதைவிட ஒரே தேசியத்திற்குள்ளேயே இருக்கக்கூடிய ஏற்றதாழ்வுகள் என மையத்திற்கும் புறநிலத்திற்கும் இடையிலான வேறுபாடுகள் எப்பொழுதும் இருந்த வண்ணமே உள்ளன.

இங்கே முக்கியமாக தெரிந்து கொள்ளவேண்டியது என்னவெனில் மேலைநாடுகளில் இத்தகைய வேறுபாடுகளை களைந்து கொள்வதற்கு பல்வேறு அமைப்புகள் உள்ளன. உதாரணமாக சட்டத்துறை நாடாளுமன்றம் இதர சமுக மனித உரிமை அமைப்புகள் என பல்வேறு வழிகளுடாக ஏற்றத்தாழ்வுகளை களைந்து கொள்வதற்கு வசதிகள் உள்ளன ஆனால், இலங்கை போன்ற நாடுகளில் நீதித்துறை மீதே அனைத்துலக அளவில் சந்தேகங்கள் இருப்பதை மறந்து விடலாகாது.

மறுபுறத்தில் சிறிய நாடுகளில் உள்ள மைய புறநில அதிருப்திகளை புரிந்துகொண்டு வல்லரசுகள் தமது நலன்களுக்கு ஏற்ற வகையில் இராஜதந்திரத்தை• பயன்படுத்துவதையும் எமது வரலாற்றில் கண்கூடாக கண்டு, வருகிறோம்.

இப்பொழுது எமது ஒப்பீட்டு அரசியலை புதிய நாடுகள் எத்தகைய வகையில் புறநிலங்களாக இருந்து தமது சுதந்திரங்களை பெற்றுக்கொண்டு தம்மை ஒரு மைய நிலங்களாக மாற்றிக் கொண்டன என்று பார்ப்போம்.

பனிப்போர் முடிவில் யூக்கோசிலாவியாவிலிருந்து பிரிந்து சென்ற சேர்பியாவின் ஒரு பகுதியாக இருந்த கொசவோ சேர்பிய தேசத்தின் பிடியிலிருந்து விடுபட்டு இன்று புதிய நாடாக மாறி உள்ளது. பல ஆயிரம் உயிர்களை பலிகொண்ட யுத்தங்களை கண்டிருந்தனர். தனித்துவமான கலாசாரம் தனித்துவமான புவியியல் அமைப்பு என்பனவற்றை கொண்ட கொசவோக்கள், சேர்பிய இராணுவ ஆக்கிரமிப்புக்கு உள்ளாகிய போதிலும் பொருளாதார ரீதியாக சேர்பியாவிலிருந்து பிரிந்து நின்றனர். சேர்பிய நிர்வாக கட்டமைப்புகளை புறக்கணித்தனர், அரசியல் ரீதியாக பிரிந்து செயற்பட்டனர். சேர்பிய நாணயத்தாள்கள் எரிக்கப்பட்டன. இவ்வாறு அனைத்து அரச கட்டுமானங்களும் சீர்குலைந்த நிலையில் சேர்பிய இராணுவ ஆதிக்கம் அட்டூழியம் மட்டுமே தனித்துவிடப்பட்ட நிலையில் அனைத்துலக தலையீட்டின் அவசியம் தேவைப்பட்டது.

ஆனால், தமிழ்மக்கள் மத்தியில் அனைத்துலக வல்லரசுகளின் சதிவலையே நமது இன்றைய நிலைக்கு காரணம் என்ற ஒரு எண்ணப்பாடுள்ளது. அனைத்துலக வல்லர சுகளைப் பொறுத்தவரையில் எந்த நாடாயினும் சரி முரண்பாடுகள் இருக்கவே செய்யும் என்பதுதான் அவர்களது பொதுவான கருத்து. இதனை மைய புறநிலங்களுக்கிடையிலான முரண்பாடுகளாகவே மேலைத்தேயம் இன்னமும் பார்க்கிறது. ஏனெனில் பல்வேறு மைய புறநில தகராறுகளுக்கான போராட்டங்கள் இன்னமும் மேலை நாடுகளில் நடந்த வண்ணமே உள்ளன.

ஆனால், இதர நாடுகளில் உள்ள முரண்பாடுகளை தத்தமது தேவைகளுக்கு ஏற்ப பொறிமுறைகளை கற்று கொள்வதுமேலைத்தேய வல்லரசுகளின் பொதுவான பண்பு. இந்நிலையில் ஈழத்தமிழர்கள் தமது தேவைகளை புரிந்து கொண்டு அனைத்துலக வரைமுறைகளுக்குள் செயலாற்ற வேண்டியது தேவையாக உள்ளது.

உதாரணமாக அமெரிக்காவுக்கான தெற்காசிய தூதுவர் றொபேட்தொடர்ச்சியாக ஈழத்தமிழர் தரப்பு இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தைகள் நடாத்த வேண்டும் என்று கேட்டுகொள்வது மேலைத்தேய அரசியல் சிந்தனைக்கு ஏற்ப அரசியல் பிரச்சினைகள் யாவும் பேசித்தீர்த்து கொள்ளப்பட வேண்டியன என்பதனாலாகும். அதேவேளை போர்க்குற்ற நிகழ்வுகளுக்கான விசாரணைகள் நடாத்தப்படாவிட்டால் ஈழத்தமிழர்களை ஆற்றமுடியாது என்பது தற்போது இவர்களின் சிந்தனையாக உள்ளது. இதற்கும் மேலாக பேசித்தீர்த்து கொள்ளக்கூடிய பிரச்சினைகளில் பிரிவினைவாதம் தள்ளிப்போடப்பட்டு கொண்டே போகும். இலங்கை அரசும் அதையே விரும்புகிறது.

ஆனால், பேரினவாத இலங்கை அரசோ அனைத்துலக அரசியல் நியதிகளை நன்கு புரிந்துகொண்டு தமிழ் மக்கள் மீதான அழுத்தங்களை இடைவிடாது திணித்த வண்ணம் பொருளாதார மற்றும் இன மேலாண்மையை செலுத்தும் பொருட்டு ஈழத்தமிழர் பிரதேசங்களில் புதிய அபிவிருத்திகளையும் சலுகைகளையும் செய்யும் அதேவேளை குடியேற்றத்திட்டங்களையும் காணிப்பறிப்புகளையும் நடாத்தி வருகிறது.

தனது ஆதிக்கத்தை அனைத்துலக மட்டத்தில் நிரூபிப்பதற்கு ஈழத்தமிழர் பிரதேசங்களில் தேர்தல்களையும் நடாத்திக் காட்டுகிறது. தேர்தல்களைப் பொறுத்த வரையில் ஈழத்தமிழர்கள் வாக்களித்தால் இலங்கையின் அரசியல் சட்டங்களையும் வரைமுறைகளையும் மதிக்கிறார்கள் என்பதே பொருள். வாக்களிக்காவிட்டால் ஈழத்தமிழர்கள் அரசியல்வாதிகளின் வெற்றுப்பேச்சுகளில் நம்பிக்கை அற்றநிலையை காண்பிக்கின்றார்களே தவிர அரசியலில் பங்கு பற்றவில்லை என்று பொருளல்ல.

ஏனெனில், ஜனநாயக நாடொன்றில் எதிர்ப்பு அரசியல் கூட போராட்டங்கள் மூலமாகத்தான் காண்பிக்கப்படுகிறது. ஆகவே ஈழத்தமிழர் பிரதேசங்களில் போராட்டங்கள் நடைபெற அனுமதிப்பதுகூட இலங்கை ஜனநாயக விழுமியங்களுக்கு அனுமதி அளிப்பதாகவே மேலை நாடுகளால் பார்க்கப்படுகிறது.

பேரினவாத பெரும்பான்மை கொண்ட நாடாளுமன்றத்திறக்கும் மேலைத்தேய பெரும்பான்மை தாராள ஜனநாயகத்திற்கும் இடையில் பாரிய வேறுபாடு உள்ளது. இலங்கையில் சட்டத்துறையே பேரினவாத தன்மை கொண்டது என்பதை மேலைத்தேய நாடுகளே அறிந்துள்ளன என்பதை ஏற்கனவே பார்த்தோம். மேலும் பேரினவாத பெரும்பான்மை ஜனநாயகத்தில் மைய புறநில உறவு நிலைகள் இல்லை. சிறுபான்மை இன அழிப்பும் ஆக்கிரமிப்புமே உள்ளது. அரச தலைவரின் அதீத அதிகாரங்கள் இன ஒழிப்பை நோக்காகக் கொண்ட பௌத்த சிங்கள மதத்தினால் கட்டுப்படுத்தப்படுகிறது என்பது ஆய்வாளர்கள் பலரது கருத்தாகும். பௌத்த சிங்கள துறவிகளும் அரச படைகளும் மிக நெருக்கமாக தமிழின அழிப்பில் செயலாற்றி வருகின்றனர்.

இந்நிலையில் நாடாளுமன்ற விவாதங்கள் ஊடாகவும் தேர்தல் ஊடாகவும் சட்ட வழக்குகள் ஊடாகவும் ஈழத்தமிழர்கள் தமது உரிமைகளை பெற்றுக் கொள்ளலாம் என்பது வெறும் பகற்கனவே ஆகும். அதேபோல் இலங்கையில் இடம்பெறும் அரசியலையும் ஆட்சியாளர்கள் கருத்துக்களையும் பற்றி பேசுவதிலும் எந்தவித பயனுமில்லை. ஈழத்தமிழர் மத்தியில் தற்போது விடப்பட்டுள்ளமை போராட்டம் ஒன்றுதான். எமது நிலம் எமக்கு வேண்டும் என்பதுடன் ஆக குறைந்தது முன்பு ஒருகாலத்திலே மைய லண்டன் ஆட்சியை எதிர்த்து புறநில இந்திய விடுதலைக்காக தியாகிகள் போராடிய ஒத்துழையாமை போராட்டமாகவாவது அமைவதுதான் அனைத்துலக கவனத்தை திசைதிருப்பவல்லது.

அதேவேளை ஈழத்தமிழர் தரப்பு தம்மத்தியிலே எழக்கூடிய மைய புறநில பிரச்சினைகளை கையாள்வதிலும் மிக கவனமாக இருக்க வேண்டியவர்களாய் உள்ளனர். ஏற்கனவே ஒருமுறை ஈழத்தமிழர் தரப்பில் மைய புறநில பிரச்சினையை 2005 ஆம் ஆண்டு இலங்கையும் வல்லரசுகளும் இணைந்து கிளிநொச்சியை மையமாகவும் கிழக்கு தமிழகத்தை புறநிலமாகவும் திரிபுபடுத்தி உருவாக்கி இருந்ததை மறந்து விடலாகாது. ஈழத்தமிழர்கள் தமது தரப்பு போராட்டத்தை அதிகார பரவலாக்கலுக்கு உட்பட்ட ஜனநாயக கட்டமைப்புக்குள் வைத்திருக்க வேண்டிய தேவை உள்ளது.

ஒருசிறுபான்மை தேசியம் மைய நிலமாகும் பொழுது அந்த மையம் ஒரு புறநிலத்தை கொண்டிருக்கும் என்பது பொதுவான நியதி. திட்டமிட்ட ஜனநாயக பண்புகளூடாகவே இத்தகைய வேறுபாடுகளை களைய முடியும். நாடுகடந்த தமிழீழ அரசின் சுதந்திரப்பிரகடன ஜனநாயகமும் இத்தகைய மைய புறநில பிரச்சினைகளுக்கான தீர்வை வரைவாகக் கொண்டிருக்க வேண்டியதன் அவசியம் உள்ளது.

லோ. பரமசாமி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வடமாகாண சித்தமருத்துவ கண்காட்சியும் கருத்தரங்கும்

வாருங்கள் எம் இனிய உறவுகளே!

வடமாகாணத்தின் சித்தமருத்துவத்துறையின் முழுமையான ஒழுங்கமைப்பில் அரச மூலிகைத் தோட்டம் அமைந்திருக்கும் நவக்கிரியில் (நிலாவரை கிணற்றுக்கு அண்மையில்) எதிர்வரும் 10, 11 மற்றும் 12ஆம் திகதிகளில் சித்த மருத்துவக் கண்காட்சியும் கருத்தரங்கும் கோலாகலமாக நடைபெறவிருக்கின்றது. சித்தமருத்துவ மாகாண பணிப்பாளர் வைத்திய கலாநிதி சியாமா துரைரட்ணம் அவர்களதும் அத்துறைசார்ந்த சித்த மருத்துவ வைத்தியர்கள் மற்றும் அவரது திணைக்கள உத்தியோகத்தர்களது அயராத உழைப்பின் பெறுபேறாகவே இக்கண்காட்சியையும்

அதிலும் இச்சூழலில் உள்ள உயிரினங்கள் தவிர தாவரங்கள் அனைத்துமே எமக்கு ஏதோ வகையில் பயன்தரக்கூடியன. குறிப்பாக நாம் உண்ணும் உணவில் மருத்துவ தன்மை நிறைந்தே இருக்கின்றது. அதனை இன்னும் சிறப்பாக்கி அனைத்து வகை உணவுகளையும் உண்ணும் நிலைக்கு நாம் வரும்போது தான் எமக்கு தேவையான அனைத்து ஊட்டச்சத்துக்கள், விற்றமின்கள் என்பனவற்றை நாம் பெறமுடியும். எமக்கு வரும் நோய்களை குணப்படுத்துவதற்கு இயற்கையின் வரப்பிரசாதமான மூலிகைகள் பெரிதும் பயன்படுகின்றன. மேலைத்தேய மருத்துவத்தினால் இயலாததை மூலிகைகளைக் கொண்டு மாற்றியிருக்கின்றார்கள்.

சித்த வைத்தியத்துறையில் ஆயுர்வேதம், சித்த வைத்தியம், யுனானி வைத்தியம் இன்னும் மூலிகை மருத்துவம் ஆகியன கிளைகளாக இருப்பினும் அவற்றை அழியவிடாது பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அனைவருக்குமானது. இவ் வைத்திய முறைகளுக்கிடையே ஒற்றுமை வேற்றுமையிருப்பினும் ஒவ்வொன்றும் தனித்துமானவையாகவே கருத வேண்டும். மேலும் மூலிகைகளின் கிடைத்தன்மை, அவற்றை சரியாக இனங்காணல், அவற்றினது பரம்பல், இன்னும் தேவைப்படும் மூலிகைகளை விருத்தி செய்தல் என்பனவற்றை முக்கியப்படுத்தி வருங்காலத்தில் மூலிகைப்பயிர்களை இன்னும் அழியவிடாது பேணிப் பாதுகாப்பதோடு அவற்



## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 28-I

பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்


கருத்தரங்கையும் நாம் கவனத்திற்கொள்ளலாம். முதன்முறையாக நடைபெறவிருக்கும் இக்கண்காட்சியில் பலவிடயங்கள் முக்கியத்துவப்படுத்தப்பட்டுள்ளமை இதனது சிறப்பை எடுத்துக்காட்டுகின்றது.

எமது பாரம்பரிய முறைகளுடன் பாரம்பரிய மருத்துவத்திற்கான முக்கியத்துவத்தையும் நாம் கொடுக்க தவறிவிட்டதை பலரும் சுட்டிக் காட்டும் இவ்வேளையில் இவ்வாறான கண்காட்சியினூடாகவும் கருத்தரங்கினூடாகவும் பலவிடயங்களை அனைவரும் தெரிந்து கொள்ளும் அரிய சந்தர்ப்பமாகவே நாம் இதனை நோக்க வேண்டும்.

முதலாம் நாளான 10ஆம் திகதியில் விருந்தினர்கள் மற்றும் முன்னைநாள் மாகாணப் பணிப் பாளர்களது உரைகள் இடம்பெறும். கண்காட்சியின் முக்கியத்துவம், கருத்தரங்கின் நோக்கம், எதிர்பார்ப்பு என்பனவும் இங்கு வருபவர்களுக்கு விளக்கப்படுத்தப்படும். இரண்டாம் நாளிலிருந்து இக்கருத்தரங்கிற்கு சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகள் ஆராய்ச்சி அமர்வுகளாகவே நடைபெறவிருக்கின்றன. தமிழில் சமர்ப்பிக்கப்படவுள்ள இக்கட்டுரைகளை அறிந்து தெரிந்து கொள்வதற்காகவும் கண்காட்சியிலும் கருத்தரங்கிலும் கலந்து கொண்டு பயன்களைப் பெறவும் அனைவரையும் வடமாகாண சுதேச மருத்துவத்துறை அன்புடன் அழைக்கின்றது. இக்கருத்தரங்கிற்கு கலந்து கொள்வதற்கான அனுமதி இலவசம் என வடமாகாண சுதேச மருத்துவத்துறை அறிவித்துள்ளதனை நாம் எமக்கு எல்லோருக்கும் வழங்கப்பட்ட அரிய வாய்ப்பாகவே கருதி தவறாது கலந்து பயன்பெற எழுதும் இக்கைகளும் பசுமையின் பெயரால் அழைக்கின்றன. வடமாகாணத்தில் முதன் முறையாக நடைபெறும் சித்தமருத்துவத்துறையின் கண்காட்சி விசேடமானது. நீண்டகாலமாக திட்டமிடப் பட்டு அதுவும் நவக்கிரியில் அமைந்த கற்பூமியைக் கிளறி அதில் அழகாக அனைவருக்கும் பயன்தரக்கூடிய வகையில் அரச மூலிகைத்தோட்டம் அமைக்கப்பட்டிருப்பது மிகவும் சிறப்புக்குரியது. எமது பாரம்பரிய வைத்தியத்தின் முக்கியத்துவத்தையும் வலிமையையும் எடுத்துக் கூறும் களமாகவே இக்கண்காட்சியைக் காணலாம். பல அரிய மூலிகைகளை விதம்விதமான வடிவங்களில் வளர்த்து இங்கே அழகுற காட்சிப்படுத்தியிருப்பது கண்கொள்ளாக் காட்சியாகும். "உணவே மருந்து, மருந்தே உணவு" என்பது வேதவாக்கு. நாமனைவரும் மிகவும் அக்கறைகொள்ள வேண்டியதனைத்தும் இதனுள்ளே அடக்கம். நாம் வாழுகின்ற சூழல் மிகவும் முக்கியமானது.

மேலும் மேலைத்தேய மருத்துவத்திற்கான மருந்துப்பொருட்கள் தாவரங்களிலிருந்தே கண்டுபிடிக்கப்படுகின்றன.

இத்தகைய மதிப்புள்ள சித்த மருத்துவத்துறை மக்களிடையே பிரபல்யமடையவதற்கு இம்மருத்துவத்துறை பற்றிய நம்பிக்கையும் விழிப்புணர்வும் முக்கியமானதாகும். இவ்விரண்டையும் மையமாக வைத்து இக்கண்காட்சியும் அதனுடனிணைந்த ஆராய்ச்சி



மாநாடும் நடைபெறுவது நல்லதொரு ஆரம்பமாகவே கொள்ளலாம். மாநாட்டின் பெறுபேறுகளை கட்டுரை வடிவிலும் தருவதற்கு இதன் ஒருங்கிணைப்பாளர்கள் ஏற்பாடு செய்து அதனை முதலாம் நாளிலேயே வெளியிடுவதற்கு வழிவகைகளைச் செய்திருக்கின்றார்கள். சித்தமருத்துவத்துறையை மேம்படுத்துவதற்கு பலவிடயங்களை பலபக்கத்திலிருந்து செய்ய வேண்டியிருக்கின்றது. இத்துறைசார்ந்த வைத்தியர்கள் அவசியம் சுதேச வைத்தியக்கலையான நாடிபிடித்து நோயை இனங்காண முயல வேண்டும். பாரம்பரியமாக வைத்தியஞ் செய்யும் சுதேச மருத்துவர்கள் நாடிபிடித்து நோயை இனங்காணும் வழிமுறையை, அனுபவத்தை விருத்தி செய்தல் வேண்டும். இவ்வழிமுறையில் பல வைத்தியர்கள் தமது வைத்தியத்தை செய்தாலும் ஏனையவர்களும் இதனை பின்பற்ற வேண்டும். அதுவே இவ்வைத்திய முறைமீது வைத்திருக்கும் நம்பிக்கையை அதிகரிக்கச் செய்யும். சித்தர்கள் அருளிய முறைகளை முறையே கடைப்பிடித்து நோயைக் குணமாக்கும் கலையை கற்றுக்கொள்ள வேண்டும் என்ற எதிர்பார்ப்பு பலரிடம் பலமாக இருக்கும் நிலையில் அதுபற்றிய சிந்தனையை சிறப்பை எண்ணிப்பார்ப்பது மிகவும் முக்கியமானது.

றின் பயன்பாட்டையும் மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். மேலைத்தேய வைத்திய முறைகளால் இயலாததை மூலிகை மருத்துவத்தால் குணமாக்க வேண்டும். இதற்காக சுதேச வைத்தியமுறைகளுக்கு முழுமையான சந்தர்ப்பம் வழங்கப்படுவதுடன் அவர்களது மருத்துவத்திற்கும் முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும்.

நமது நாட்டில் பலவகையான மூலிகைத் தாவரங்கள் உள்ளன. அருமை பெருமையாகவுள்ள இம்மூலிகைகளை அழியவிடாது பாதுகாததல் மிக முக்கியமானது. மேலும் சித்தவைத்தியத்தின் முக்கியத்துவத்தையும் ஆளுமையையும் சிறப்பையும் இதுபோன்ற கண்காட்சிகளை ஆங்காங்கே வைத்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். மூலிகை சார்ந்த ஆய்வுகளை முடுக்கிவிட்டு அதனது பயன்பாட்டை மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். இது பற்றிய ஆய்வுகள் விஞ்ஞானத் துறை, விவசாயத்துறை மற்றும் மருத்துவத் துறைகளில் செய்யப்பட்டாலும் சித்த மருத்து வத்துறையில் நடைபெற வேண்டியதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். இதற்காக சித்த வைத்தியத்துறையை தரமுயர்த்தி அதனை சித்த வைத்தியபீடமாக அல்லது சித்தவைத்திய நிறுவனமாக மேம்படுத்தும் நடவடிக்கைகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சித்த வைத்திய பாடத்திட்டத்தில் மாணவர்களது ஆராய்ச்சியும் உள்ளடக்கப்படுவதோடு இதன் மூலமாக பல துறைகளிணைந்து சித்த வைத் தியத்துறையை முன்னேற்ற வழிவகைகளை இக்கருத்தரங்கு ஏற்படுத்தித் தரும் என்ற நம்பிக்கையுடன் எமது சுதேச வைத்தியத் துறைபற்றிய விழிப்புணர்வுக்கு நாமும் இயன்ற வகையில் பங்களிப்போமாக.

யாழ்ப்பாண குடாநாட்டில் பரவலாக வடமாகாண சித்த வைத்தியத்துறையினால் மூலிகைத் தோட்டங்கள் அமைக்கப்பட்டு வருவது பாராட்டுக்குரியது. அதிலும் அராலியில், நவக்கிரியில், விவசாயத் திணைக்களத்தின் மாவட்ட பயிற்சி நிலையத்தில் என பல இடங்களிலும் இத்தோட்டங்கள் அமைக்கப்பட்டிருப்பது மாணவர்கள், மக்கள், விவசாயிகள் என பலரும் வந்து படிப்பதற்கு ஏதுவாக இருக்கின்றது. இன்னும் இது போன்ற மூலிகைத் தோட்டங்கள் வன்னி நிலப்பரப்பிலும் பரவலாக அமைக்கப்பட வேண்டும். கல்மடுவில் முன்பு இருந்த மூலிகைத் தோட்டத்தினை மீளப் புதுப்பித்து வடமாகாணத்திற்குரிய "மூலிகைத்தொழில்நுட்பக் கிராமம்" அமைக்கப்படவேண்டும். இதற்கான வசதிவாய்ப்புக்களையும் ஆராய வேண்டும். மேலும் வடமாகாணத்திலுள்ள மூலிகைககைளை பூகோள தகவல் ஒழுங்கு (Geographical Positioning System) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அவற்றை இலத்திரனியல் வரைபடத்தில் குறித்துவைத்திருப்பது எதிர்காலத்தில் அவற்றைப் பேணிப் பாதுகாக்க உதவும். இதற்கான சிறியளவிலான ஆய்வினை ஆரம்பித்திருந்தாலும் வடமாகாணத்திலுள்ள மூலிகைகளின் வகைகள், கிடைதன்மை, பரம்பல் என பலவிடயங்களை தகவலாக பதிவுசெய்ய வேண்டியதன் அவசியத்தையும் இதில் வலியுறுத்த விரும்புகிறேன். விவசாயத்தின் பக்கத்தில் மூலிகைகளின் சிறப்பைப் பயன்படுத்தி பீடைகளையும் நோய்களையும் கட்டுப்படுத்துவதற்கான வாய்ப்புக்களை ஆய்வு மூலம் கண்டறிய முயற்சிகள் நடைபெறுகின்ற அதேவேளையில் பலதுறைகளிணைந்த ஆய்வுகளுக்கும் களமமைக்க வழி செய்தல் வேண்டும்.

பல்துறை வாய்ப்புக்களையும் பல செய்திகளையும் தாங்கி நடைபெறவிருக்கும் வடமாகாண சித்தமருத்துவ கண்காட்சியும் கருததரங்கும் சிறப்பாக நடைபெற நாமும் வாழ்த்துவதோடு அனைவரையும் இதில் கலந்து பயன்பெறுமாறு அழைக்கின்றோம்.

இனியொரு பசுமைப்புரட்சியில் மூலிகைத் தாவரங்களையும் பணப்பயிராக பயிர்செய்யும் வாய்ப்புக்களையும் எதிர்பார்த்து விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு தீர்வும் கிடைக்க வழிசெய்ய வேண்டும். அனைத்தையும் எதிர்பார்ப்போம், வழியும் கிடைக்கும். முயன்றால் எதுவும் சாத்தியமே.

# வடமாகாண வாகனங்களுக்கு கட்டாயம் புகை பரிசோதனை

(கொழும்பு)

வடமாகாணத்தில் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்களுக்கு புகை பரிசோதனை மேற்கொள்ளப்படுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக மோட்டார் பதிவுகள் ஆணையகம் விடுத்துள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் புகை பரிசோதனை இதுவரையில் மேற்கொள்ளப்படாமையால் அங்கு சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்து அவதானம் செலுத்த வேண்டியுள்ளது.

இந்த நிலையில் புகை பதிவை மேற்கொள்ளாத வாகனங்களின் பதிவுகள் வழங்கப்படமாட்டாது என்றும் ஆணையகத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நாட்டில் எல்லாப் பகுதிகளிலும் புகை பரிசோதனை மேற்கொள்ளக் கூடிய வசதிகள் இருக்கின்ற நிலைகளில் இந்த விடயத்தில் வடமாகாணத்தில் சிக்கல் ஏற்படாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் புகை பரிசோதனை மேற்கொள்ளப்படாதுள்ள நிலையில் வடமாகாணத்தில் இருந்து தென்னிலங்கை நோக்கி வருகின்ற வாகனங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க முடியாதிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# விளக்கமறியல் சிறைச்சாலையில் போதைப் பொருட்கள் மீட்பு

கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் நடத்தப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போது ஒரு மில்லியன் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

அத்துடன் ஈஸிகேஷ் மூலம் சுமார் இரண்டரை இலட்சம் ரூபாவுக்கு பண கொடுக்கல் வாங்கல்களில் சிறைக்கைதிகள் ஈடுபட்டுள்ளமை தெரிய வந்திருப்பதாகவும் சிறைச்சாலைகள் ஆணையாளர் கூறியுள்ளார்.

இதற்கு மேலதிகமாக 43 கையடக்க தொலைபேசிகள், 07 வயர்கள், 23 சிம்காட்டுக்கள் பெரும் எண்ணிக்கையான லைட்டர்கள் என்பனவும் மீட்கப்பட்டுள்ளன.

சிறைச்சாலைகளுக்குள் இடம்பெற்று வரும் போதைப்பொருள் வியாபாரத்தினை ஒழிக்கும் முகமாக திடீர் சுற்றிவளைப்புக்களை முன்னெடுக்குமாறு சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீர விடுத்த பணிப்புரைக்கமையவே நேற்று முன்தினம் இந்தத் திடீர் சுற்றி வளைப்பு முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது சிறைச்சாலையின் சி மற்றும் டி பிரிவுகளில் நடத்தப்பட்ட திடீர் சுற்றிவளைப்புக்களின் போதே இவை கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும் சி பிரிவுக்குள்ளிலிருந்து 54 கிராம் ஹெரோயினும் டி பிரிவுக்குள்ளிருந்து 64 ஹெரோயின் பக்கெற்றுக்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தகர் கொலை தொடர்பில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது

(கொழும்பு)

கொழும்பு பம்பலப்பிட்டியவில் கடந்த வாரத்தில் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்ட வர்த்தகர் ஒருவர் தொடர்பில் உதவி பொலிஸ் அதிகாரி ஒருவரும் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றப்புலனாய்வு பொலிசார் இவர்களைக் கைது செய்துள்ளனர். அத்துடன் உதவி பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்த்தனவிடமும் குற்றப்புலனாய்வு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

கடந்த மே 22 ஆம் திகதி இந்தக் கடத்தலும் கொலையும் இடம்பெற்றது.

இதன்போது . வர்த்தகரான 35 வயது மொஹமட் ஷியாம் என்பவர் கொலை செய்யப்பட்டார். இவரின் சடலம் தொம்பே என்ற இடத்தில் இருந்து மீட்கப்பட்டது. (அ-2)

# இந்திய பிரதிநிதிகளுடன் மூடிய அறைக்குள் பேச்சு

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இந்திய எதிர்க்கட்சிப் பிரதிநிதிகளுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது.

பாரதீய ஜனதா தளம் ,சிவ்சேனா, ஆர்.எஸ். எஸ் போன்ற கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்துள்ளது.

> “ இது மூடிய கதவு பேச்சுவார்த்தையாக அமையும் என அரசாங்கத்தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
>
> அமைச்சர் கே.என் டக்ளஸ் தேவானந்தா, அமைச்சர் ரவூப் ஹக்கீம், அமைச்சர் சுசில் பிரேமஜயந்த , அமைச்சர் தினேஸ் குணவர்த்தன , அமைச்சர் அனுர பிரியதர்சன யாபா ஆகிய முக்கிய அமைச்சர்கள் இந்தப் பேச்சு வார்த்தைகளில் பங்கேற்கவுள்ளனர்.

ஆளும் கட்சியின் ஆறு சிரேஷ்ட அமைச்சர்கள் உள்ளிட்ட பிரதிநிதிகளுடன் இந்திய பிரதிநிதிகள் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

இது மூடிய கதவு பேச்சுவார்த்தையாக அமையும் என அரசாங்கத்தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சர் கே.என் டக்ளஸ் தேவானந்தா, அமைச்சர் ரவூப் ஹக்கீம் ,அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, அமைச்சர் தினேஸ் குணவர்த்தன , அமைச்சர் அனுர பிரியதர்சன யாபா ஆகிய முக்கிய அமைச்சர்கள் இந்தப் பேச்சுவார்த்தைகளில் பங்கேற்கவுள்ளனர்.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் தலைவர் சீ.ஆர். சில்வா, புலனாய்வுப் பிரதித் தலைவர் ஹெந்தா விதாரண,ரியர் அட்மிரல் ஜயந்த பெர்னாண்டோ,முன்னாள் சட்ட ஆலோசகர் ரொஹான் பெரேரா உள்ளிட்ட முக்கியஸ்தர்களும் இந்தச் சந்திப்பில் பங்கேற்கவுள்ளனர்.

13ஆவது திருத்தச் சட்டம், வடக்கு மாகாணசபைத் தேர்தல், அதிகாரப் பகிர்வு, போர் இடம் பெற்ற வலயங்களின் அபிவிருத்தி, மக்களின் புனர்வாழ்வு உள்ளிட்ட பல்வேறு முக்கிய விடயங்கள் குறித்து இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# குறும்பட வெளியீடும் அறிமுக விழாவும்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு முகிலனின் தோட்டி குறும்பட வெளியீடும் சாம்பல் குறும்பட அறிமுக விழாவும் இன்று சனிக்கிழமை மாலை 3.45 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமார சுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளன. இந்நிகழ்வுகள் வடமாகாண கல்வி அமைச்சின் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் என். ஸ்ரீதேவி தலைமையில் இடம்பெறவுள்ளதோடு, இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வட மாகாண ஆளுநரின் செயலாளர் ல.இளங்கோவன், சிறப்பு விருந்தினர்களாக, மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் சரோஜா சிவசந்திரன், யாழ். இந்துக் கல்லூரி அதிபர் வீ.கணேசராஜா, வடமாகாண கல்வி அபிவிருத்திக் குழுத் தலைவர் இரா.செல்வவடிவேல் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக ஆளுநர் செயலக உதவிச் செயலாளர் ஜே. எக்ஸ். செல்வநாயகம், வடமாகாண திரைப்பட சங்கத் தலைவர் ந.கேசவராஜா, எழுத்தாளர் ராஜ்குமார் ரஞ்சன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

தொடர்ந்து தோட்டி குறும்படத்தின் முதல் இறுவெட்டை ப.சிவபாஸ்கரன் பெற்றுக்கொள்ள, ஆய்வுரையை ந.வித்தியாதரன் ஆற்றவுள்ளார்.

சாம்பல் குறும்படத்தின் முதல் இறுவெட்டை ரி. திலகராஜ் பெற்றுக் கொள்ள, ச.லலீசன் ஆய்வுரையை நிகழ்த்தவுள்ளார். (அ-2)

# ஆவணங்களின்றி தங்கியிருந்த 14 அகதிகள் பொலிஸாரால் கைது

கொச்சியில் போதிய ஆவணங்கள் இன்றி தங்கியிருந்த இலங்கையை சேர்ந்த 14 அகதிகளை பொலிஸார் கைது செய்தனர்.

கேரளாவில் கொச்சி பேருந்து நிலையம் அருகே உள்ள விடுதியில் இலங்கையைச் சேர்ந்த சிலர் இரசியமாக தங்கியிருப்பதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

இதனையடுத்து போதிய ஆவணங்கள் இல்லாமல் சிலர் தங்கியிருப்பது தெரிய வந்தது. பொலிஸார் அவர்களிடம் விசாரணை நடத்தினர்.அவர்கள் இராமேஸ்வரம் மதுரை ஆகிய இடங்களில் உள்ள அகதிகள் முகாமில் இருந்து வந்தவர்கள் என்பதும் கொச்சியில் பெயின்டிங் வேலைக்காக முகவர் அழைத்து வந்ததாகவும் தெரிவித்தனர்.

பின்னர் 14 பேரையும் கைது செய்து ஒரு இடத்தில் தங்க வைத்துள்ளனர். அவர்களை அழைத்து வந்த முகவர் தலைமறைவாகீ விட்டார்.அவரை பொலிஸார் தேடி வருகின்றனர். (அ-2)

# சிவசிதம்பரத்துக்கு அஞ்சலி நிகழ்வு

(கொழும்பு)

இலங்கையின் முன்னாள் பிரதி சபாநாயகரும் தமிழர் விடுலைக் கூட்டணியின் தலைவருமான அமரர் எம். சிவசிதம்பரத்தின் 11 ஆவது ஆண்டு சிராத்த தின நிகழ்வு கடந்த 5 ஆம் திகதி யாழ். தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அன்னாரின் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை சூட்டி அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதில் பிரதேச சபைத் தலைவர்கள், உறுப்பினர்கள் ,பல கட்சிப் பிரமுகர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)

# ரயிலில் மோதுண்டு ஒருவர் பலி

(பம்பலப்பிட்டி)

புகையிரதத்தில் மோதுண்டு ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் கொழும்பு பம்பலப்பட்டி கடற்கரைப்பகுதியில் இடம்பெற்றுள்ளது. மருதானையில் இருந்து பாணந்துறை நோக்கிச் சென்ற புகையிரதத்தில் மோதுண்டே குறித்த நபர் உயிரிழந்துள்ளார்.

சடலம் அடையாளம் காணப்படாத நிலையில் களுபோவில, வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக பம்பலப்பிட்டி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு இன்று நியமனக் கடிதம் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

சமுர்த்தி அபிவிருத்தி அதிகார சபைக்குள் நியமனம் பெற்ற உத்தியோகத்தர்கள் பிரதேச செயலகங்களில் கடமையாற்றுவதற்கான நியமனக் கடிதங்கள் இன்று சனிக்கிழமை வழங்கி வைக்கப்படவுள்ளதாக யாழ். மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் எஸ். மகேஸ்வரன் தெரிவித்தார்.

கடந்த முதலாம் திகதி யாழ். மாவட்டத்தில் சமுர்த்தி அபிவிருத்தி அதிகார சபையில் உள்வாங்கப்பட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கான பயிலுநர் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

அவர்களுக்கான பயிற்சி நேற்று வெள்ளிக்கிழமையுடன் நிறைவு பெற்றதையடுத்து பிரதேச செயலகங்களில் கடமையாற்றுவதற்கான நியமனக் கடிதங்களை வழங்கி வைக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

நாளை மறுதினம் திங்கட்கிழமையிலிருந்து யாழ். மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலகங்களிலும் இவர்கள் கடமையாற்றுவதற்கான நியமனக்கடிதங்களை வழங்கி வைக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்ததோடு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ள நிகழ்வில் சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கான நியமனக் கடிதங்களை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமை நாயகம் வழங்கி வைக்கவுள்ளார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# மாணவர்களிடையே மோதல்;6 பேர் காயம்


களனி பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர் குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் காயமடைந்த நிலையில் ஆறு பேர் கிரிபத்தொட மற்றும் ராகம வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த மோதல் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

களனி பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் கல்வி பயிலும் விடுதி மாணவர்கள் மற்றும் வெளி மாணவர்களுக்கு இடையில் இம் மோதல் ஏற்பட்டுள்ளது.

தாக்குதலில் காயமடைந்த இரண்டு மாணவர்கள் கிரிபத்கொட வைத்தியசாலையிலும் நால்வர் ராகம வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (அ-2)







தேசிய சேமிப்பு வங்கியின் யாழ். திருநெல்வேலி கிளையினால் தரம் –5 புலமைப்பரிசில் சித்தியடைந்த மாணவர்களுக்கு பதக்கமும் பாடசாலை உபகரணங்களும் நேற்று முன்தினம் மாலை வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் தேசிய சேமிப்பு வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் வி.அருளானந்தன்,வங்கியின் திருநெல்வேலி கிளையின் முகாமையாளர் திருமதி சித்ரா தயானந்தன் ஆகியோர் மாணவர்களுக்கு பதக்கத்தையும் பாடசாலை உபகரணங்களை வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:– எஸ்.ஆர்.கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடகொரியாவின் அழைப்பை ஏற்றது தென்கொரியா

கடந்த சில மாதங்களாக நிலவிய பதற்றத்துக்கு பின் முதன்முறையாக இருநாடுகளும் பேச்சுவார்த்தை நடத்த உள்ளன. இரு தரப்புக் கும் இடையே பேச்சுவார்த்தை நம்பிக்கையை ஏற்படுத்தும். பேச்சுவார்த்தைக்கான நாள், நேரம் குறித்து பின்னர் தெரிவிக்கப் படும் என தென் கொரியா ஒருங்கிணைப்பு அமைச்சக செய்தித் தொடர்பாளர் கிம் யூங் சக் தெரிவித்துள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதம் வட கொரியா அணு ஆயுதச் சோதனை நடத்தியதை அடுத்து இரு நாடுகளிடையே பதற்றம் ஏற்பட்டது. அமெரிக்காவும், தென்கொரியாவும் தொடர்ந்து போர் பயிற்சியில் ஈடுபட்டன. வடகொரியாவும் அவ்வப்போது தாக்குதல் நடத் தப்போவதாக மிரட்டியது.

இந்நிலையில் வட கொரியாவில் செயற்படும் கொரிய ஒருங்கிணைப்பு குழு வெளியிட்ட அறிக்கையில், கூட்டுத் தொழில் மண்டலத்தை மீண்டும் திறப்பது உட்பட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். தென்கொரியாவுக்கு வசதியான நேரம், நாளில் பேச்சுவார்த்தை நடத்தலாம்.




**பல்வேறு விவகாரங்கள் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த வருமாறு வடகொரியா விடுத்த அழைப்பை தென்கொரியா ஏற்றுக்கொண்டது.**

கேசாங் கூட்டுத் தொழில் மண்டலத்தை திறப்பது, இரு நாடுகளில் உள்ள சுற்றுலா தலங்களுக்கு பொதுமக்கள் வருகை, மேலும் பிரிந்த குடும்பங்களை ஒன்று சேர்ப்பது தொடர்பாக முதலில் பேச்சு நடத்தலாம் எனத் தெரிவித்துள்ளது. தென் கொரியா இதற்கு உடன்பட்டால், ஏற்கனவே முடக்கப்பட்ட ஹாட்லைன் சேவை மீண்டும் தொடங்கப் படும்.

இருதரப்புக்கும் இடையே நம்பிக்கையை ஏற்படுத்த தென் கொரிய அதிகாரிகள் விரும்பினால் அவர்கள் இந்த நல்லவாய்ப்பைத் தவறாமல் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே கேசாங் கூட்டுத்தொழில் மண்டலத்தில் ஆலைகளுக்கு மூலப் பொருட்கள் அனுப்புவது தொடர்பாக பேசலாம் என தென்கொரியா தெரிவித்திருந்தது.

அணு ஆயுதங்கள் உற்பத்தியை வடகொரியா கைவிட்டால் தான் இரு தரப்பும் பேச்சுவார்த்தை நடத்தமுடியும் என தென்கொரிய ஜனாதிபதி பார்க்கியூன் ஹை ஏற்கனவே தெரிவித்திருந்தார்.

ஆனால் அணு ஆயுதங்கள் தொடர்பாக எந்த பேச்சுவார்த்தையும் நடத்த முடியாது என வடகொரியா திட்டவட்டமாக தெரிவித்துவிட்டது.

*தென்கொரியா ஒப்புதல்*

இதற்கிடையே கேசாங் கூட்டுத் தொழில் மண்டலத்தை மீண்டும் திறப்பது தொடர்பாக வட கொரியாவுடன், பேச்சு நடத்த தென் கொரியா ஒப்புக் கொண்டது. (அ-2)

## விவாகரத்து பெற்றார் ரஷ்ய ஜனாதிபதி புடின்

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், அவரது மனைவி லியுத்மிலாவின் 30 வருடகால திருமண வாழ்க்கை முடிவுக்கு வந்துள்ளது.

30 வருட திருமண வாழ்க்கைக்குப் பின்னர் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினும் அவரது மனைவி லியுத் மிலாவும் நேற்றுமுன்தினம் தங்களது விவாகரத்து பற்றி அறிவித்தனர்.



கிரெம்ளின் மாளிகையில் நடைபெற்ற பாலே நடன நிகழ்ச்சியில் பங்கு பற்றிய பின், இந்த அறிவிப்பை ஜனாதிபதி புடின் வெளியிட்டார். இது தாங்கள் இருவரும் இணைந்து எடுத்த முடிவு என்றும் அவர் கூறினார்.

1983 ஆம் ஆண்டு திருமணமான இவர்களுக்கு, மரியா, யேகடெரினா என்ற இரண்டு புதல்விகள் உள்ளனர். நீண்ட வருடங்களாக ரஷ்யாவின் அரசியலில் தலைமைப் பதவியில் இருக்கும் ஜனாதிபதி புடினுடன், அவரது மனைவி எந்த இடத்திலும் சேர்ந்து காணப் பட்டதில்லை. அடிக்கடி பயணங்களை மேற்கொள்ளும் இருவரும் ஒன்றாக எங்கும் சென்றதில்லை.

இருவரும் நெருக்கமானவர்களாகவே இருப்போம். அவர் எனக்கு ஆதரவு அளிப்பதற்கு நன்றி என்று அவரது மனைவி லியுத்மிலா கூறினார்.

நிகழ்ச்சியின் போது ஜனாதிபதி புடின் ஒதுங்கியிருப்பது போல் இருந்தார். மனைவி லியுத்மிலாவோ ஒப்புக்கு சிரிப்பது போல் தோன்றினார். மற்ற மேற்கத்தேய நாடுகளைப் போல்இல்லாமல், ரஷ்யத் தலைவர்களின் துணைவிகள் பொதுவாக அரசியல், பொது வாழ்க்கையில் இணைந்து தோன்ற மாட்டார்கள். பழைமைவாத நாடாக இருந்த போதிலும், அங்கும் விவாகரத்துக்கள் சகஜமான ஒன்றாகத்தான் இருக்கின்றன. (அ-2)

## மருத்துவமனையில் இளவரசர் பிலிப்

பிரிட்டன் இளவரசர் பிலிப் உடல் நலக் குறைவு காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார். இது குறித்து பக்ஹிங்ஹாம் அரண்மனை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் பிலிப் (வயது 91). வயிற்றில் ஏற்பட்ட அசௌகரியம் காரணமாக அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

எனவே, 2 வார காலம் தங்கி ஓய்வெடுப்பார் என தெரிவிக் கப்பட்டுள்ளது. இது வரையிலும் 4 முறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளார். (அ-2)




இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள மாலைதீவு முன்னாள் ஜனாதிபதி மாமூன் அப்துல் கயூம் புதுடில்லியில் உள்ள இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித்தை சந்தித்து கைலாகு கொடுப்பதைப் படத்தில் காணலாம்.

## சூரியனை ஆராய அதிநவீன ஐரிஸ் செயற்கைக்கோளை ஏவுகிறது நாசா

அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசா, சூரியனின் அடிப்பகுதி குறித்து விரிவான விபரங்களைப் பெற நவீன அறிவியல் செயற்கைக்கோள் (ஐரிஸ்) ஒன்றை எதிர்வரும் 26 ஆம் திகதி ஏவ முடிவு செய்துள்ளது.

இதில் இயங்கும் ஐரிஸ் டெலஸ்கோப், சூரியனின் அடிப்பகுதியில் இருந்து வெளியேறும் புற ஊதாக்கதிர்கள் குறித்து ஆராய்ந்து மிகத் துல்லியமாக புகைப்படங்களை அனுப்பிவைக்கும்.



இது குறித்த கண்காணிப்பில் ஈடுபடும் ஐரிஸ் குழுவானது, சூரியனில் உள்ள பொருட்கள் எவ்வாறு இயங்குகின்றன. அது எவ்வாறு சக்தியைப் பெறுகின்றது. மேலும் சூரியனின் சுற்றுப் புறத்தில் எவ்வாறு வெப்பம் வெளியேறி பரவிச் செல்கின்றது என்பது குறித்தும் கண் காணிக்கும்.

சூரியனின் மேற்பரப்பு மற்றும் சுற்றுப்புறம் ஆகியவற்றின் இடைப்பட்ட பகுதி இவற்றில் எங்கிருந்து புற ஊதாக் கதிர்கள் உருவாகின்றன என்றும் ஆராயும். இந்த புற ஊதாக்கதிர்கள் தான் பூமியின் கால நிலை மற்றும் பூமியின் காற்று மண்டலத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

இந்தக் கண்டுபிடிப்புகள் சூரியனை பற்றி மேலும் பல தகவல்களை அறிந்துகொள்ள உதவும் என்று கூறப்படுகிறது. (அ-2)

## ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட சட்டதிருத்தத்தை கோருகிறார் சூகி



மியன்மாரில் எதிர்வரும் 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலில் ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிட ஆங் சான் சூகி விரும்புவதாக தெரிவித்துள்ளார்.

இந்தத் தேர்தலுக்காக அவரின் ஜனநாயக தேசிய லீக் கட்சி தயாராகி வருகிறது. அந்த நாட்டின் அரசியலமைப்புச் சட்டப்படி வெளிநாட்டினரை திருமணம் செய்து கொண்டவராகவோ அல்லது ஒருவரின் குழந்தைகள் வெளிநாட்டு குடியுரிமை பெற்று இருந்தாலோ ஜனாதிபதியாக முடியாது.

ஆங் சான் சூகி லண்டன் நாட்டு நபரை திருமணம் செய்து கொண்டவர் என்பதால் அவர் தேர்தலில் போட்டியிடுவதில் சிக்கல் இருந்து வருகிறது. இந்த நிலையில் நேற்றையதினம் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் சூகி கலந்து கொண்டார்.

அப்போது இது குறித்து அவர் கூறுகையில்,

"நான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட விரும்புகிறேன் என்பதை வெளிப்படையாக தெரிவித்துக் கொள்கிறேன். நான் ஜனாதிபதியாக வர விரும்பவில்லை என்று பாசாங்கு செய்தால், அது உண்மையாக இருக்காது" என்றார்.

இராணுவ ஆட்சியாளர்களால் கொண்டு வரப்பட்ட அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரவேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். (அ-2)




## பெயரை மாற்றினார் நவாஷ் ஷெரீப்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் பிரதமராக பொறுப்பேற்றுள்ள நவாஷ் ஷெரீப், முதல் நடவடிக்கையாக தன் அலுவலகத்தின் பெயரை மாற்றியுள்ளார்.

இதுவரை ''பிரதமரின் செயலகம்'' என்ற பெயரில் அழைக்கப்பட்டு வந்தது. இதை ''பிரதமரின் அலுவலகம்'' என்று அவர் பெயர் மாற்றியுள்ளார்.

மேலும், தனக்கு நம்பிக்கையான பஞ்சாப் மாகாணத்தைச் சேர்ந்த மூத்த அதிகாரியான நசீர்முகமது கோசாவை, பிரதமர் அலுவலக செயலாளராக நியமித்துள்ளார். இதே போல் மற்றொரு அதிகாரியான பவாத்ஹாசன் பவாத்தை துணைச் செயலாளராக நியமித்துள்ளார். (அ-2)

## ஆப்கானில் மனித வெடிகுண்டு தாக்குதல்; 6 வீரர்கள் பலி !

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் மனித குண்டு தாக்குதலில் 6 ஜோர்ஜியா வீரர்கள் பலியாகினர். 9 வீரர்கள் காயமடைந்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் முகாமிட்டிருக்கும் நேட்டோ படையில் ஜோர்ஜியா நாட்டின் இராணுவ வீரர்கள் இடம்பெறவில்லை. ஆனால், ஆயிரத்து 500 ஜோர்ஜியா வீரர்கள் ஹெல் மாண்டு பகுதியில் முகாமிட்டு பல்வேறு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந் நிலையில், ஜோர்ஜியா இராணுவ வீரர்கள் ஹெல் மாண்டு பகுதியில் ஒரு வாகனத்தில் சென்று கொண்டிருந்தனர். அப்போது, வெடிகுண்டு நிரப்பிய லொறியை



இராணுவ வீரர்களின் வாகனம் மீது தற்கொலை படை தீவிரவாதிகள் மோதி வெடிக்க செய்தனர்.

இதில் 6 இராணுவ வீரர்கள் பரிதாபமாக இறந்தனர். 9 வீரர்கள் காயமடைந்தனர். வாகனமும் தூள்தூளாக நொருங்கியது. அவர்கள் அனைவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் பிரதிநிதிகளின் குரலைக்கேட்டு உரிமை வழங்க மறுக்கிறது இலங்கை அரசு

## 13 ஆவது திருத்தத்திற்கும் வேட்டு; வீரமணி கொந்தளிப்பு



ராஜீவ் - ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தின்படி நிறைவேற்றப்பட வேண்டிய 13ஆவது அரசமைப்புச் சட்டத்தை நிறைவேற்றாமல் அதை உருக்குலைக்கும் வகையில் இலங்கை அரசு செயற்படுகிறது என திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். அதில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் வருமாறு,

இலங்கையில் வாழும் ஈழத் தமிழர்களை யுத்தத்தின் போது குண்டு வீச்சு மூலம் இனப்படு கொலை செய்யப்பட்டும் எஞ்சிய ஈழத் தமிழர்கள் சிலரையும் கடத்திச் சென்றும் காணாமற் போனவர்கள் பட்டியலில் சேர்த்தும் சிங்கள ஆட்சி அதிகாரம் நாளுக்கு நாள் ஈழத் தமிழர்களுக்கு வாழ்வுரிமையை அளிப்பதற்குப் பதிலாக அழிப்பதற்கே திட்டமிட்டு செயற்பட்டு வருகிறது.

இந்திய அரசு ஈழத் தமிழர்களைக் காப்பாற்றுவோம் என்று கொடுத்த வாக்குறுதிப்படி நடந்து கொள்ளவில்லையே. ஏறத்தாழ போர் முடிந்து நான்கு ஆண்டுகள் முடியும் நிலையில் அவர்களுக்குள்ள அடிப்படை உரிமைகள் கூட பறிக்கப்பட்டு வரும் நிலைதானே உள்ளது என்று ஏன் தட்டிக் கேட்காமல் வாய் மூடி மௌனியாக இந்தியா வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது.

13ஆவது அரசியல் சட்டத் திருத்தம் என்பதைக்கூட முறையாக செய்யவில்லை. இலங்கை அரசு ஏற்கனவே இந்திய அரசுக்குக் கொடுத்த வாக்குறுதியைக் காற்றில் பறக்கவிட்டு விட்டது. குறைந்தபட்ச அந்த உரிமைகள் கூட வழங்காதது மட்டுமல்ல, ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் என்பதற்கொப்ப அதனையே அடியோடு பறித்திட இப்போது 13ஏ என்ற ஒரு புதிய சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்துள்ளனர்.

விடுதலைப்புலிகளை அழித்து விட்டோம் என்றும் தலைவர்களைக் கொன்று விட்டோம் என்றும் பெருமிதத்துடன் நாடு திரும்பிய நிலையில் இலங்கை அரசு இலங்கை மண்ணை முத்தமிட்டு இனி இந்த நாட்டில் பெரும்பான்மை, சிறுபான்மை என்ற பிரச்சினையே கிடையாது என்று கூறியதே அதற்குப் பொருள் என்னவென்பது இப்போது இத்தகைய உரிமைப் பறிப்புகளின் மூலம் கோடிட்டு காட்டுகின்றன.

உலகம் இதனை வேடிக்கை பார்க்கலாமா? நான் தமிழர்களுக்கு எதிராகப் போர் நடத்தவில்லை. பயங்கரவாதத்திற்கு எதிராக மட்டும்தான் போர் நடத்தி, மக்களைக் காப்பாற்றுகிறேன் என்ற இலங்கை ஜனாதிபதியின் கூற்று எத்தகைய மாயாஜாலம்.

தமிழ்நாட்டில் இலங்கை இராணுவத்திற்குப் பயிற்சி அளிக்க மாட்டோம் என்று கூறி, சாமர்த்தியமாக இங்குள்ள தமிழர்களை ஏமாற்றலாமா மத்திய அரசு? இந்தியாவின் இதர மாநிலங்களில் நாங்கள் பயிற்சி தருவோம் என்றுதானே சொல்லாமல் செய்கின்றது - மத்திய அரசும், அதன் இராணுவ அமைச்சும்?


தமிழ் இன அழிப்பு வேலைக்கு தமிழ்நாடு அல்லாத மாநிலங்களில் இலங்கை இராணுவப் படைக்குப் பயிற்சி அளித்து அழிக்கலாமா? அது சரியா? இந்த நிலையில், அரசியல் தீர்வு எதையும் செய்யாதது மட்டுமல்ல, ராஜீவ் காந்தி - ஜெயவர்த்தன ஒப்பந்தம் என்ற ஒன்றை ஒப்புக்காகக்கூட செயற்படுத்துகிறோம் என்று சொல்லி, 13ஆவது திருத்தத்தை 13ஏ என்ற புதிய சட்டத் திருத்தத்தின் மூலம் பறிக்கும் - அல்லது இரத்து செய்யும் நிலைக்கே சென்று கொண்டுள்ளதை இந்திய அரசு வேடிக்கை பார்ப்பது நியாயமில்லை.

இந்த நியாயமான கோரிக்கைகளை இந்திய அரசு அலட்சியப்படுத்தி, எங்களுக்குத் தமிழ்நாட்டுத் தமிழர்கள், உலகத் தமிழர்கள் குரலும், உலக மனிதநேயர்களின் கோரிக்கையும் முக்கியமல்ல என்று கூறி அலட்சியப்படுத்தப் போகிறதா? தெளிவுபடுத்த வேண்டியது அவசரம் - அவசியம் அல்லவா?

வெறுமனே ஆயிரம் கோடி ரூபாய் அளிப்பு 7ஆவது இராணுவப் பயிற்சியும் தமிழ் இனத்தை வாழ வைக்கவா? அழிக்கவா? என அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கேள்வி எழுப்பியுள்ளார். (அ-2)




## பிரதமர் வேட்பாளரை அறிவிக்க கூடுகிறது பாரதிய ஜனதா கட்சி



(புதுடில்லி)

பாரதிய ஜனதாவின் தேசிய செயற்குழு கோவாவில் கூடவுள்ளது. இதன்போது அக்கட்சியின் பிரதமர் வேட்பாளர் யார் என்பதை திட்டவட்டமாக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுக்கும் என தகவல் வெளியாகியுள்ளது.

கோவாவில் ஆரம்பமாகும் இக்கூட்டத்தில் நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலை எதிர்கொள்வது குறித்து விவாதிக்கப்படும் எனத் தெரிகிறது.

இந்தக் கூட்டத்தில் பிரதம வேட்பாளராக குஜராத் முதல்வர் நரேந்திர மோடியை முன்நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையும், கூட்டணி விபரத்தை தெரிவிக்க வேண்டும் என்ற கோரிக்கையும் வலுத்து வருகிறது.

இந்நிலையில் நாடாளுமன்ற தேர்தலை எந்த நேரத்திலும் சந்திக்க பாரதய ஜனதா தயாராக இருப்பதாக அக்கட்சி தெரிவித்துள்ளது.

பிரதம வேட்பாளர் யார் என்பது குறித்து முக்கிய ஆலோசனை நடத்திய பின்னரே அறிவிக்கப்படும் என்றும் அக்கட்சி தெரிவித்துள்ளது. மேலும் இந்தக் கூட்டத்தில் நாட்டின் நிதி நிலைமை குறித்து முக்கிய ஆலோசனை நடைபெற்றும் என்றும் தெரிகிறது. (அ-2)

## மியன்மாருடன் பொருளாதார ஒத்துழைப்பு

### மத்திய அமைச்சர் ஆனந்த்

மியன்மாருடன் உடுபுடைவை, உட்கட்டமைப்பு, எண்ணெய், எரிவாயு உள்ளிட்ட துறைகளில் பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்த திட்டமிட்டுள்ளதாக மத்திய அமைச்சர் ஆனந்த் சர்மா தெரிவித்தார்.

மூன்று நாட்கள் சுற்றுப்பயணமாக மியன்மார் சென்றுள்ள மத்திய வர்த்தக அமைச்சர் ஆனந்த் சர்மா, அந்நாட்டு எரிசக்தித் துறை அமைச்சர் யு.தன் டேயை நேற்று முன்தினம் சந்தித்தார்.

இந்த சந்திப்பின்போது இரு நாடுகளிடையேயான பொருளாதார ஒத்துழைப்பை அதிகப்படுத்துவது தரை, வான் மற்றும் நீர் வழிப் போக்குவரத்தை மேம்படுத்துவது ஆகியன குறித்து கலந்தாலோசிக்கப்பட்டன.

மேலும், இந்திய வங்கிகள் மியன்மாரில் தங்கள் சேவைகளைத் தொடங்க விரும்புவதாகவும் ஆனந்த் சர்மா குறிப்பிட்டார்.

இரு தரப்பிலும் எதிர்வரும் 2015ஆம் ஆண்டுக்குள் சுமார் ஆயிரத்து 500 கோடி அளவிலான வர்த்தகம் புரிய திட்டமிட்டுள்ளதாக சர்மா தெரிவித்தார்.

2012ஆம் ஆண்டில் இரு நாடுகளுக்கிடையேயான வர்த்தகம் சுமார் ஆயிரம் கோடி ரூபாவாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தேசிய ஜனநாயக லீக் கட்சித் தலைவர் ஆங் சான் சூகியை சர்மா அன்றைய தினம் சந்தித்தார். அப்போது, மியன்மாரில் உடுபுடைவைத் துறையை மேம்படுத்த இந்தியா உதவ வேண்டும் என்று அமைச்சரிடம் சூச்சி கேட்டுக் கொண்டார். (அ-2)

# வெள்ளைக்கொடி ஏந்தியபடி இலங்கைக்குள் நுழைவோம்

## இந்திய மீனவர்கள் எச்சரிக்கை



(கீழக்கரை)

இலங்கை சிறையில் அடைக்கப்பட்டுள்ள 49 மீனவர்களை எதிர்வரும் 20ஆம் திகதிக்குள் விடுதலை செய்யாவிட்டால் எதிர்வரும் 22ஆம் திகதி வெள்ளைக்கொடி ஏந்திய இலங்கை நோக்கி பயணம் செய்ய மீனவர்கள் முடிவு செய்துள்ளனர்.

இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரத்தில் இருந்து கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற 9 படகுகளையும் 49 மீனவர்களையும் இலங்கை கடற்படையினர் சிறைபிடித்து சென்றனர். 49 மீனவர்களையும் எதிர்வரும் 20ஆம் திகதி வரை சிறையில் அடைக்க இலங்கை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து அனைத்து மீனவர்களும் மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தகவல் அறிந்ததும் இராமேஸ்வரம் அனைத்து மீனவர் சங்க பிரதிநிதிகள் அவசரக் கூட்டம் நேற்று இராமேஸ்வரம் துறைமுக அலுவலகம் அருகில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு மீனவர் சங்கத் தலைவர் என்.ஜே.போஸ் தலைமை வகித்தார். கூட்டத்தில், 49 மீனவர்களையும் வரும் மேற்குறித்த திகதிக்குள் விடுதலை செய்ய வேண்டும்.

இல்லாவிட்டால் இராமேஸ்வரத்தில் உள்ள அனைத்து விசைப் படகுகளும் 22ஆம் திகதி வெள்ளைக்கொடி ஏந்தி இலங்கை நோக்கிப் பயணித்து அங்கு தஞ்சம் அடையும் போராட்டம் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது.

இலங்கை கடற்படையினர் தொடர்ந்து தாக்கி வருவதால் அதிகாலை 6 மணிக்கு பதிலாக மதியம் 2 மணிக்கு மேல் கடல்லுக்கு மீன்பிடிக்க செல்வது என்றும் முடிவு செய்யப்பட்டது. (அ-2)

## நாராயணசாமி மீதான மனுவை தள்ளுபடி செய்தது நீதிமன்று

(மதுரை)

சீமான், பிரபாகரன் பற்றி சர்ச்சைக்குரிய வகையில் மத்திய அமைச்சர் நாராயணசாமி கருத்து தெரிவித்துள்ளதாகவும் அவர் மீதான புகாரில் நடவடிக்கை எடுக்க உத்தரவிடக் கோரியும் தாக்கலான மனுவை மதுரை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

பிரதமர் அலுவலக இணை அமைச்சர் நாராயணசாமி மே 20இல் அறிக்கை வெளியிட்டார். அதில் தீவிரவாதத்தை மறைமுகமாக ஆதரிக்கும் ஒரு கூட்டம் தமிழகம், புதுச்சேரியில் செயற்படுகிறது. தடை செய்யப்பட்ட விடுதலைப்புலிகள் இயக்க தலைவரின் போட்டோவை பிரசுரித்து கடலூரில் கூட்டம் நடத்த சினிமா இயக்குநர் சீமான் அனுமதி கோரினார். தமிழக அரசு அனுமதி மறுத்தது.

சீமான் கூட்டத்தில் காஷ்மீர் பயங்கரவாதி யாசின் மாலிக்கை பேசச் செய்துள்ளனர். தீவிரவாதம், பிரிவினை வாதத்தை தூண்டுபவர்கள் தேசத் துரோகிகள். எங்களைப் பொறுத்த வரை சீமான் போன்றவர்கள் சுண்டைக் காய்கள். இந்தியாவிற்கு எதிராக செயற்படுபவர்களை தூக்கி எறிய வேண்டும் என தெரிவித்துள்ளார்.

இது மக்களிடையே பகை உணர்வை ஏற்படுத்தும் செயல். அமைச்சராக உள்ள ஒருவர் இப்படி கருத்து தெரிவித்திருப்பது ஏற்புடையதல்ல. நாராயணசாமி மீது, வழக்குப் பதிவு செய்யக் கோரி, டி.ஜி.பி.,யிடம் மே 21இல் புகார் செய்தேன். மனு மீது நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் மதுராந்தகத்தில் கருத்துத் தெரிவித்துள்ளார். அது இந்நீதிமன்றின் அதிகார வரம்பிற்குள் வராது. மனு தள்ளுபடி செய்யப்படுகிறது என நீதிபதிகள், என்.பால்வசந்தகுமார், பி.தேவதாஸ் அடங்கிய, பெஞ்ச் உத்தரவிட்டது. (அ-2)

## 2ஜி ஊழல் வழக்கில் பிரதமரை சேர்க்க கோரிய மனு நிராகரிப்பு

(புதுடில்லி)

2ஜி ஊழல் வழக்கில் பிரதமர் மன்மோகன் சிங், முன்னாள் மத்திய அமைச்சர் தயாநிதி மாறன் ஆகியோர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய வேண்டும் என கோரி விவேக் கார்க் என்பவர் டில்லி சி.பி.ஐ. நீதிமன்றில் பொது நல மனுவை தாக்கல் செய்திருந்தார்.

இம்மனுவினை நேற்று விசாரித்த சி.பி.ஐ. நீதிமன்ற நீதிபதி ஓ.பி. சைனி மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

நீதிமன்றத்தின் நேரத்தை வீணடித்து மலிவான விளம்பரத்தை தேடிக்கொள்ள முயற்சித்த மனுதாரர் அதற்கான எந்த ஆதாரங்களையும் வைத்திருக்கவில்லை என்பது உறுதியாக தெரிகிறது.

அதனால், மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்கிறேன். நீதிமன்றின் நேரத்தை வீணடித்ததற்காக 20 ஆயிரம் ரூபா பணத்தை மனுதாரர் இன்னும் ஒரு வாரத்திற்குள் நீதிமன்றிற்கு செலுத்த வேண்டும் என்று உத்தரவிடுகிறேன் என தீர்ப்பில் நீதிபதி கூறினார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரில் நனைந்த நெருப்புக்குச்சி விளக்கேற்ற உதவாது. பாவச் செயல்களைச் செய்தவன் நற்செயல்களுக்கு உதவ மாட்டான். ~ சத்யசாயி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## இந்து ஆலயங்கள் மீது தாக்குதல் தேவலோகத்தில் அவசர மாநாடு

தேவலோகசபையில் நடக்கும் சர்வமத மாநாட்டில் உரையாற்றிய யேசுபிரான் மதமாற்றம் செய்பவர்களை வன்மையாக கண்டித்ததோடு, மதமாற்றத்தில் எவரும் ஈடுபடக்கூடாது என்ற தீர்மானத்தையும் கொண்டு வந்தார். தீர்மானம் சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இதனைத் தொடர்ந்து நபிகள் நாயகம் உரை நிகழ்த்தினார். இலங்கையில் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக வாழ்வதற்கான வழிமுறைகள் கொண்டு வரப்படவேண்டும்.

இலங்கையில் நீதியமைச்சராக ஒரு இஸ்லாமியர் இருக்கும் போது இந்து ஆலயம் தாக்கப்பட்டமை மிகவும் வேதனைக்குரியது.

மட்டக்களப்பில் இந்து ஆலயங்கள் தாக்கப்பட்டமைக்கு தார்மீகப் பொறுப்பேற்று நீதியமைச்சர் ராஜனாமா செய்வது உத்தமமானது.

பேரினவாத சிந்தனைக்கு முடிவுகட்ட வேண்டுமாயின் தமிழ்-முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து தங்கள் பலத்தை வெளிக்காட்டவேண்டும் என்று கூற, அதனை சர்வமதத் தலைவர்களும் கரகோசம் செய்து வரவேற்றனர்.

இப்போது மாநாட்டின் தலைவர் விநாயகர் எழுந்து மாநாட்டின் முடிவுகளை அறிவித்தார்.

மட்டக்களப்பில் இந்து ஆலயங்கள் சேதமாக்கப்பட்மை தொடர்பில் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

ஒரு காலத்தில் இலங்கையை குடியேற்ற வாதத்திற்குள் வைத்திருந்தவர்கள், இங்கு சைவாலயங்களை அழித்து தமது சமயங்களை வலுக்கட்டாயமாகப் புகுத்தினர்.

இதன் விளைவாக இன்று லண்டன் வீதியில் கந்தப்பெருமான் தேரேறி திருவீதியுலா வருகிறார்.

கனக துர்க்கை அம்மன் வாள் கொண்டு பிரித்தானிய மண்ணில் வேட்டையாடுகிறார்.

அன்று இலங்கையில் இந்து ஆலயங்களை அழித்து தேவாலயங்களை நிர்மாணித்தார்கள். ஆனால் இன்று இலங்கையில் இருந்து லண்டன் சென்ற ஈழத்து சைவத்தமிழர்கள் அங்கு தேவாலயங்களை 99 வருடக் குத்தகைக்குப் பெற்று அதனைப் சிவாலயமாக மாற்றி அமைத்துள்ளார்கள்.

இவற்றுக்கான தொடர்புகளை ஆழமாக சிந்தித்தால் அனைத்தும் நியூட்டனின் மூன்றாம் விதியின் பாற்பட்தை பூலோகத்தவர்கள் உணர முடியும்.

இப்போது கூட, இலங்கையில் சிவாலயங்களை அழிப்பது, மசூதிகளை உடைப்பது, தேவாலயங்களை தாக்குவது என்ற சம்பவங்கள் நடைபெறுகின்றன.

இவற்றிக்கான விளைவுகள் என்ன என்பதை புரியாதவர்கள், அறிவீனமாகச் செய்யும் நாசகாரம்தான் இவை.

இவற்றிற்கு எல்லாம் தக்க தண்டனை வழங்கப்படும்.


ஆலயங்களை சேதப்படுத்துவது யாராக இருந்தாலும் அவர்கள் தாம் செய்த பாவ வினைக்கான தண்டனையை அனுபவிப்பார்கள்.

எந்த வழிபாட்டுத் தலங்கள் தாக்கப்பட்டாலும் அதனை ஒட்டு மொத்தமக்கள் சமூகமும் கண்டிக்க வேண்டும்.

இந்து ஆலயங்கள் தாக்கப்பட்டமைக்கு சர்வதேச இந்துக்குருமார் ஒன்றியம் கண்டனம் தெரிவித்ததை இந்த மாநாடு வரவேற்கிறது.

இந்து ஆலயங்கள் மீது தாக்குதல் நடத்தியவர்கள், அதற்கு துணைநின்றவர்கள் மீது உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்று விநாயகர் அறிவிக்க, நந்திதேவர் நன்றி கூற மாநாடு நிறைவு பெற்றது.

# ஸ்ரீஸ்ரீ அம்மா பகவான் திருக்கல்யாண தினம்



ஓம் சச்சிதானந்த பரப்ரம்மா
புருஷோத்தம பரமாத்மா
ஸ்ரீபகவதி சமேத
ஸ்ரீபகவதே நமஹ

அவதார மூர்த்திகளான ஸ்ரீ பகவான் பத்மாவதி அம்மாவின் லோக கல்யாண மஹோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

மானிட வாழ்வில் மாங்கல்யதாரணம் ஒரு புனித சடங்காக உள்ளது. ஒற்றுமை அல்லது ஒன்றான உணர்வைக் குறிக்கின்றது. கணவன்-மனைவி தனித்தன்மையுடன் இருப்பினும் அவர்களின் ஆன்மாக்கள் ஒன்றாகிவிட்டன என்பதே இதன் பொருளாகும்.

பிரம்மமுடி அல்லது பிரம்மபந்தம் திருமணச் சடங்கில் போடப்படும் முடிச்சுக்கள். இதை சிவனும் சக்தியும் அல்லது புருஷனும் ப்ரக்ருதியும் ஒன்று சேருதல் என வர்ணிக்கப்படுகிறது. சப்தபதி என்பது திருமணத்தில் எடுத்துக்கொள்ளப்படும் ஏழு உறுதி மொழியாம். அவையாவன, உறுதி, முன்னேற்றம், சந்ததி, ஆயுள், மோட்சம், பாதுகாப்பு, தியாகம் என்பனவாம்.

நாம் ஒருவரே என ஒப்பந்தம் செய்வதாக பகவான் கூறுகின்றார். இரண்டாகப்பிரிந்த ஆன்மாக்கள் ஒரே இடத்தை நோக்கி மேற்கொள்ளும் பயணமே திருமணம். வாழ்க்கையில் இருவரும் நெருக்கமாக, அந்நியோன்யமாக இருக்கமுடியும். நீங்கள் யார்! உங்கள் உறவு முறைகளில் தான் பார்க்கமுடியும். இதற்கு வாழ்க்கைத் துணைவியைவிட சிறந்த ஓர் உறவு முறை வேறெதுவாக இருக்கமுடியும்? இப்போதுதான் உங்களை நீங்கள் உன்னிப்பாகக் கவனித்து சீர்செய்து கொள்ளமுடியும்.

உறவு முறைகளைச் சீர்செய்வதில் மனத்தடைகள், சமூகத்தால் உருவான நிபந்தனைகள், வேறு நிர்ப் பந்தங்களும் கட்டுப்படுத்தப்படுகின்றன. இந்த உறவு முறைகளைச் சீர் செய்து கொண்டால் உங்களை நீங்களே சரி செய்வது போலாகும்.

உங்களது ஆன்மீக வளர்ச்சிக்கு இதுவே சிறந்தது
உங்களை நீங்களே அறிகின்றீர்கள்.

ஸ்ரீஸ்ரீ அம்மா பகவானின் லோக கல்யாண நன்னாளில் விண்ணவர்கள் எல்லோரும் மண்ணுலகிற்கு வருவார்கள். கல்யாண மஹோற்சவத்தை மனங்குளிரப் பார்த்து பூ மழை பொழிவார்கள்.

மக்களாகிய நாம் இந்த வைப வத்தில் கலந்து கொள்வது முற்பிறவியின் நல்வினைப்பயனும் இப்பிறவி யின் கர்ம விமோசனமும் ஆகும்.

ஸ்ரீஅம்மா பகவான்
சற்சங்கங்களின் ஒன்றியம்,
யாழ்.மாவட்டம்

## இயேசுநாதரின் சொரூபம் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்

யாழ்ப்பாணம் மணியந்தோட்டப் பகுதியில் 5ஆம் ஒழுங்கையில் உள்ள இயேசுநாதரின் சொரூபம் இனந்தெரியாத நபர்களினால் உடைக்கப்பட்டுள்ளது.

கடந்த 5-ம் திகதி இரவு வேளையில் இனந்தெரியாத நபர்கள் கற்களை வீசி இச்சொரூபத்தை தாக்கியுள்ளனர்.

இதனால் குறித்த சொரூபத்தின் தலைப்பகுதி உடைந்து விழுந்துள்ளது. உடைந்து விழுந்த சிலையை துண்டு துண்டாக உடைத்தும் உள்ளார்கள்.

இந்த சம்பவம் அப்பகுதி கிறிஸ்தவர்களிடம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இச்சம்பவம் இப்பகுதியில் நடந்த இரண்டாவது சம்பவமாகும். இரண்டு மாதங்களுக்கு முன்னர் இதே பகுதியில் இருந்த மாதா சொரூபமும் உடைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும் (அ-2)

## பனையிலிருந்து வீழ்ந்து குடும்பஸ்தர் காயம்

(கரவெட்டி)

வடமராட்சி பருத்தித்துறைப் பகுதியில் 40 அடி உயரமான பனைமரத்தில் இருந்து தவறிவிழுந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக்காலை 8 மணிக்கு இடம் பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் வல்வெட்டித்துறை உடுப்பிட்டிபகுதியை சேர்ந்த செ.தயாபரன் (வயது 42) என்ற இளம் குடும்பஸ்தரே இவ்வாறு படுகாயமடைந்து சிகிச்சைக்கான பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (செ-3,24)

## தங்கக்கட்டிகளுடன் அமெ.பிரஜை கைது

அமெரிக்க பிரஜை ஒருவர் 25 இலட்சம் பெறுமதியான தங்கக்கட்டிகளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து நேற்று முன்தினம் கைதான குறித்த நபரிடம் இருந்து 126 தங்கக்கட்டிகள் கைப்பற்றப்பட்டதாக சுங்கப்பிரிவு தெரிவித்துள்ளது.

சிங்கப்பூரில் இருந்து இலங்கைக்கு வருகை தந்த அமெரிக்கப் பிரஜை ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (அ-2)

## விவேகானந்தரின் 150-வது ஜனனவிழா

(யாழ்ப்பாணம்)

சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது பிறந்த ஆண்டு விழா உரும்பிராய் இராமகிருஷ்ணமிஷன் நலன்புரி நிலையத்தினரால் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் நண்பகல் 12மணி வரை மேற்படி நிலைய பிரார்த்தனை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆன்மீக உரையினை சுவாமி ஆத்மகனானந்தஜி மகராஜ், சுவாமி விவேகானந்தர் பற்றிய தகவல்களை கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தொண்டர் அ.ஹரிஷனும் நிகழ்த்தவுள்ளனர். (செ)

## பொன்விழா மலர் வெளியீடும் பாடல் இறுவெட்டு வெளியீடும்

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் உள்ள மு/யோகபுரம் மகாவித்தியாலயத்தின் பொன்விழா மலர் வெளியீடும் பாடல் இறுவெட்டு வெளியீடும் எதிர்வரும் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு வித்தியாலயத்தின் ஒன்றுகூடல் மண்டபத்தில் வித்தியாலய அதிபர் த.யோகானந்த ராஜா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் கலந்து கொண்டு சிறப்பிப்பதுடன் பொன்விழா மலரையும் வெளியிட்டு வைக்கவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக துணுக்காய் வலயக் கல்வி பணிப்பாளர் திருமதி எல். மாலினி வெனிற்றன், துணுக்காய் பிரதேச செயலார் எஸ். குணபாலன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ். செல்வராசா, துணுக்காய் பிரதேச இராணுவ பொறுப்பதிகாரி லெப்டினன்ட் கேணல் விஜயநாயக்கா ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-3-15)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்


## தவறுகளை திருத்திக்கொள்



- ஒழுக்கத்தை அதிகம் வலியுறுத்தியதோடு அதைக் கடைப்பிடித்தவர்களில் புத்தருக்கு இணையான ஒருவரை உலகம் இதுவரை காணமுடியவில்லை.
- ஆயிரம் முறை இடறி விழுவதன்மூலம் நல்ல ஒழுக்கத்தை உறுதியாகப் பின்பற்றி நடக்கமுடியும்.
- ஆன்மீகம் என்பது அனுபவித்து அறியும் விடயமே தவிர வெறும் பேச்சன்று.
- இரும்பைப் போன்ற மனவுறுதியும் மலைகளைத் துளைத்துச் செல்லும் வலிமையும் வந்துவிட்டால் கடலையும் கடக்கமுடியும்.
- அறிவு வளர்ச்சிக்கு ஒரேயொரு வழிமுறைதான் இருக்கிறது. அதுதான் நம்முடைய மனதை ஒருமுகப்படுத்துவதாகும்.
- அன்பில்லாதவன் பெற்ற உலகியல் அறிவும் ஆன்மீக ஞானமும் பயனற்றது. அவனால் கடவுளை ஒருபோதும் அடையமுடியாது.
- நான் கெட்ட செயலைச் செய்துவிட்டேன் என்று வருந்துவதைக் காட்டிலும் அதைத் திருத்திக்கொள்வதே மேலான செயல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனிவாசன் முற்றாக ஒதுங்கினார்;



டால்மியா

## இடைக்காலத் தலைவர் டால்மியா தலைமையில் 10ஆம் திகதி அவசர கூட்டம்

ராஜஸ்தான் வீரர்களுடன் ஆரம்பமாகிய சூதாட்டம் தரகர்கள், திரையுலக வட்டாரங்கள், கிரிக்கெட் சபை உறுப்பினர்கள் என பல்கிப் பெருகி தற்போது ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் உரிமையாளரும் சூதாட்டத்தில் ஈடுபட்டுள்ள நிலையில், இந்தியக் கிரிக்கெட் சபையின் அவசர செயற்குழுக் கூட்டம் 10 ஆம் திகதி டில்லியில் நடைபெறுகிறது.

சூதாட்ட சர்ச்சையினால் இந்திய கிரிக்கெட் சபையின் தலைவர் சீனிவாசன் ஒதுங்க சபையினுடைய இடைக்கால தலைவர் ஜக்மோகன் டால்மியா கொல்கத்தாவில் நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர்களைச் சந்தித்தார். இதன் போது அவர் கருத்துவெளியிடும் போது,

ஐ.பி.எல். சூதாட்டத்தில் ஈடுபட்டதாக டில்லி பொலிசாரிடம் ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ள ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் உரிமையாளர்களில் ஒருவரான ராஜ் குந்த்ரா விவகாரம் குறித்து செயற்குழுவில் விவாதிக்கப்படும்.

இந்த விடயத்தில் கடினமான நடவடிக்கை எடுக்க தேவைப்பட்டால் அது குறித்து பரிசீலனை செய்வோம். ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி மீதான பிரச்சினை தற்போது தான் தொடங்கி இருக்கிறது. முழு தகவல்களும் கிடைக்கும் முன்பு எந்த முடிவுக்கும் வர முடியாது. இதுவரை, ராஜ் குந்த்ரா தான் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக தகவல் கிடைத்து இருக்கிறது.

போதிய ஆதாரங்கள் கிடைத்த பின்னர் தான் கிரிக்கெட் சபை அணி மீது நடவடிக்கை எடுக்கும். சூதாட்ட பிரச்சினை காரணமாக ஐ.பி.எல். போட்டியை நிறுத்தும் எண்ணம் எதுவும் எங்களுக்கு இல்லை.

இந்திய கிரிக்கெட் சபையின் செயலாளர் பதவியில் இருந்து சஞ்சய் ஜக்தாலே விலகியதை தொடர்ந்து, புதிய செயலாளராக பரோடா கிரிக்கெட் சங்கத்தை சேர்ந்த சஞ்சய் பட்டேல் நியமிக்கப்பட்டுள்ளார். அஜய ஷிர்கேவுக்கு பதிலாக புதிய பொருளாளர் யார் என்பது ஓரிரு நாளில் அறிவிக்கப்படும்.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் கௌவுரவ உறுப்பினர் குருநாத் மெய்யப்பன் மீதான சூதாட்ட பிரச்சினை குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்டுள்ள இரண்டு ஓய்வு பெற்ற நீதிபதிகள் கொண்ட குழு தங்கள் விசாரணையை நடத்துவார்கள். இரண்டு நீதிபதிகள் மீதும் எங்களுக்கு முழு நம்பிக்கை உள்ளது.

அவர்கள் பொறுப்பில் அந்த விடயத்தை விட்டுவிட முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்திய கிரிக்கெட் சபை உறுப்பினர்கள் யாரும் இந்த குழுவில் இடம்பெறமாட்டார்கள். ஆணிவேர் வரை சென்று முழு விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். எனவே விசாரணை கமிஷன் அறிக்கையை தாக்கல் செய்ய காலக்கெடு எதுவும் நிர்ணயிக்கவில்லை.

ரித்தி ஸ்போர்ட்ஸ் நிறுவனத்தில் அணித் தலைவர் டோனி பங்குதாரராக உள்ளதாக பத்திரிகைகளில் செய்தி பார்த்தேன். தற்போது சம்பியன்ஸ் கிண்ணம் போட்டி நடந்து கொண்டிருக்கிறது. அது முடிந்த பின்னர் இந்த விவகாரம் குறித்து முடிவு செய்யப்படும். அதுவரை பொறுத்து இருங்கள் இவ்வாறு அவர் கூறினார்.

## அதிகம் சம்பாதிக்கும் விளையாட்டு வீரர்கள் வரிசையில் தோனிக்கு 16ஆவது இடம்



உலகில் அதிகம் சம்பாதிக்கும் விளையாட்டு வீரர்களின் பட்டியலில் இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் தோனி 16ஆவது இடத்தில் உள்ளார். ஒப்பந்தங்கள் அடிப்படையிலான பரிசுத் தொகையாக 2012- 13ம் ஆண்டில் இவர் ரூ.180 கோடி வருமானம் ஈட்டி உள்ளார்.

உலகில் அதிகம் சம்பாதிக்கும் விளையாட்டு வீரர்களின் பட்டியலை அமெரிக்காவின் / போர்பஸ் பத்திரிக்கை வெளியிட்டுள்ளது. இதில் 31 வயதாகும் தோனி ரூ.180 கோடி (31.5 மில்லியன் டாலர்) வருமானமாக பெற்றுள்ளார். அதிகம் சம்பாதிக்கும் வீரர்கள் பட்டியலில் கோல்ஃப் வீரர் டைகர்வுட்ஸ் முதல் இடத்தில் உள்ளார். இவர் சம்பாதித்த தொகை ரூ.444 கோடிகளாகும். இவரைத் தொடர்ந்து டென்னிஸ் வீரர் ரோஜர் பெடரர் ரூ.406 கோடிகளுடன் 2 ஆவது இடத்தில் உள்ளார். அமெரிக்க கூடைப் பந்து வீரர் கோப் பிரையண்ட் ரூ.347 கோடிகளுடன் 3ஆவது இடத்தில் உள்ளார்.

அதிகம் சம்பாதிக்கும் வீரர்கள் பட்டியலில் சச்சின் டெண்டுல்கர் 2012இல் ரூ.125 கோடி சம்பாதித்து 51ஆவது இடத்தில் இருந்தார். இந்த ஆண்டு சச்சினை தோனி பின்னுக்கு தள்ளி 16ஆவது இடத்தை பிடித்துள்ளார். இந்த வீரர்கள் பட்டியலில் தோனியை தொடர்ந்து பெராரியின் ஃபார்முலா ஒன் கார் பந்தய வீரர் பெர்னாண்டோ அலன்சோ 19ஆவது இடத்திலும், வடக்கு அயர்லாந்தின் கோல்ஃப் வீரர் ரோரி மெக்லோரி 21ஆவது இடத்திலும், லீவிஸ் ஹாமிள்டன் 26ஆவது இடத்திலும், நோவாக் ஜோகோவிக் 28ஆவது இடத்திலும், ரஃபேல் நடால் 30ஆவது இடத்திலும், உசைன் போல்ட் 40ஆவது இடத்திலும் உள்ளனர். 100 வீரர்களை கொண்ட இந்த பட்டியலில் 3 பெண்கள் மட்டுமே இடம் பெற்றுள்ளனர். இவர்களில் டெனிஸ் வீராங்கனை மரியா ஷரப்போவா 29 மில்லியன் டாலர்களுடன் 22ஆவது இடத்தில் உள்ளார். அதிகம் சம்பாதிக்கும் வீராங்கனைகளில் இவர் முதலிடத்தில் உள்ளார். செரினா வில்லியம்ஸ் 68ஆவது இடத்தில் உள்ளார்.

## காற்பந்து தரப்பட்டியல்


உலக காற்பந்து அணிகளின் தர வரிசைப்பட்டியலை சர்வதேச காற்பந்து சம்மேளனம் வெளியிட்டுள்ளது. இதன்படி ஸ்பெயின் அணி முதலிடமும், ஜேர்மனி அணி 2ஆவது இடமும், அர்ஜென்டினா அணி 3ஆவது இடமும், குரேஷியா 4ஆவது இடமும் பிடித்தன. 5 முறை உலக சாம்பியனான பிரேசில் அணி சமீபத்தில் சர்வதேச போட்டியில் சிறப்பாக செயல்படாததால் இடங்கள் பின்தங்கி 22ஆவது இடத்துக்குள் தள்ளப்பட்டுள்ளது. பெல்ஜியம் (12ஆவது இடம்), போஸ்னியா (15ஆவது இடம்) மாலி (23ஆவது இடம்), அல்பானியா (38ஆவது இடம்) அணிகள் உயர்ந்த தர வரிசையை பெற்று இருக்கின்றன. இந்திய அணி 147ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

டென்னிஸ் அரங்கில் 17 பட்டங்களை குவித்துள்ள சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், (வயது 31). தரவரிசைப்பட்டியலில் 3ஆவது இடத்தில் உள்ளார். இவர் தன் அனுபவங்களை பகிர்ந்துகொள்ள 'டுவிட்டரில்' இணைந்துள்ளார்.

சமூக இணையதளமான 'பேஸ்புக்கில்' சுமார் ஒரு கோடிக்கும் மேல் ரசிகர்களை கொண்டுள்ள பெடரர், நீண்ட நாட்களாக 'டுவிட்டரில்' இணையவில்லை. இந்த மாதம் 'டுவிட்டரில்' இவர் இணைந்த சில மணி நேரத்தில் 72,000 ரசிகர்கள் இவரை பின்பற்ற தொடங்கினர். தற்போது 2,47,524 ரசிகர்களை கொண்டுள்ளார்.

பெடரர் கூறுகையில்,டுவிட்டரில் இணைந்துள்ளது, ரசிகர்களுடன் இணைந்துள்ளதை போன்ற புதிய அனுபவத்தை அளித்துள்ளது. சில காரணத்தினால் முதலில் இதில் இணைய தயங்கினேன். தற்போது இதை நீண்ட நாட்கள் பயன்படுத்த வேண்டும் என்ற விருப்பம் ஏற்பட்டுள்ளது என்றார்.

## பெடரருக்கு அதிக ரசிகர்கள்



## இன்று டெனிஸ் இறுதிப் போட்டி

பரிஸ் நகரில் நடைபெற்று வரும் பிரெஞ்ச் ஓபன் அரையிறுதி ஆட்டத்தில், அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ் வெற்றி பெற்று இறுதிக்கு தகுதி பெற்றார்.

இதன் மூலம், இன்று நடைபெற உள்ள பிரெஞ்ச ஓபன் மகளிர் ஒற்றையர் இறுதிப் போட்டியில், மரியா ஷரபோவாவை, செரினா வில்லியம்ஸ் எதிர்கொள்கிறார்.

## இடைக்கால அறிக்கையை பெற்றது இந்திய கிரி.சபை

ஐ.பி.எல். சூதாட்டம் சர்ச்சை குறித்து, இந்திய கிரிக்கெட் சபையின் ஊழல் தடுப்பு அதிகாரி ஆர்.என்.சவானி தனியாக விசாரணை நடத்தி வருகிறார். அவர் தனது இடைக்கால விசாரணை அறிக்கையை இந்திய கிரிக்கெட் சபையிடம் சமர்ப்பித்துள்ளார்.

ஆனால் கைது செய்யப்பட்ட வீரர்கள் ஸ்ரீசாந், சண்டிலா, அங்கீத் சவான் ஆகியோரிடம் அவர் எந்த வாக்குமூலத்தையும் பெற முடியவில்லை. இதேபோல் டில்லி பொலிசாரிடம் இருந்தும் அவர் போதுமான ஆதாரங்களை சேகரிக்கவில்லை. எனவே அவரது இறுதி அறிக்கைக்காக கிரிக்கெட் சபை காத்திருக்கிறது.

### உன்னிப்பாக வீரர்களை கண்காணிக்க

## ஊழல் தடுப்பு அதிகாரிகள் முடிவு


ஐ.பி.எல். கிரிக்கெட் சூதாட்டம் தொடர்பாக ஸ்ரீசாந்த் உட்பட மூன்று ராஜஸ்தான் ரோயல்ஸ் வீரர்கள் கைது செய்யப்பட்ட சூடு அடங்குவதற்குள் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக பங்களாதேஷ் முன்னாள் தலைவர் அஸ்ரபுல் மீது குற்றச்சாட்டுக்கள் பதியப்பட்டுள்ளன. இதையடுத்து சம்பியன்ஸ் கிண்ணக் கிரிக்கெட்டில் வீரர்களின் நடத்தையை உன்னிப்பாக கண்காணிக்க சர்வதேச கிரிக்கெட் சபையின் ஊழல் தடுப்பு பிரிவு அதிகாரிகள் முடிவு செய்து உள்ளனர். இதன்படி ஹொட்டலில் வீரர்களின் நடத்தை தீவிரமாக கண்காணிக்கப்படும்.

மேலும் சில கட்டுப்பாடுகளும் அவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ளன. போட்டியில் விளையாடுவதற்காக தங்கியிருக்கும் ஹொட்டலில் இருந்து பயிற்சியாளருடன் மைதானத்திற்கு பஸ்சில் புறப்படும்போது, வீரர்கள் தங்களது கைபேசிகளை களை ஒப்படைக்கவேண்டும் என பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னிப் பெரும் போர்








வன்னியின் பெரும் சமர் என அழைக்கப்படும் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மற்றும் கிளிநொச்சி மகா வித்தியாலயம் ஆகிய அணிகளுக்கிடையிலான வன்னியின் பெரும் சமர் கிரிக்கெட்போட்டி நேற்று புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானத்தில் கோலாகலமாக ஆரம்பமானது.

1.00 மணிக்கு ஆரம்பமான போட்டியில் பிரதம அதீதியாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் மற்றும் முல்லை வலயக் கல்விப்பணிப்பாளர் ராஜ்குமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# மே.தீவுகள் வெற்றி



பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி இறுதியில் 2 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் ஐ.சி.சி சம்பியன்ஸ் தொடரின் இரண்டாவது போட்டி லண்டன் கென்னிங்டன் ஓவல் மைதானத்தில் நேற்று நடந்தது.

இப்போட்டியில் குழு பி ஐச் சேர்ந்த பாகிஸ்தான் - மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடக்களமிறங்கிய பாகிஸ்தான் அணிக்கு தொடக்கத்திலேயே அதிர்ச்சி காத்திருந்தது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகக்களமிறங்கிய இம்ரான் பர்காத் 2 ஓட்டங்களுடன் கேமர் ரோச்சின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

அதன்பின் வந்த வீரர்களும் அடுத்தடுத்து ஆட்டமிழக்க ஒரு கட்டத்தில அவ்வணி 6.1 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 15 ஓட்டங்களைப் பெற்று தடுமாறியது

எனினும் அதன் பின்னர் இணைந்த நசீர் ஜாம்செட் - அணித் தலைவர் மிஸ்பா உல் ஹக ஜோடியின் 4-வது விக்கெட இணைப்பாட்டத்தின்மூலம் அந்த அணி 48 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 170 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பாக மிஸ்பா உல் ஹக், நசீர் ஜாம்செட் இருவரும் முறையே 96, 50 ஓட்டங்களை எடுத்தனர்

பந்துவீச்சில் மேற்கிந்தியத்தீவுகள் சார்பாக கேமர் ரோச் 28 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

171 என்ற இலகுவான வெற்றியிலக்குடன் தனது துடுப்பாட்டத்தை ஆரம்பித்த மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு பாகிஸ்தான் வீரர்களின பந்துவீச்சு சோதனையைக் கொடுத்தது.

எனினும் அவ்வணி இறுதியில் தனது வெற்றியிலக்கை 41.4 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 2 விக்கெட்டுக்களால் அடைந்து கொண்டது. துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பாக கிறிஸ் ஹெயில் அதிகபட்சமாக 39 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக மொகமட் இர்பான் 32 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

போட்டியின் சிறப்பாட்டக்காராக மேற்கிந்தியத் தீவுகளின் வெற்றிக்கு சிம்மாசொப்பனமாக திகழ்ந்த கேமர் ரோச் தெரிவானார்.

இவ்வெற்றியின் மூலம் மேற்கிந்தியத் தீவுகள் அணி 2 புள்ளிகளைப் பெற்றுக் கொண்டது. தொடரின் 3-வது போட்டியில் குழு ஏயைச் சேர்ந்த இங்கிலாந்து - அவுஸ்திரேலிய அணிகள் பேர்மிங்ஹாமில் இன்று பலப்பரீட்சை நடத்துகின்றன.

## சுயாதீன ஆணைக்குழு...

சரிக்கை விடுத்தார்.

இது குறித்து அவர்மேலும் தெரிவிக்கையில்,

வட மாகாண சபைத்தேர்தல் எதிர்வரும் செப்டெம்பரில் இடம்பெறும் என அரசாங்கம் அறிவித்த நிலையில், அங்கு சுயாதீனமான தேர்தல் ஒன்று இடம்பெற வேண்டுமானால் அரசாங்கம் பொலிஸ், தேர்தல் மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்களைஅங்குநிறுவவேண்டும்.

குறித்த தோதலை வடக்கு மக்கள் மாத்திரம் அல்ல அனைத்து மக்களும் எதிர்பார்த்துள்ளனர். வடக்கு மக்களின் நம்பிக்கைக்கு ஏற்ற வகையில் 'நீதியான முறையில் தேர்தலை மேற்கொள்ள வேண்டும். இதில் ஏதேனும் குளறுபடி கள் இடம்பெற்றால் எமது நாட்டுக்குத்தான் அவப்பெயர் உண்டாகும்.

இந்நிலையில்வெளிநாட்டு தேர்தல் கண்காணிப்பாளர்களை இதில் ஈடுபடுத்த அரசாங்கம்அனுமதிக்கவேண்டும்.

வடக்கில் சிவில் நிர்வாகத்தை முதலில் ஏற்படுத்த வேண்டும். அதற்கு ஏற்ற வகையில் அங்கு ஆளுநர் ஒருவர் சிவில் பிரஜையாக நியமிக்கப்பட வேண்டும்.

இவற்றைத்தான் சர்வதேசதிற்கும் கற்றுக் கொண்ட பாடங்கள்மற்றும்நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையிலும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார்.

இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படாது விட்டால், நாம் எதிர்வரும் நவம்பரில் இலங்கையில் இடம்பெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்ள இருக்கும் சர்வதேச பரதிநிதிகளிடம் தெளிவாகவலியுறுத்தவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-11)

## தீர்வுக்கான 'மந்...

செய்துதர இந்தியா தயாராக உள்ளதாகவும் ஆனால்அரசியல் பிரச்சினைகளில் தலையிட்டு தீர்க்க முடியாது என்றும் கூறியுள்ளார்.

இந்தியாவிடம் அப்படிப்பட்ட மந்திரகோல் ஒன்றும் கிடையாது என்றும் அவர்தெரிவித்துள்ளதாக அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆறு உறுப்பினர்களை கொண்ட இந்தியக்குழு வடகிலுள்ள அரசு பிரதிநிதிகள், எதிர்க்கட்சி உறுப்பினர்கள், படைத்தரப்பினர், சமூகக் குழுக்களின் உறுப்பினர்கள் என பல தரப்பையும் சந்தித்து பல தரப்பட்ட நிலைப்பாடுகளை தெரிந்து கொண்டனர்.

இந்தியா எப்போதும் ஈழத்தமிழர்கள் விடயத்தில் அக்கறை கொண்டு தான் உள்ளது எனவும் அவர்கள் வடக்கு மக்களிடம் தெரிவத்ததாக இந்திய ஊடகங்கள்செயதி வெளியிட்டிருந்தன. (செ-11)

## குடும்பஸ்...

சேர்ந்த கணபதி இராசேந்திரகுமார் (வயது 37)என்பவரே படுகாய மடைந்திருந்து உயிரிழந்தவராவார்.

படுகாயமடைந்த குறித்த நபர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில்நேற்று காலை 4.30 மணியளவில் சிகிச்சை பலன்இன்றி உயிரிழந்துள்ளார்.

பிரேதப்பரிசோதனையின் பின் சடலமானது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (செ-6,11)

## பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு நிதியுதவி வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

பாதிக்கப்பட்ட யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கான ஆளுநரின் விசேட நிதியுதவி வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 11-ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ். வீரசிங்கம் கேட்போர் கூடத்தில் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் உதவித்தொகையை பெறவுள்ள மாணவர்களின் விபரங்கள் யாழ்.பல்கலைக்கழகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதுடன் பதிவாளர் அலுவலகத்திலும் விபரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

எனவே நிதிஉதவி பெறும் மாணவர்கள் அனைவரும் குறிப்பிட்ட நேரத்திற்கு தவறாது சமூகமளிக்குமாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் கேட்டுள்ளார். (செ)

## ஐ.நா.குழு...

கொள்ளப்போவதாக இலங்கை நதவான் கிறிஸ் பின்டோ தெரிவித்துள்ளார்.

பிலிப்பைன்ஸ் நாட்டைச் சோந்த பெண் ஒருவரை திருமணம் செய்து கொண்டுள்ளதனால் இந்த விசாரணைகளில் பங்கேற்க முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, பின்டோவின் பதவி விலகல் விசாரணைகளை பாதிக்காது என ஐக்கிய நாடுகள் அமைப்பு அறிவித்துள்ளது. (செ-11)

## 15 கிலோ...

பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் குண்டை மீட்டதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றப்புலனாய்வு பொறுப்பதிகாரி எஸ்.மங்களதெரிவித்தார்.

இது தொடர்பில்பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக காத்தான்குடிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (செ-11)

## லோகினியின்...

தியினருக்கு அமெரிக்கா, பின்லாந்து, சுவீடன் உள்ளிட்ட சில நாடுகளில் புகலிடம் வழங்கப்பட்டுள்ளது.

எனினும், லோகினி உள்ளிட்ட 15 தமிழ் புகலிடக் கோரிக்கையாளார்கள் டுபாயின் ஜபல் அலி துறைமுகத்தின் அலுமினிய கைத்தொழிற்சாலையொன்றின் ஓர் அறையில் தொடர்ந்தும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் புகலிட அந்தஸ்து குறித்து இதுவரையில் தெளிவான அறிவிப்புக்கள் விடுக்கப்படவில்லை.

இந்தப் புகலிடக் கோரிக்கையாளர்கள் நாடு கடத்தப்படக் கூடிய அபாயம் காணப்படுவதாக தகவல்கள் வெளியாகியிருந்தன. எனினும், குறித்த புகலிடக் கோரிக்கையாளர்கள் பலவந்தமான முறையில் நாடு கடத்தப்படக் கூடிய அபாயம் கிடையாது என ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கான அகதிகள் முகவர்நிறுவனம் தெரிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தொலைக்காட்சி நிலையமொன்றில் லோகினி கடமையாற்றியதாக அவரை நாடு கடத்துவது ஆபத்தாகலாம் எனவும் ஊடகவியலாளர்களை பாது காக்கும் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. (செ-11)

# உடனடித் தீர்வு...

இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்டுள்ள இந்திய ராஜ்ய சபாவின் எதிர்க்கட்சி பிரதித் தலைவர் ரவிஷங்கா பிரசாத் தலைமையிலான இந்திய தூதுக் குழுவினர், நேற்று பிற்பகல் அலரிமாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்தனர்.

இந்த சந்திப்பின் போது இலங்கையின் ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையும் விட்டுக்கொடுக்க முடியாது என இந்திய ராஜ்யசபா எதிர்க்கட்சி பிரதித் தலைவர் ரவிஷங்கர் பிரசாத் தெரிவித்தார். இதற்கு பதிலளிக்கும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டியமைக்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை பாராட்டிய இந்திய தூதுக் குழுவினர், யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தங்களுக்கு திருபதியளிக்கும் வகையில் இருந்ததாகவும் அதனை தமது விஜயத்தின் போது நேரில் கண்டதாகவும் தெரிவித்தனர்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை மிகச்சிறந்த ஒரு முன்னெடுப்பு எனக்குறிப்பிட்ட அவாகள் அது மிகச் சிறப்பாக எழுதப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தனர்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகள் குறித்து கருத்துத் தெரிவத்த தூதுக்குழுவினர், இலங்கையின் உள்விவகாரங்கள் சில சமயங்களில் இந்தியாவிலும் தாக்கத்தைக் கொண்டிருப்பதாகத் தெரிவித்தனர். இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவு அரசாங்கம், அரசியல் என்பவற்றைக் கடந்தது எனத் தெரிவித்த பிரசாத் அது ஒரு மானசீகமான உறவு என்றும் குறிப்பிட்டார்.

மீனவர்கள் எதிர்நோக்கும் சவால்கள், வடக்கு, கிழக்கிற்கு ஓர் அரசியல் தீர்வைக் காண்பதற்கான நாடாளுமன்ற தெரிவுக்குழு உள்ளிட்ட பல்வேறு இருதரப்பு நலன்சார்ந்த விடயங்கள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டன.

இதற்கு பதிலளித்த ஜனாதிபதி, எல்லோரையும் உள்ளடக்கிய ஓர் அரசியல் தீர்வுக்கு எல்லா அரசியல் கட்சிகளும் ஒன்றிணைய வேண்டியது அவசியம் எனத் தெரிவித்தார்.

அத்துடன், நாம்ஒருதீர்வை உடனடியாக வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்ய முடியாது என்றும் அது ஒரு ராஜபக்ஷ - சம்பந்தன் உடன்படிக்கையாக இருக்க முடியாது என்றும் தெரிவித்தார்.

இவ்வருடம் செப்டம்பரில் நடாத்துவதாக ஜனாதிபதி உறுதியளித்துள்ள வட மாகாண சபைத் தேர்தல் குறித்தும் இந்திய தூதுக்குழுவினர் ஜனாதிபதியிடம் கேட்டறிந்ததாக கூறப்படுகிறது.

இந்த இருதரப்பு சந்திப்பில் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக அமுனுகம மற்றும் ஜனாதிபதியின் ஆலோசகர்கலாநிதி சுனிமல் பெர்னாண்டோ ஆகியோர் கலந்துகொண்டனர். (செ-11)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

காணி விற்பனைக்கு

பண்டத்தரிப்பு கோவில்பற்று, மாரீசன்கூடல், இளவாலை கோணாவளை நிலப்பரப்பு 9 குழி 13 உள்ள நிலம் உடன் விற்பனைக்கு

தொடர்பு:
077 617 6523
(2969)

Deutsch, Dutch, French, English

2013 புதிய வகுப்புகள் விபரம்

ஜேர்மன் - டொச், நெதர்லாந்து - டச்
தூதரக பரீட்சைகளுக்கான புதிய வகுப்புக்கள் அனைத்தும் ஆரம்பமாகி நடைபெறுகின்றன. மேலும் London செல்பவர்களுக்கான ஆங்கிலம் AI, French, Italian வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.
குறிப்பு: திங்கள் முதல் புதிய வகுப்புகளுக்கான பதிவுகள் நடைபெறும்.

தொடர்பு: விவேகானந்தா அக்கடமி
221/1 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
Tel: Hotline, 0774842464/ 021 321 6928 (C-3544)

க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான
வரலாற்றுப் பாட கருத்தரங்கு

இடம்: வீனஸ் கல்வி நிலையம்
2-ம் ஒழுங்கை, கனகபுரம், கிளிநொச்சி.
காலம்: 10/06/2013 திங்கட்கிழமை
நேரம்: மு.ப 9.00 – பி.ப 3.00 மணிவரை

ஆசிரியர்:- S.S.தாஸ் B.A (Hons).Spl
தொடர்புக்கு:- 077 4349 170
அலகு:- பகுதி I படவேலை
(கையேடுகள் வழங்கப்படும்)
(2975)

தேவை

Software-Development மற்றும் பாதுகாப்பு கமரா (CCTV) பொருத்தும் நிறுவனத்திற்கு சந்தைப்படுத்தல் அனுபவம் உள்ளவர்கள் தேவை.
(2972)
தொடர்புக்கு:- Email:-info@aj-sys.lk
075 9237 546 021 567 6767

Organ, Guitar
புல்லாங்குழல் வகுப்புகள்
சினிமாப் பாடல்களுக்கான
Notes விற்பனைக்குண்டு.
கரவீணா இசை மன்றம்
4,செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர். 0777031293
(2823)


# இராணுவச் சிப்பாய்...

சிறுமி மீட்கப்பட்டிருந்தாள்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத் தின்பேரில் இராணுவ சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

பாதிக்கப்பட்ட சிறுமி நேற்று வெள்ளியன்று வவுனியா நீதிமன்றத்தில் நீதவான் முன்னிலையில் சந்தேகநபரை அடையாளம் காட்டியுள்ளார்.

நேற்று நீதிமன்றத்தில் சந்தேக நபர் ஆஜர்படுத்தப்பட்ட போது, பாதிக்கப்பட்ட சிறுமிக்கு தமது ஒத்துழைப் பை வெளிப்படுத்து வதற்காக அங் கிருந்த சட்டத்தரணிகள் அனைவரும் எழுந்து நின்று ஆஜராக முன்வந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மாங்குளம் பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

சிறுமியை பாலியல்பலாத்காரம்செய்தவரை உடன் கைது செய்து சட்டத் தின் முன் நிறுத்த வேண்டும் என்று கோரி அண்மையில் ஆர்ப் பாட்டம் நடத்தப்பட்டது.

சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு நடத்திய அந்த ஆர்ப் பாட்டத்தில், சிறுவர்களுக்கும் பெண்களுக்கும் எதிராக புரியப்படுகின்ற வன்முறைகளுக்கு எதிராக பெருமளவிலானோர் குரல் கொடுத்திருந்தனர். (செ-11)


தையல் பயிற்சி வகுப்புகள்

எஸ்.டி.எஸ்.றெடிமேட் சென்ரரில் தையல் பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்க உள்ளதால் தையல் பழக விரும்புவோர் உடன் வந்து முற்பதிவு செய்துகொள்ளவும். சகலவிதமான தையல் பயிற்சிகளும் நடைபெறும்.
மேலதிக விபரங்களுக்கு : 0772726805
பதிவு இல. 158, எஸ்.டி.எஸ்.றெடிமேட் சென்ரர், டச்சு வீதி, அளவெட்டி மத்தி, அளவெட்டி.
(பொது நூலகத்திற்கு அருகாமை) (2959)

FRENCH LANGUAGE CENTRE
CENTRE FOR FRENCH
FRENCH CLASSES

ஆர்வமுள்ள எவரும் இலகுவாக French யாழில் கற்று International Certificates இனை பெற்றுக் கொள்ளலாம்...
ஆசிரியர் : Mr. V. Jegan (Teaching Training in France - 2007, University இல் பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொள்பவரும்)
இது வரைக்கும் 710 க்கும் மேற்பட்டோர் French கற்றுள்ளனர்...
இவ் வருடத்தின் 7வது பிரிவு விரைவில்..அனுமதி 10 பேர்க்கு..
No. 23, Palaly Road, ஆரியகுளம். (அப்பலோ Hospital முன்பாக).
No. 181, 1st Floor, Main Street, Nelliady. (சோதி வீதி முன்பாக)
0779 789 456 (C-3536)
English, Deutsch, Italian, & Sinhala வகுப்புக்களும்...

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் புதிய கற்கை நெறிகள்

Spoken English With Grammar - Quick Learning Course (1 1/2 Months)
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

Diploma In English (2 Months)
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

IELTS
Toping centre for registering more IELTS candidates in Jaffna
&
Approved centre for IELTS online Registration system for Exam
< We gurantee minimum 6.0 band and above >
Duration: 2 1/2 Months

BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

A1 Exm - Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

Young Learners for English (YLE) [வயதெல்லை : 7 - 12]
இது ஒரு சர்வதேசப் பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்

| Batch - 1 | Batch - 2 | Batch - 3 | Batch - 4 |
| --- | --- | --- | --- |
| 08-06-2013 | 10-06-2013 | 15-06-2013 | 17-06-2013 |

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287.
Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074
(C-3538)

யாழ் நகரில்
CIMA கற்கை நெறியில்
முற்றிலும் மாறுபட்ட அணுகுமுறை
@
KAIMS
We Make You Progress Everyday

புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன..
- Managerial Level
- Operational Level

July 15ம் திகதி முதல்

Colombo
No 35-1/1 Upatissa Road
Colombo 04
அழையுங்கள்
0773722104
JAFFNA
No 3-1/2 Sirambiyadi Lane
Stanley Road
Jaffna
(C-3543)

வெளிநாடுகளுக்கு பொதிகள், ஆவணங்கள் அனுப்பும் முதல்தர சேவை
10 கிலோவிற்கு மேற்பட்ட பொதிகளுக்கு வியப்பூட்டும் விலைக்கழிவுகள்
லண்டன்- 725/- பிரான்ஸ், ஜேர்மன்- 800/- அவுஸ்ரேலியா, டென்மார்க்- 850/- கனடா , சுவீஸ் , நோர்வே- 950/-
5 நாட்களில் உங்கள் இருப்பிடம் தேடி கொடுக்கப்படும்
யாழ், கிளிநொச்சி, முள்ளியவளை, வவுனியாவில்

பிரவீணன் என்ரபிறைசஸ்
35/1, கந்தசாமி கோவில் வீதி,
வவுனியா (C-3537)

பிரணவன் என்ரபிறைசஸ்
365, பருத்தித்துறை வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்

பிரணவன் என்ரபிறைசஸ்
தொண்டமான் நகர்,
கிளிநொச்சி

தொடர்புகளுக்கு-
0773818799


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.06.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.